தமிழகத்தில் இன்று தேர்தல்



பக்.14 - 15

விலை ரூபா 20

பக்கங்கள் 28

# உதயன்

34c - 27c

பரவலான இடி மழை

சுடர் 31 | கதிர் 172 | வள்ளுவர் ஆண்டு 2047 | வைகாசி 03, திங்கட்கிழமை 16.05.2016


## கச்சதீவில் ஆலயம் கட்டும் பணிகள் இடைநிறுத்தம்

### மழையே காரணம் என்கிறது கடற்படை

கொழும்பு, மே 16

கச்சதீவில் இலங்கைக் கடற்படையினரால் இடித்து மீளக் கட்டப்பட்டுவரும், புனித அந்தோனியார் தேவாலயக் கட்டுமானப் பணிகள் இந்திய அரசின் அழுத்தத்தினால் நிறுத்தப்பட்டுள்ளதாக வெளியான செய்தியை இலங்கைக் கடற்படை மறுத்துள்ளது. காலநிலை உட்பட சில காரணங்களுக்காக கட்டுமானப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும், அது விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனவும் கடற்படைப் பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி சர்வதேச ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். பக். 24

## ஒருமித்த நிலைப்பாடற்ற மக்கள் கருத்தறியும் குழு

### அதிகாரப் பகிர்வு விடயத்தில் கூட ஒற்றையாட்சிக்கும் சமஷ்டிக்கும் பரிந்துரை

யாழ்ப்பாணம், மே 16

அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட முக்கியமான விடயங்களில் மக்கள் கருத்தறியும் குழு ஒருமித்த கருத்தைப் பரிந்துரைக்கவில்லை. அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஒற்றையாட்சி, சமஷ்டி ஆகிய இரண்டு விடயங்களையுமே மக்கள் கருத்தறியும் குழு பரிந்துரைந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

கருத்தறியும் குழுவின் உறுப்பினர்கள் வேறுபட்ட நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளமையினாலேயே முக்கியமான விடயங்களில் ஒருமித்த பரிந்துரைகள் முன்வைக்கப்படவில்லையென 'உதயன்' நம்பகமான தகவலிலிருந்து அறிகிறான்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர் பக். 23

## காற்றுடன் மழை இன்று பெய்யும்

யாழ்ப்பாணம், மே 16

வடக்கில் இன்று காற்று, குளிருடன் கூடிய கால நிலை நிலவுவதுடன், மழையும் பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பில் நேற்றுக் காலை நிலைகொண்டிருந்த தாழமுக்கம் நகர்ந்து பக். 25

# நாட்டின் பல பகுதிகளிலும் கொட்டுகின்றது கனமழை

### 2 பேர் உயிரிழப்பு, ஒருவரைக் காணவில்லை பல வீடுகள் சேதம், மக்கள் இடப்பெயர்வு

கொழும்பு, மே 16

தலைநகர் உட்பட நாட்டின் அநேகமான பகுதிகளிலும் நேற்று அதிகாலை தொடக்கம் கடும் மழை பெய்து வருகிறது.

அடைமழை காரணமாக நேற்றிரவு வரை 2 பேர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் காணாமற்போயுள்ளார் என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த அடை மழை காரணமாக கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரத்து 796 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 735 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 43 குடும்பங்களைச் சேர்ந்த 172 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்றும் இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடையிடையே மழை பெய்து வந்த நிலையில், நேற்று பக். 23

> இலங்கைக்கு மேலாகக் காணப்படும் வலுவான தாழமுக்கம் இன்று இந்தியாவை நோக்கி நகர்வதால், கரையோரப் பகுதிகளில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்யும். கடற்பிராந்தியத்தில் காற்றின் வேகம் மணிக்கு 70 – 80 கிலோ மீற்றர் வேகத்தில் வீசுமென்பதால் கடலில் கடும் கொந்தளிப்பு ஏற்படும். எனவே, மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

முச்சந்தி முரளி



அந்தக் குழுவும் குழம்பிப் போய்த்தான் பரிந்துரைத் திருக்குப் பாருங்கோ....

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



பயத்தில் உறைந்த நாள்கள் — படம் - அமரதாஸ்

## வடக்கிலும் கடும் மழை

### பாதிப்புக்கள் இல்லை என்கிறது இடர் முகாமைத்துவ நிலையம்

யாழ்ப்பாணம், மே 16

வடக்கில் சில நாள்களாக மப்பும் மந்தாரமும் நிலவிய நிலையில், நேற்றுப் பிற்பகல் தொடக்கம் வடக்கிலும் கடும் மழை கொட்டித் தீர்த்துள்ளது. மக்கள் பல நாள்களாக வெயிலிலும் வெக்கையிலும் அல்லற்பட்டு வந்த நிலையில், நேற்றைய மழையால் பெரும் நிம்மதி அடைந்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் இவ்வாறு கன மழை பெய்து வருகிறது. கொழும்பில் ஆரம்பித்த மழையால், வடக்கில் நேற்றுக் காலையிலிருந்தே மப்பும் மந்தாரமும் நிலவியதோடு, இடையிடையே சாதாரண மழை பெய்துள்ளது. பக். 24

## வாக்காளர் பதிவு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 16

இந்த ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகவுள்ளதாகத் தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரி பக். 24

## பொலிஸ் அதிகாரத்தைத் தந்தால் வடக்கில் வன்முறைக்கு முடிவு

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 16

முப்படையினர் ஆயிரக் கணக்கில் குவிக்கப்பட்டும் வடக்கில் வாள்வெட்டுக் கலாசாரம் தொடர்கின்றது என்றால், இங்கு ஏதோ ஒன்று நடக்கின்றது. இராணுவத்தினரை வெளியேற்றி பொலிஸ் அதிகாரத்தை மாகாண சபைக்கு வழங்கினால், நாங்கள் கட்டாயம் இந்த வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வருவோம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

கொழும்பு தமிழ் ஊடகத்துக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் வடக்கு முதலமைச்சர் கூறியுள்ளதாவது:-

வடக்கில் இராணுவம் முற்றாக அகற்றப்பட்டு, பொலிஸ் அதிகாரங்கள் எமக்கு வழங்கப்பட்டால், பக். 25

## வற்றாப்பளை அம்மன் ஆலயப் பொங்கலுக்கு தீர்த்தம் எடுத்தல் இன்று

முல்லைத்தீவு, மே 16

வரலாற்றுச் சிறப்புமிக்க முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழாவுக்கான, தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் இடம்பெறவுள்ளது.

கடந்த ஒன்பதாம் திகதி பாக்குத் தெண்டலுடன் ஆரம்பமான இந்த வருடாந்த விழாவில், இன்று திங்கட்கிழமை தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு ஆலயப் பூசகர் தலைமையில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து வற்றாப்பளை அம்மனுக்கு வழமைபோல் பூசைகள் நடைபெறும்.

முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலயத்தின் அம்மன் மண்டபத்தில் இருந்து தீர்த்தக் குடம் எடுத்து முள்ளியவளை பெருந்தெரு வழியாக, வற்றாப்பளை பக். 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி அமைச்சுச் செயலாளரின் அறிவுறுத்தலை மீறி இடமாற்றம்

### தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 16

கல்வி அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தலை மீறி இடமாற்றம் மேற்கொள்ளப்படுவதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றஞ் சுமத்தியுள்ளது.

இது தொடர்பில் சங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த மாதம் கல்வி அமைச்சின் செயலாளரால் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பப்பட்ட கடித அறிவுறுத்தலில், இடமாற்றம் வேண்டாம் என்று கூறப்பட்டிருந்தது.

ஆனால் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர், செயலாளரின் கடிதத்தை உதாசீனம் செய்து கடந்த ஏப்ரல் 12 ஆம் திகதிக்குப் பின்னர் 30 ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கியுள்ளார்.

இந்த இடமாற்றங்களில் சில முறையற்றவை எனப் பொறுப்பு வாய்ந்த பதவியில் உள்ளவர்கள், கல்வி அமைச்சின் செயலாளரிடம் சுட்டிக்காட்டி அவற்றை ரத்துச் செய்யுமாறு கோரிக்கை முன்வைத்துள்ளனர். கோரிக்கையை ஏற்றுக் கொண்ட கல்வி அமைச்சின் செயலாளர் அவற்றை ரத்துச் செய்யுமாறு வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவுறுத்தல் வழங்கியும், வலயக் கல்விப் பணிப்பாளர் அதனையும் ஊதாசீனம் செய்துள்ளார்.

உயர்நிலையில் உள்ள அதிகாரியின் பணிப்பை உதாசீனம் செய்து, முறையற்ற விதத்தில் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்வதே வடக்கு மாகாணக் கல்வி வீழ்ச்சிக்கான காரணம்.

பொருத்தமானவர்களை வட புலக்கல்வித்துறையில் இருந்து வெளியேற்றிப் பொருத்தமில்லாதவர்களை நியமனம் செய்து வடபுலக்கல்வியை அழிப்பதற்கு நாம் தொடர்ந்தும் இடமளிக்க முடியாது-என்றுள்ளது.

(த-ஐ-4)

## கச்சதீவில் புதிய ஆலயம்; தமிழக முதல்வர் எதிர்ப்பு

### நரேந்திர மோடிக்குக் கடிதம்

கொழும்பு, மே 16

கச்சதீவில் புதிதாக தேவாலயம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமர் நரேந்திர மோடிக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழக மீனவர்களின் ஒப்புதல் பெற்ற பின்னரே, கச்சதீவில் புதிய தேவாலயம் அமைக்க வேண்டும் என்றும் அவர் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

கச்சதீவில் கடற்படை முகாம் அமைக்கத் திட்டமிட்டிருப்பதாக இந்திய ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது. அதனைக் கடற்படை ஊடகப் பேச்சாளர் அக்ரம் அலவி மறுத்திருந்தார்.

யாழ். ஆயரின் வேண்டுகோளின்படி தேவாலயம் ஒன்றே அங்கு நிர்மாணிக்கப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், அங்கு தேவாலயம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழக முதல்வர் ஜெயலலிதா பிரதமர் நரேந்திர மோடிக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கச்சதீவில் உள்ள புனித அந்தோனியார் ஆலயத்தை இடித்து விட்டு, அங்கு புதிய தேவாலயம் அமைக்க இலங்கை அரசு திட்டமிட்டு இருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்துள்ளன.

இது குறித்து, உங்கள் தனிப்பட்ட கவனத்துக்கு உடனடியாகக் கொண்டு வருவதற்காக இந்தக் கடிதத்தை எழுதுகின்றேன்.

இலங்கை அரசின் இந்த முயற்சி, தமிழ் நாட்டின் தென் மாவட்டங்களில் உள்ள மீனவர்கள், கடந்த பல நூற்றாண்டுகளாக அந்தத் தீவுக்குச் சென்று தேவாலயத்தில் சிறப்பு வழிபாடு நடத்தி வருவதற்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும்.

கச்சதீவில் புதிய புனித அந்தோனியார் ஆலயம் அமைக்கும் முன்பு, தமிழ் நாட்டு மீனவர்களிடம் கலந்து பேச வேண்டும் என்று இலங்கையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும். தமிழக மீனவர்களிடம் பேசிய பின்னர், அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்க அறிவுறுத்த வேண்டும்.

மேலும், தமிழக மீனவர்களின் ஒப்புதல் பெற்ற பின்னர் இந்தியாவும், இலங்கையும் இணைந்து கச்சதீவில் அந்தோனியார் ஆலயத்தைக் கட்ட வேண்டும் என்பதை இலங்கை அரசு ஏற்குமாறு செய்யவேண்டும்-என்றுள்ளது.

(த-ஐ-5)

## ஆசிரியர் வீட்டில் திருட்டு; சந்தேகத்தில் இருவர் கைது

யாழ்ப்பாணம், மே 16

சுன்னாகம் - குப்பிளான் பகுதியில் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவரின் வீட்டில் நகைகளைத் திருடிய குற்றச்சாட்டில் 2 பேரை ஒரு மாதத்தின் பின்னர் நேற்றுக் கைது செய்துள்ளதாகச் சுன்னாகம் குற்றத் தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டில் 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான 10 பவுண் நகைகள் திருடப்பட்டிருந்தன.

சம்பவம் தொடர்பில் வழக்குப் பதிவு செய்து விசாரணைகளை மேற்கொண்ட சுன்னாகம் பொலிஸார், பிரதான சந்தேக நபரான குப்பிளான் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபரைக் கைது செய்துள்ளதாகத் தெரிவித்தனர்.

அவரிடம் மேற்கொண்ட மேலதிக விசாரணையில் இரண்டாவது சந்தேக நபரான மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் கூறினர்.

கைதான இருவரிடமிருந்தும் 10 பவுண் நகைகளைப் பொலிஸார் மீட்டதாகவும் அவர்களுக்கு வேறு திருட்டுக்களுடன் தொடர்பு உள்ளதா என விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருதாகவும் மேலும் தெரிவித்தனர்.

(த-4-107)

## சம்பூர் அனல் மின் திட்டத்தை மாற்றியமைப்பதற்குப் பேச்சு

### 20 ஆம் திகதி நடத்த ஏற்பாடு

கொழும்பு, மே 16

சம்பூர் அனல் மின் திட்டத்தை, திரவ இயற்கை எரிவாயு மின் திட்டமாக மாற்றியமைப்பது தொடர்பாக எதிர்வரும் 20 ஆம் திகதி இந்திய பங்காளர்களுடன், மின் சக்தி அமைச்சின் குழுவொன்று பேச்சுக்களை நடத்தவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அனல் மின் திட்டத்துக்குப் பதிலாக, திரவ இயற்கை எரிவாயு மின் திட்டத்தை அமைப்பதற்கான சாத்திய ஆய்வை மேற்கொள்வதற்கு, பொருளாதார முகாமைத்துவத்துக்கான அமைச்சரவைக் குழு தீர்மானித்துள்ளது.

அத்துடன் சம்பூர் அனல் மின் திட்டம் தொடர்பாக ஏற்கனவே கோரப்பட்ட கேள்விப் பத்திரங்களை ரத்துச் செய்தல் உள்ளிட்ட அனைத்துச் செயற்பாடுகளையும் நிறுத்தி வைக்கவும் அமைச்சரவைக் குழு முடிவு செய்துள்ளது.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள மின்சார சபையின் பேச்சாளர் சுலக்சனா ஜெயவர்த்தன, இந்தத் திட்டத்தை எவ்வாறு முன்னெடுப்பது என்று எதிர்வரும் 20 ஆம் திகதி முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

சம்பூரில் அனல் மின் நிலையத்தை ஆரம்பிக்கச் சுற்றுச் சூழல், சமூக மட்டத்தில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. திரவ இயற்கை எரிவாயு மின்திட்டத்தை அமைக்கலாமா என்று நாம் யோசித்து வருகிறோம். ஆனால் இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே, திரவ இயற்கை எரிவாயுவை இறக்கவோ, அவற்றைக் கையாளவோ வசதிகள் இல்லை என்றும், அதனால் திரவ இயற்கை எரிவாயு மின் திட்டத்தை ஆரம்பிப்பது நடைமுறைச்சாத்தியமற்றது என்றும் ஜப்பானியர்கள் மேற்கொண்ட சாத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக மின்சார சபை அதிகாரிஒருவர்தெரிவித்துள்ளார்.

(த-ஐ-5)

## இந்திய வீதிக்கு மைத்திரியின் பெயர் சூட்டல்

கொழும்பு, மே 16

இந்தியாவிலுள்ள பாதையொன்றுக்கும் பூங்காவொன்றுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பெயரைச் சூட்டியுள்ளதாக இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தின் முதலமைச்சர் சுவராஜ் சிங் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்தியப் பயணத்தைக் கௌரவிக்கும் முகமாக இவ்வாறு பெயர் சூட்டப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பல்கலைக்கழக நுழைவாயில் வீதி மற்றும் பூங்கா என்பவற்றுக்கே இவ்வாறு பெயர் சூட்டப்பட்டுள்ளன.

(த-5)

## மைத்திரிக்கும் சம்பந்தனுக்கும் சமஷ்டியைத் திணிக்கத் திட்டம்

### இந்தியாவைச் சாடுகிறார் வசந்த பண்டார

கொழும்பு, மே 16

13 ஆவது திருத்தத்துக்குள் சமஷ்டியை வழங்க வேண்டும் என்பதைத் திணிக்கவே ஜனாதிபதிக்கும் - சம்பந்தனுக்கும் இந்திய அரசு ஒரே நேரத்தில் அழைப்பு விடுத்துள்ளது.

- இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டைப் பிரிக்கும் நிகழ்ச்சி நிரலிலிருந்து இன்னும் இந்தியா விடுபடவில்லை. 13 ஆவது திருத்தத்தில் உள்ள காணி - பொலிஸ் அதிகாரங்களை வடக்கு மாகாண சபைக்குப் பெற்றுக் கொடுப்பதே இந்தியாவின் தேவையாகும்.

இதனூடாகச் சமஷ்டியைப் பெற்றுக் கொடுப்பதற்கான அடித்தளத்தை போட்டு அதன் ஊடாக படிப்படியாகத் தமிழீழம் உருவாகும். இதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளவும், இந்தியாவின் தேவையைத் திணிப்பதற்குமே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், எதிர்க்கட்சித் தலைவரும் ஒரே நேரத்தில் இந்தியாவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் இந்தியாவின் தேவைகள் அரசியல், பொருளாதார, சமூக ரீதியில் இலங்கையில் நிலை நிறுத்தக் கொள்ளப்படும் - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(த-ஐ-5)

## அனுமதியின்றி ஓட்டோவில் ஆடு ஏற்றியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மே 16

அனுமதிப் பத்திரம் இன்றி ஓட்டோவில் ஆடு ஏற்றிச் சென்ற இரு வருக்கு மல்லாகம் நீதிமன்றால் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அத்துடன் மிருகத்தைச் சித்திரவதை செய்து ஏற்றிச் சென்ற குற்றத்துக்கு மேலும் ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த வாரம் ஒரு இலட்சம் பெறுமதியான ஆடு ஒன்றை புன்னாலக்கட்டுவன் பகுதியில் இருந்து கோப்பாய் பகுதிக்கு முச்சக்கர வண்டியில் கொண்டு சென்ற போது அவர்களைச் சுன்னாகம் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

(த-107)

## கர்ப்பிணி மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 16

கைமாறாகக் கொடுத்த நகையைத் திரும்பிக் கேட்கச் சென்ற கர்ப்பிணிப் பெண் மீது, நகை வாங்கியவர்கள் தாக்கியதில் படுகாயமடைந்த அவர் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் மல்லாகம்-குளமங்கால் பகுதியில் கடந்த 11 ஆம் திகதி மாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கைமாறாகக் கொடுத்த நகையை மேற்படி பெண் கேட்கச் சென்றபோது நகை வாங்கிய அயல்வீட்டுக்காரர் இருவர் கர்ப்பிணிப் பெண்ணைத் தள்ளிவிட்டுத் தாக்கியுள்ளனர். தாக்கிய இருவரும் ஆண்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

(த-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சாக் கடத்தலுக்கான தளமாக பயன்படுத்தப்படுகிறது இலங்கை

## இந்திய அதிகாரிகள் தெரிவிப்பு

புதுடில்லி, மே 16

கஞ்சாக் கடத்தலுக்கான தளமாக இலங்கை பயன்படுத்தப்படுவதாக இந்திய அதிகாரிகளை மேற்கோள்காட்டி இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

கேரளாவிலும் ஆந்திரப் பிரதேசத்திலும் பயிரிடப்படும் கஞ்சா, இந்திய மீனவர்களின் படகுகள் மூலம் இலங்கைக்கு எடுத்துச்செல்லப்படுவதாக, இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இலங்கையிலிருந்து அது வேறுநாடுகளுக்கு எடுத்துச்செல்லப்படுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை அரச அதிகாரிகளும் இதனை உறுதிசெய்துள்ளதாக இந்திய உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக் கடற்படையினர் கடந்த வருடம் கஞ்சாக் கடத்தலில் ஈடுபட்ட 140 பேரைக் கைது செய்தனர். அதில் 20 பேர் இந்தியர்கள். அவர்களிடமிருந்து பெருமளவு கஞ்சா கைப்பற்றப்பட்டது என இலங்கை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தியாவின் ஆந்திரா மற்றும் கேரளாவில் பெருமளவு கஞ்சாப் பயிர்ச்செய்கை இடம்பெறுகின்றது. இதனை அவர்கள் இலங்கையின் பல பகுதிகளுக்கும் அனுப்புகின்றனர். தமிழ்நாடு மற்றும் கேரளாவிலிருந்து இலங்கை செல்லும் படகுகளே அதிகளவு கஞ்சாக் கடத்தலில் ஈடுபடுவதாக அதிகாரிகளுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன என இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.

(வ-சி)

# மாமியாரை தாக்கினார் மருமகன்

யாழ்ப்பாணம். மே 16

காலையில் மது அருந்திவிட்டுச் சென்ற மருமகன் மாமியாரைத் தாக்கியதால் அவர் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த 7 ஆம் திகதி காலை 8 மணியளவில் கரவெட்டியில் இடம்பெற்றுள்ளது.

மதுபோதையில் மாமியார் வீட்டுக்குச் சென்ற மருமகன் எந்த வித காரணமும் இன்றி அவரைத் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டதாகப் பொலிஸார் கூறினர்.

சந்தேகநபரான மருமகனைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸா மேலும் தெரிவித்தனர்.

(த-107)

# வருடாந்தத் திருவிழா

யாழ்ப்பாணம், மே 16

நாராந்தனை சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா கடந்த 11 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற்ற வருகின்றன.

எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் 21 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (த-ஐ-ரி)

✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦

யாழ்ப்பாணம், மே 16

ஏழாலை அத்தியடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

(த-ஐ-ரி)

# அரச நிறுவனங்களின் ஊழல்கள்; சாராம்ச அறிக்கை அடுத்த மாதம்

26 அரச நிறுவனங்களில் இடம்பெற்றுள்ள ஊழல், மோசடிகள் மற்றும் அரச சொத்துக்களின் துஷ்பிரயோகங்கள் என்பன குறித்த சாராம்ச அறிக்கையொன்றை அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கவுள்ளதாகப் பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றக்குழு (கோப்) தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி தெரி வித்துள்ளார்.

கடந்த ஜனவரி 26 ஆம் திகதி முதல் கோப் குழு முன்னிலையில் இடம்பெற்ற அரச நிறுவனங்கள் தொடர்பிலான விசாரணை அறிக்கையையே இவ்வாறு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

மோசடிகள் இடம்பெற்றுள்ள நிறுவனங்களிலுள்ள பிரதானிகள் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு எடுத்துக் காட்டி எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள நியமனங்களுக்கு உரியவர்களை நியமிக்குமாறு ஆலோசனை வழங்கவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

(த-5)

# இறந்து பிறக்கும் குழந்தைகள் சுகாதார சேவைக்குச் சவால்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, மே 16

இலங்கை சுகாதார சேவைக்கு இறந்து பிறக்கும் குழந்தைகள் ஒரு பெரும் சவாலாக மாறியுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

யுனிசெப் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தெற்காசிய பிராந்தியத்தின் குழந்தை நோய்கள் தொடர்பான விசேட மருத்துவர்களுக்கான கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இறந்துபிறக்கும்குழந்தைகளில் 70 வீதமானவை கர்ப்பம் தரித்து ஆரம்ப 28 நாட்களிலேயே இறப்பு இடம்பெறுகின்றது. இந்த நிலைமையை நீக்குவதற்கு சிறந்த சுகாதார சேவையொன்றினால் மாத்திரமே முடியும். இறந்துபிறக்கும்குழந்தைகளை மீட்டெடுப்பது இந்த நாட்டிலுள்ள வைத்தியர்களுக்கு முன்னாள். உள்ள ஒரு பெரும் பொறுப்பாகும் எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (த-5)

# சிசுவின் சடலம் மீட்பு; பெண்ணொருவர் கைது

கிளிநொச்சி. மே 16

கிளிநொச்சி – தர்மபுரம் புளியம்பொக்கணை ஆற்றங்கரையோரம் வீசப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்ட பிறந்து ஒரு நாளேயான சிசுவின் சடலம் தொடர்பான சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் பெண் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதிக இரத்தப் போக்கு காரணமாக மாங்குளம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வேளையே, இவர் கைதாகியுள்ளதாக, பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். பிறந்த போது குழந்தை இறந்திருந்தமையால், அதனை நீரோடையில் வீசியதாக, குறித்த பெண் ஆரம்ப விசாரணையில் தெரிவித்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். சிசுவின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட பெண் முல்லைத்தீவைச் சேர்ந்தவர் என்றும், அவரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க முல்லைத்தீவு நீதிமன்று உத்தரவிட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-4)

# மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படாது

## வவுனியாவில் கூறினார் பிரதி அமைச்சர்

வவுனியா, மே 16

வற் வரி அதிகரித்தாலும் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது. ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு காட்டாமல் நாட்டிலுள்ள அனைவருக்கும் நூற்றுக்கு நூறு வீதம் மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என மின்சாரத்துறை பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

தேசிய மின் செயற்பாடு நிகழ்ச்சித் திட்டத்தினூடாக "இருள் அகன்று முழு நாடும் ஒளிமயம்" எனும் தொனிப்பொருளில் செயலமர்வு ஒன்று வவுனியா தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

பத்து வருடங்களுக்கு மேல் ஒருவர் அரச காணியில் குடியிருந்தால் அந்தக் காணியின் உரிமைப்பத்திரத்தை அவருக்கே வழங்க வேண்டும் என அரசு தீர்மானம் எடுத்துள்ளது.

இந்தத் தீர்மானம் தெற்குக்கும், வடக்குக்கும் ஒரே மாதிரி முன்னெடுக்கப்படும். முன்னைய அரசின் காலத்தில் போலல்லாது இன்றைய அரசின் காலத்தில் உடனடியாகவே காணி உறுதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச தேவைக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணிகளைத் தவிர ஏனைய காணிகளுக்கு மின்சாரம்வழங்கக்கோரிவிண்ணப்பம் கொடுக்கும் பட்சத்தில் உடனடியாக விண்ணப்பதாரிக்கு மின்சாரம் வழங்கப்பட வேண்டும்.

மின்சாரம் வழங்குவதில் ஏதும் சட்டச்சிக்கல் ஏற்பட்டால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துத் தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

போரின் பின்னர் இலங்கை மின்சாரசபை நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் மிகவும் விரைவாக மின்சார இணைப்புக்களை வழங்கியுள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கடந்த ஆறு மாதத்தில் இலங்கை முழுவதும் ஒரு இலட்சத்து இருபதாயிரம் வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளன.

பொலநறுவை, அனுராதபுரம், இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, காலி, மாத்தறை போன்ற பகுதிகளுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளன.

மன்னாரில் 4 ஆயிரத்து 931 வீடுகளுக்கும், வவுனியாவில் 8 ஆயிரத்து 128 வீடுகளுக்கும் இது வரை மின்சாரம் வழங்கப்படவில்லை. இது ஒரு பெரிய தொகையாக இருக்கின்றது. இதனை விரைவில் தீர்க்கும் முகமாக வடக்கு தெற்கு என்று எந்த வேறுபாடும் காட்டாமல் மன்னார் மற்றும் வவுனியாவுக்கும் இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 12 ஆயிரம் வீடுகளுக்குக் கண்டிப்பாக மின்சாரம் வழங்கப்படும். இது ஒரு பெரிய பொறுப்பு. எனவே இலங்கை மின்சார சபைக்குத் தேவையான உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

மின்சார இணைப்பு இல்லாத வீடுகளைக் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இனங்கண்டு அவர்களுக்கு மின்சார இணைப்பு பெற்றுக்கொடுக்க வேண்டும்.

ஒரு பிரதேசத்தில் ஒருவருக்கு மின்சாரம் இல்லையென்றால் அது பிரதேச செயலருடைய குறைபாடு. இது உடனடியாக நீக்கப்படவேண்டும். இங்கு மின்சாரம் பெறாமல் எஞ்சி இருக்கும் மக்கள் மிகவும் ஏழ்மைப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்களை இனங்கண்டு அந்த மக்களுக்கு இலங்கை மின்சார சபை, வீட்டின் உட்பகுதியில் மின் வேலைகள் இணைப்புக்கள் அனைத்தையும் இலவசமாகச்செய்துகொடுக்கவுள்ளது.

மின்சார உபகரணங்களைப் பெறுவதற்காக 40 ஆயிரம் ரூபா இலகு கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இலகு கடன் திட்டம் ஆறு வருடங்களுக்கு தவணை அடிப்படையில் வழங்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்தில் எந்தப் பாகுபாடுமின்றி எவரும் பயனடைய முடியும்–என்றார். (த-ஐ-ரி)

# கஞ்சாவை நுகர்ந்தவருக்கு அபராதம்

கள்ளுத்தவறணையில் இருந்து கஞ்சா நுகர்ந்தவருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது மல்லாகம் நீதிமன்று.

தெல்லிப்பழை சித்தம்புளியடிப் பகுதியில் உள்ள கள்ளுத் தவறணை ஒன்றில் இருந்து 1 கிராம் கஞ்சாவினை நுகர்ந்தபோதே அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். (த-107)

Galaxy Star
வெற்றி வாரம் 058 திகதி 15.05.2016
06 26 28 48 58
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 4,194,700/-
இம்முறை தனயோகம் உங்களுடையதா?
15.05.2016 1979
16 39 45 51
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2,000,000/-
2016-05-17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
நீல நிற டிக்கட்டுக்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிகாயத்துக்குள்ளானவர் சிகிச்சை பயனின்றிச் சாவு

யாழ்ப்பாணம், மே 16

6 மாதங்களுக்கு முன்னர் லண்டனிலிருந்து வந்திருந்தவர், உடல் முழுவதும் எரிகாயங்களுக் குள்ளான நிலையில், சிகிச்சை பயனளிக்காது யாழ்.போதனா வைத்திய சாலையில் உயிரிழந்தார்.

அவருக்குத் தீ வைத்தார் என்று குற்றஞ்சாட்டப்படும் பெண் எரிகாயமடைந்து சிறு காயங்களுடன் சிறைச்சாலைக் காவலர்களின் பாதுகாப்பில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். சொத்துக்களை உரிமை கோரிப் பெறுவதில் ஏற்பட்ட தர்க்கம் இந்த நிலைக்குச் சென்றிருப்பதாக ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளது.

தாவடி வடக்கு – சுதுமலையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தீ பற்றிக்கொண்ட அருளானந்தம் சிவானந்தன் (வயது - 64) என்பவரே சிகிச்சை பயனளிக்காது மறநாள் உயிரிழந்தார்.

குறித்த நபரின் சிறிய தாயாரைச் சுமார் 20 வருடங்களாக இங்குள்ள ஒரு பெண் பராமரித்து வந்துள்ளார். அதனால் அவரது வீட்டுக்கு அருகே குறித்த பெண்ணின் சகோதரன் தங்குவதற்கு இடமும் கொடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் 6 மாதங்களுக்கு முன்னர் சிவானந்தன் லண்டனிலிருந்து யாழ்ப்பாணத்துக்குத் திரும்பியிருந்தார். அவர் வந்த பின்னர் சிறிய தாயார் நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துவிட்டார்.

அதன் பின்னர் அவரைப் பராமரித்து வந்த பெண், லண்டனிலிருந்து வந்திருந்தவரின் சிறிய தாயாரது வீட்டிலுள்ள தனது பொருள்களைத் தருமாறு கோரியுள்ளார் என்றும், ஆனால் அவை கொடுக் கப்படவில்லை என்றும் விசாரணையில் கூறப்பட்டுள்ளது. இந்த நிலையில் குறித்த பெண் பெற்றோல் வாங்கிச் சென்று சிவானந்தன் மீது ஊற்றித் தீ மூட்டியுள்ளார் என்று உயிரிழக்க முன்னர் சிவானந்தன் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

ஆனால் தனது பொருள்களை அவர் தர மறுத்ததனால் தான், மன உழைச்சல் காரணமாக தான் அங்கு சென்று தனக்குத் தானே பெற்றோல் ஊற்றித் தீ மூட்ட முயன்றதாகவும், அதன் போதே அவருக்கும் பட்டு எரிகாயமடைந்தார் என்றும் விசாரணையில் கூறியுள்ளார்.

அதனையடுத்து அவர் நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டதோடு, அவருக்கு ஏற்பட்டுள்ள காயத்துக்குச் சிகிச்சை அளிக்கவும் பணிக்கப்பட்டது.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மற்றும் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டனர்.

விசாரணைகளின் பின்னர் சடலம் நேற்று முன்தினம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-ஐ-4)

# புதிய ஆசிரியர் பிரமாணக் குறிப்புக்கு ஏற்ப பட்டதாரிப் பயிலுநரை உள்வாங்கவில்லை

## வடக்குக் கல்வியமைச்சின் செயலாளருக்கு முறைப்பாடு

யாழ்ப்பாணம், மே 16

1998, 1999 ஆண்டு காலப் பகுதிகளில் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்டிருந்த பட்டதாரிப் பயிலுநர்கள், தாம் புதிய ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்புக்கேற்ப உள்வாங்கப்படாது பாதிக்கப்பட்டு வருவது தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் முறைப்பாடு செய்துள்ளனர்.

அந்த எழுத்து மூலக் கடிதத்தில் 40 க்கும் மேற்பட்ட பட்டதாரிப் பயிலுநர்கள் ஒப்பமிட்டுள்ளனர்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

குறித்த காலப்பகுதிகளில் பட்டதாரிப் பயிலுநராக நியமனம் பெற்ற ஒரு பகுதியினருக்குப் புதிய ஆசிரிய சேவைப் பிரமாணக் குறிப்புக்கேற்ப உள்வாங்கல் செய்யப்பட்டு, பதவி உயர்வுகளும், சம்பள ஏற்றங்களும், சம்பள நிலுவைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இவர்கள் கல்வியமைச்சின் 27/2009 இலக்கச் சுற்று நிருபத்துக்கு ஏற்ப ஒருவருட முற்திகதி இடப்பட்டு உள்ளீர்ப்புச் செய்யப்படாத பட்டதாரிப் பயிலுநர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் கல்வியமைச்சின் இந்தச் சுற்று நிருபத்துக்கேற்ப ஒரு வருட முற்திகதியிடப்பட்டு, நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்களுக்கே புதிய ஆசிரிய பிரமாணக்குறிப் பின்படி உள்வாங்கல் செய்யப்படவில்லை. இது அநீதியான அடிப்படை உரிமை மீறல் செயல் எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த இரு வருடங்களாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டு வந்தபோதும், இதுவரை எந்த மட்டத்திலும் எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை எனப் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் தங்களது பதவி உயர்வுகள் தடைப்பட்டுள்ளதாகவும், போட்டிப் பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்க முடியாதுள்ளதாகவும் அவர்கள் மன வருத்தத்துடன் தெரிவித்துள்ளனர்.

எனவே இந்த ஆசிரியர்களின் பிரச்சினைகளை மனிதாபிமானத்துடன் அணுகி தீர்வு காணுமாறு கோரி கல்வி அமைச்சின் செயலாளர், கல்வியமைச்சர், ஆளுநர் ஆகியோருக்கு தாங்கள் முறையிட்டுள்ளதாக ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். (த-ஐ-4)

# கல்வி நிர்வாக சேவைச் சங்கத்தின் வழக்கு பதில் மனுவால் விலகியது

அச்சுவேலி, மே 16

அகில இலங்கை கல்வி நிர்வாக சேவையாளர் சங்கம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கானது, மத்திய கல்வி அமைச்சுத் தாக்கல் செய்த பதில் மனுவின் அடிப்படையில், விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

கல்வி நிர்வாக சேவை பிரமாணக் குறிப்புக்கு புறநடையாகவும், பொதுச் சேவை ஆணைக்குழுவின் அனுமதி அங்கீகாரம் இன்றியும் நியமனம் வழங்கப்பட்டமாட்டாது என்ற மத்திய கல்வி அமைச்சுத் தெரிவித்துள்ளது. அதனால் ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 252 தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனம் வழங்குவது தொடர்பான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக தொண்டர் ஆசிரியரில் இருந்து ஆசிரிய உதவியாளர் நியமனம் பெறுவதற்கு தகுதியானவர்கள் என்ற வகையில் ஐந்து வலயக் கல்வி அலுவலகங்களிலும் பட்டியல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமை புரிபவர்கள் தங்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனம் வழங்கப்படவேண்டும் என்றும் போராட்டம் நடத்தி வருகின்றனர். கிழக்கு மாகாணத்தில் தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் வழங்கவேண்டும் எனப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக்குறிப்பில் தொண்டர் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் உதவியாளர் என்ற நியமன வகைப்பாடு எதுவும் இல்லை. ஆசிரிய உதவியாளர் நியமனம் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதியிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இலங்கை தேசிய கல்விக் கொள்கைக்கு அமையவும், இலங்கை ஆசிரியர் சேவைப்பிரமாணக் குறிப்புக்கு அமையவும், தேசிய கல்வியியல் கல்லூரிகளில் மூன்று வருடம் பயின்று தேசிய ஆசிரியர் டிப்ளோமா பட்டம் பெற்றவர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தில் கல்விகற்று பட்டம் பெற்றவர்களுமே இலங்கை ஆசிரியர் சேவை தரம் 111 (அ) (ஆ) (இ) என்ற வகைப்பாடுகளில் நியமனம் பெறுவதற்கு தகுதியானவர்களாகும். இந்த நடைமுறை கடந்த 10 வருடங்களுக்கு முன்பிருந்தே நடைமுறையில் உள்ளது என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

சேவைப்பிரமாணக் குறிப்புக்களுக்கு புறம்பாக இலங்கை கல்விசார் சேவைகளுக்கு நியமனம் வழங்குவது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் யோசேப் ஸ்ராலின் தகவல் தெரிவிக்கையில்,

“வடக்கு, கிழக்கு போர் நிலமையைக் காரணம் காட்டி வடக்கு கிழக்கில் ஆசிரியர், அதிபர் நியமனங்களில் முறைகேடுகள் நடைபெறுகின்றன. பொருத்தமான தகைமை இல்லாதவர்கள் ஆசிரியர், அதிபர் பதவிகளில் உள்ளீர்க்கப்படுகின்றனர். இதற்குத் தமிழ் அரசியல்வாதிகளும் துணை போகின்றனர்.

இது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்று தெரிவித்தார். (த-ஐ-11)

**விற்பனைக்குண்டு**

சுன்னாகம் சூறாவத்தை முத்துமாரி அம்மன் ஆலய அருகில் சிறிய வீட்டுடன் 4பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 757 7675

**வேலைக்கு ஆள் தேவை**

105/7, ஆடியபாதம் வீதி, கொக்குவிலில் உள்ள விஷ்ணுமில்லுக்கு மில் வேலை தெரிந்த வேலையாள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 118 2120, 077 870 7893
(மருத்துவ பீடத்துக்கு அருகில்)

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
IELTS
IELTS Life skills
• Latest training materials.
• Skills development in all four categories.
• Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
ஆலோசனைகளுக்கு 777173517 யாழ்ப்பாணம் 0212224403
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
நெல்லியடி 021226 2470 | சாவகச்சேரி 021227 0775 | சுன்னாகம் 021224 1970 | கிளிநொச்சி 021228 5655

**வேலைவாய்ப்பு**

நண்பர்களே இன்று வேலை தேடி அலையத் தேவையில்லை. குறைந்த உழைப்புக்குக் கூடிய வருமானம் ஈட்டிக் கொள்ளலாம். 5 புதிதாகத் திறக்கப்படும் எமது தொழிற்சாலைகளுக்கு ஆண், பெண் இருபாலாரும் உடனடியாகத் தேவை. லேபல், பொதியிடல், களஞ்சியப்படுத்தல் பிரிவுகளுக்கு (நாள் சம்பளம் ரூபா.1500) கிழமை சம்பளம், மாத சம்பளம் பெற்றுக் கொள்ளலாம். உணவு, தங்குமிடம், உடை முற்றிலும் இலவசம். 6 மாதகாலம் தொடர்ந்து நீங்கள் வேலை செய்தால் சம்பளத்துக்கு மேலதிகமாக (ரூபா 25,000) போனஸ் வழங்கப்படும். விண்ணப்பங்களுக்கு முந்துங்கள். உடனடியாக தொடர்பு கொள்ளவும். (முன் அனுபவம் தேவையில்லை)

077 401 7543, 070 210 4871

**பணிப்பெண் தேவை**

கொழும்பு வெள்ளவத்தையில் வசிக்கும் வயோதிபப் பெண் ஒருவரைப் பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

071 860 9149




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார மத்திய நிலையம் அமைக்க காணி அளவிடும் பணி

## நில அளவைத் திணைக்களத்துக்கு வவுனியா மாவட்டச் செயலகம் கடிதம்

யாழ்ப்பாணம், மே 16

பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்குத்தாண்டிக்குளத்தில் உள்ள காணி வடக்கு மாகாண சபையால் வழங்கப்பட்டுள்ளது. இதில் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக, காணியை அளவீடு செய்யும் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு, நில அளவைத்திணைக்களத்துக்கு வவுனியா மாவட்டச் செயலகத்தால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் வடக்குக்கான பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கான வேண்டுகோள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கடந்த வருடம், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தினால் விடுக்கப்பட்டிருந்தது. இதற் கமைய, கொழும்பு அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்காக 2 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. அதில் இந்த ஆண்டுக்கு 200 மில்லியன் ரூபா ஒதுக் கப்பட்டது.

இதன் பின்னர் இதற்குப் பொருத்தமான காணியை அடையாளப்படுத்துவதில் கடந்த 6 மாதங்களாக இழுபறி நிலை நீடித்து வந்தது. ஓமந்தை மாணிக்கர் வளவுக் காணியையே சகலரும் அடையாளப்படுத்தியிருந்தனர். ஆனால் திட்டத்தை முன்னெடுக்கும் கொழும்பு அரசின் கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, நகரிலிருந்து 3 கிலோ மீற்றர் தூரத்தினுள்ளேயே காணி அடையாளப்படுத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தது.

இதனால் திட்டத்துக்கான மாற்றுக் காணி அடையாளப்படுத்தப்படுவதில் வடக்கு அரசுக்கும், கொழும்பு அரசுக்கும் இடையில் முரண்பாடு தோன்றியது. வடக்கு அரசின் முதல்வர் க.வி.விக்னேஸ்வரன், ஓமந்தைக் காணியே பொருத்தம் என்று தாண்டிக்குளம் காணியை விடுவிக்க விருப்பம் தெரிவிக்கவில்லை. ஆனால் கொழும்பு அரசு, தாண்டிக்குளம் காணியே பொருத்தம் என்று தெரிவித்தது. இந்த இழுபறியால், திட்டம் வேறு மாகாணத்துக்குச் செல்லும் நிலை ஏற்பட்டது. இறுதியில், வடக்கு மாகாண சபையின் 52 ஆவது அமர்வில், சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தால் கொண்டு வரப்பட்ட அவசர பிரேரணையின் அடிப்படையில், தாண்டிக்குளம் காணியை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானம் உடனடியாகவே கிராமிய பொருளாதார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அத்துடன் மாவட்டச் செயலருக்கும் பிரதியிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், திட்டத்தை முன்னெடுப்பதற்கான அனுமதியை கிராமிய பொருளாதார அமைச்சின் செயலாளர், மாவட்டச் செயலருக்கு வழங்கியுள்ளார். அதனடிப்படையில் பணிகளை ஆரம்பிக்க மாவட்டச் செயலர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக, விவசாய விதை உற்பத்திப் பண்ணையில் அடையாளப்படுத்தப்பட்ட 5 ஏக்கரை நில அளவீடு செய்யுமாறு, நில அளவைத் திணைக்களத்துக்கு மாவட்டச் செயலர் பணித்துள்ளார். (த-ஐ-5-10)

# அரசு குறித்து ஜே.வி.பி பொய்ப் பரப்புரைகள்

## பதிலளிக்குமாறு பிரதமர் ரணில் பணிப்பு

கொழும்பு, மே 16

அரசு தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி முன்னெடுத்து வரும் பொய்ப் பரப்புரைகளுக்கு எதிராகப் பதிலளிக்குமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க, தனது கட்சியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பணித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரதமரின் பயன்பாட்டுக்காக முக்கிய பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் இரண்டு வாகனங்களைக் கொள்வனவு செய்ய 5 ஆயிரத்து 943 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க அண்மையில் வெளியிட்ட கருத்துத் தொடர்பில் பிரதமர் கடும் அதிருப்தியடைந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

அரசு குறைநிரப்பு மதிப்பீட்டுச் சட்டவரைவின் ஊடாக அமைச்சர்களின் செலவுகளுக் காக 7 ஆயிரம் லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் கூறியிருந்தார்.

இதனையடுத்து, மக்கள் விடுதலை முன்னணியின் குற்றச்சாட்டுத் தொடர்பில், முன்னணியின் தலைவர்களுக்கு கடுமையாகப் பதிலளிக்கும் வகையில் ஊடகச் சந்திப்பை நடத்துமாறு பிரதமர் ஆலோசனை வழங்கியிருந்தார்.

இதற்கமைய அமைச்சர் ஹரீன் பெர்ணான்டோ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிராகச் சிறிகொத்தவில் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தினர்.

இந்த ஊடகச் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் ஹரீன் பெர்ணான்டோ, அனுரகுமார திஸாநாயக்க சோசலிசவாதக் கொள்கையை விற்றுப் பிழைப்பவர் என கடும் விமர்சனத்தை முன்வைத்திருந்தார். (த-ஐ-5)

# மானியச் சிமெந்து வழங்கும் திட்டம் யாழ். மாவட்டத்தில்



கொழும்பு,மே 16

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்று ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு 75 ஆயிரம் குடும்பங்களுக்கு மானியச் சிமெந்து வழங்கும் நிகழ்ச்சித்திட்டம், யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு முகாமையாளர் மு.ரவீந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட யாழ்.மாவட்டச்செயலர் நா.வேதநாயகன் தெரிவிக்கும் போது,

இந்தத் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டில் யாழ் மாவட்டத்தில் ஆயிரத்து 200 பேருக்குச் சிமெந்துப் பொதிகள் வழங்கப்பட்ட போதும், இந்த ஆண்டில் எமது முயற்சியால் இந்தத் தொகை மூவாயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு வழங்க அனுமதிக்கப்பட்ட மூவாயிரம் பேரில் முதற் கட்டமாக ஆயிரம் பேருக்கான விநியோகத்தைத் தற்போது ஆரம்பித்துள்ளோம். எனவே இந்தத் திட்டத்தின் மூலம் பயனாளிகள் நன்மை அடைவார்கள்.

இதனை முழுமையாகப் பயன்படுத்தும் சந்தர்ப்பத்திலேயே அடுத்த கட்டத்தை விரைவு படுத்த முடியும். எனவே இந்தத் திட்டத்தின் மூலம் பொருள்களைப் பெறுவதற்குக் காட்டும் வேகம் அப்பொருள்களைப் பயன் படுத்துவதிலும் இருக்க வேண்டும்.-என்றார்.

இந்த நிகழ்வில் தேசிய வீடமைப்பு அதிகாரசபை முகாமையாளர் மு.ரவீந்திரன் தெரிவிக்கையில்,

குடாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களில் இருந்து கரவெட்டி , நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து தெரிவானவர்களுக்குச் சிமெந்துப் பக்கற்றுகளும், வேலணைப் பிரதேச செயலகத்தில் இருந்து தெரிவானவர்களுக்கு முதற் கட்டக்கடன் தொகைகளும் வழங்கப்பட்டுள்ளன.-என்றார். (த-ஐ-10)

திருமண வாழ்த்து

இன்று (16.05.2016) திங்கட்கிழமை
திருமணபந்தத்தில் இணையும்

திரு திருமதி
நாகராசா நல்லம்மா
தம்பதியரின் செல்வப் புதல்வன்
திருநிறை செல்வன்
சசிகரன்
அவர்களையும்

திரு திருமதி
சாம்பசிவம் கனகமணி
தம்பதியரின் செல்வப் புதல்வி
திருநிறை செல்வி
ஸதீபா
அவர்களையும்






மேலும் பல
செல்வங்கள்பெற்று
பல்லாண்டு
காலம் வாழ
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
சுடர்கல்வி நிறுவன ஆசிரியர்கள்

கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் கோயில்
10 ஆம் திருவிழா விஞ்ஞாபனம்
(16.05.2016) விசேட தவில் நாதஸ்வர கச்சேரி

இன்று (16.05.2016) திங்கட்கிழமை கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் கோயில் 10 ஆம் திருவிழா காலை சங்காபிசேகத்துடன் இலங்கை இந்திய தவில் நாதஸ்வர கச்சேரி இடம்பெறும்.

அன்று மாலை விசேட இலங்கை இந்திய தவில் நாதஸ்வர கச்சேரி மாலை 7 மணி முதல் 11 மணிவரை இடம்பெறும்.

நாதஸ்வரம்

நாதகான வினோதன் ஈழுநல்லூர் P.S.பாலமுருகன்
நாதஸ்வர இளவரசன் கோண்டாவில் K.P.குமரன்

தவில்

தவில்சக்கரவர்த்தி பத்மஸ்ரீ டாக்டர் அரித்துவாரமங்கலம்
டாக்டர் A.K. பழனிவேல்
கலைமாமணி கோவிலூர் K.G .கல்யாண சுந்தரம்,
அளவையூர் தவில்மேதை V. தெட்சணாமூர்த்தியின் புதல்வன் தவில்வித்துவான் T. உதயசங்கர்
லயஞானபாலன் ஈழுநல்லூர் P.S.செந்தில்நாதன் (சி.1318) (12.18)

யாத்திரைத்தல திருவிழா
புனித பிலிப்பு நேரியார் ஆலயம்
செம்பியன்பற்று
17.05.2016 - 26.05.2016



- 17.05.2016 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பித்து நவநாள் வழிபாடுகள் மாலை 5.30 மணிக்கு நடைபெறும்.
  1. நற்கருணை வழிபாடு - 25.05.2016 (புதன்கிழமை) மாலை 5மணி
  2. திருநாள் திருப்பலி - 26.05.2016 (வியாழக்கிழமை) காலை 6.30மணி
- யாத்திரிகளின் நலன் கருதி யாழ்ப்பாணம், பருத்தித்துறை பஸ் நிலையங்களில் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
- திருவிழாக் கால வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவோர் ஆலய நிர்வாகத்துடன் 20.05.2016 அன்று காலை 10.00 மணிக்கு தொடர்பு கொள்ளவும்.
- திருவிழா அன்று (26.05.2016) மாலை 3.00 மணிக்கு விளையாட்டு நிகழ்வும் இரவு 8.00 மணிக்கு சிறப்பு 'எஸ்தாக்கியர்' நாட்டுக்கூத்து ஆற்றுகையும் இடம் பெறும்

புனிதரின் அருள்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பங்குத் தந்தையர்களும், பங்கு மக்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினி எழுதியதாகக் கூறப்படும் நூலின் சிங்களப் பதிப்பு வெளியீடு

கொழும்பு, மே 16
தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை மகளிர் அணித் தலைவியாக இருந்த தமிழினி என்ற சுப்ரமணியம் சிவகாமி எழுதியதாகக் கூறப்படும் 'ஒரு கூர் வாளின் நிழலில்' என்ற நூலின் சிங்கள மொழியாக்கம் கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

பிரபல சிங்களத் திரைப்பட மற்றும் நாடகக் கலை இயக்குநரான தர்மஸ்ரீ பண்டாரநாயக்க வெளியிட்டுள்ள இந்த நூலை, தியுனு அஸிபத்தக செவனயட் (ஒரு கூர் வாளின் நிழலில்) என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக மொழியியல்துறையின் மூத்த விரிவுரையாளர் சாமிநாதன் விமல் மொழி பெயர்த்துள்ளார்.

ஆயுதப் போராட்டத்துடன் நேரடியாகத் தொடர்புபட்டிருந்த ஒரு போராளியின் அனுபவங்களை உள்ளடக்கிய நூல் என்ற வகையில், தமிழினியின் இந்த நூல் மிக முக்கியமானது. தமிழ் – சிங்கள் சமூகங்கள் இடையேயான பரஸ்பர நம்பிக்கை மற்றும் இனப்பிரச்சினை தொடர்பான பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதற்கு இந்த நூல் உதவிக்கரமாக அமையும், இவ்வாறு சாமிநாதன் விமல் தெரிவித்துள்ளார்.

சென்னையில் ஏற்கனவே தமிழில் வெளியான இந்த நூலை கடந்த மார்ச் மாதம் கிளிநொச்சியில் தமிழினியின் கணவர் வெளியிட்டிருந்தார்.

புனர்வாழ்வு முகாமிலிருந்து 2013 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட தமிழினி, 2014 ஆம் ஆண்டின் இறுதிக் காலத்தில் இந்த நூலை எழுத முடிவு செய்ததாக அவரது கணவர் ஜெயக்குமரன் குறிப்பிட்டிருந்தார். (கு-ஐ-5)

# கூட்டு எதிரணியுடன் இறுதிச் சுற்றுப் பேச்சு

## ஜனாதிபதி தீர்மானம்



கொழும்பு, மே 16
கூட்டு எதிர்க்கட்சியுடன் இறுதிச் சுற்றுப் பேச்சு நடாத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களின் ஆலோசனைக்கு அமையவே இந்தப் பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பேச்சுக்களில் பங்கேற்குமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு அழைப்பு விடுப்பதா இல்லையா என்பது இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

எவ்வாறெனினும், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது மகிந்த மற்றும் மைத்திரி தரப்பு ஒன்றாக இணைந்து சுதந்திரக் கட்சியாகப் போட்டியிடவேண்டும் என்ற யோசனை இந்தச் சந்திப்பின் போது முன்வைக்கப்படவுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட உள்ளது.

எனினும் தேசிய சுதந்திர முன்னணி, பிவித்துரு ஹெல உறுமய போன்ற கட்சிகள் கூட்டத்தில் பங்கேற்குமா என்பது சந்தேகமே என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பேச்சுக் குறித்த ஜனாதிபதியின் யோசனை முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு உத்தியோகப்பற்றற்ற ரீதியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இறுதி முயற்சி தோல்வியடைந்தால் கூட்டு எதிர்க்கட்சியின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தொடர்பில் ஜனாதிபதி கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பார் என்று கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(கு-ஐ-5)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



அமரர்
**சந்தானலெட்சுமி தியாகராசா**

கடந்த 16.04.2016 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் தியாகராசா சந்தானலெட்சுமி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (16.05.2016) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய். **குடும்பத்தினர்.**

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 24.11.1952
உதிர்வு 16.04.2013
திதி: 12.05.2016

**திருமதி கலாதேவி சந்தானகிருஸ்ணன்**
(V.R.கிருஸ்ணன்)

வருடாந்த திதி 12.05.2016 இந்தியாவில் திருச்சி காவேரி அம்மா மண்டபத்திலும் அதனைத் தொடர்ந்து சீரடி சாயி Dr. சிற்றம்பலம் கண்ணன் முதியோர் இல்லத்தில் நடைபெற்ற மதிய உணவு உபசாரத்திலும் கலந்துகொண்ட நண்பர்கள், உறவினர்கள் எல்லோருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

0091 979 0716623 - (இந்தியா)
0096 689 9429816 -(ஓமான்)
0094 7799 27788 (இலங்கை)

V.R.கிருஸ்ணன்
(சந்தானகிருஸ்ணன் -கணவர்)
Muscat -Oman

---

## மூன்றாம் ஆண்டு திதி



மலர்வு 1974 . 07 . 31
உதிர்வு 2013 . 05 . 20

அமரர்
**மதியாபரணம் மதிவதனன்**
(கரைதுறைப்பற்று பிரதேச சபை)

ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தாலும்
ஆலவிருட்சமாய் உயர்ந்து நின்றதனை
எப்படி மறப்போம் நாம்
ஆறுதல் தரும் நிழலாய் நின்று காத்த
பாசப்பிணைப்பினை எப்படி மறப்போம் நாம்
நித்தம் நித்தம் உங்கள் நினைவில் நனைந்து
ஆறாத்துயரில் அமைதி காணாது துடிக்கின்றோம் நாம்
நேசம் மறவா நினைவால் ஏங்கி
என்றும் உங்கள் நினைவுடன் வாழும் நாம்...

ஓம் சாந்தி

இல.37/37,
சேர்.பொன். இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, அன்பு மகள்,
அக்கா, அத்தான், மருமக்கள்.

---

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலை ஆசிரியர் திருமதி
அனுலாதேவி பிரபாகரனின் அன்புத்தாயார்
திருமதி **தவமணி வடிவேலு**
அவர்கள் கடந்த 16.04.2016 ஆம் திகதி இறைபதம் அடைந்தமை யையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைச் செலுத்துவதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்..

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்
யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்.

(ஜே.1236) (13.18)

---

## கண்ணீர் அஞ்சலி



யா/ஸ்கந்தவரோதயா ஆரம்ப பாடசாலையில் கடமையாற்றும் **திரு.இ. ஜெயக்குமார்** அவர்களின் பாசமிகு மாமனார்.

***சண்முகம் வைத்தீஸ்வரன்***

அவர்கள் காலமான செய்தியறிந்து அவரது குடும்பத் தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்கழகம்
யா/ ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை
கந்தரோடை , சுன்னாகம்.

---

## நெஞ்சு திடுக்கிடும் 5 ஆம் ஆண்டு நினைவுநாள்

2016.05.16
துன்னாலை கரவெட்டி வடக்கு

அமரர்
**சுசிலா வைகுந்தநாதன்**

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். அத்தோடு அவரின் நினைவால் ஸ்ரீ பரமானந்தா முதியோர் இல்லம், சிறுவர் இல்லம் என்பவற்றுக்கு பணம் வழங்கப்பட்டது.

கணவர் - A.வைகுந்தநாதன் (அகில இலங்கை சமாதான நீதிவான்)
மகன் - நீதிராசா B.B.A
மருமகள் - ரேணுகா BSc

077 356 6426

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் **பஸ்தியாம்பிள்ளை சோமசுந்தரம்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14.03.1924 | 16.04.2016 |

கடந்த 16.04.2016 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (16.05.2016) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளமையினால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியை, இறுதியாத்திரை ஆகியவற்றில் கலந்துகொண்டு துயர்பகிர்ந்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களும், உதவிகள் புரிந்தவர்களுக்கும், சுகவீனமுற்றிருந்தவேளை உதவிபுரிந்த மருத்துவர்கள், மருத்துவமனைப் பணியாளர்கள் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவிபுரிந்த அன்பர்கள், நண்பர்கள், உறவுகளுக்கும் எமது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பு: தயவுகூர்ந்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கூலர் ரக வாகனத்துடன் பஸ் மோதுண்டு விபத்து

### சாரதி உட்பட 10 பேர் காயம்

வவுனியா, மே 16

கூலர் ரக வாகனமும், சுற்றுலாப் பயணிகள் பஸ்ஸூம் மோதி விபத்துக்குள்ளாகியதில் கூலர் வாகனச் சாரதி உட்பட 10 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வவுனியா பன்றிக்கெய்தகுளம் ஏ-9 வீதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றது.

கூலர் ரக வாகனம் பழுதடைந்த நிலையில் பிறிதொரு வாகனத்தின் உதவியுடன் கட்டி இழுக்கப்பட்டுப் பன்றிக்கெய்தகுளம் பகுதியை நோக்கிச் சென்றுள்ளது. அதன்போது கட்டி இழுத்துச் செல்லப்பட்ட கயிறு அறுந்துள்ளது. இதனைச் சரி செய்யச் சாரதியும், அவரது உதவியாளரும் இறங்கிய நிலையில், அவர்களது வாகனத்தைச் சுற்றுலாப் பயணிகள் பஸ் மோதியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது கூலர் ரக வாகனத்தில் வந்த சாரதி மற்றும் அவரது உதவியாளர் ஒருவரும் படுகாயமடைந்தனர். பயணிகள் பஸ்ஸில் சென்ற 8 பேர் சிறுகாயங்களுடன் தப்பினர். பொலிஸார் பயணிகளை ஓமந்தை பொலிஸ் நிலையத்துக்கு அனுப்பியதுடன் காயமடைந்த சாரதியை வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்த்தனர்.

கூலர் வாகனத்தில் சென்ற இருவரும் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டனர். பயணிகள் பஸ் சாரதி விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும், விபத்துக்குள்ளான வாகனங்கள் ஓமந்தை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், பயணிகள் அனைவரும் ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் தண்ணீர் உணவு வசதிகளுடன் பராமரிக்கப்பட்டனர் எனவும் ஓமந்தை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-ஐ-4-402)

## முனைக் கடற்கரையில் மே 18 நினைவு தினம்



கரணவாய்,மே 16

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு பருத்தித்துறை முனைக்கடற்கரையில் நேற்று சுடரேற்றி அஞ்சலி செய்யப்பட்டது. வடமாகாண சபை உறுப்பினர் ச. சுகிர்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொது ஈகைச் சுடரை வடமாகாண சபை உறுப்பினர் க. தர்மலிங்கம் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து ஏனைய சுடர்களை வடமாகாண சபை உறுப்பினர் சுகிர்தன், கரவெட்டிப் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர். பொ. குகதாஸ், பருத்தித்துறை நகரசபை முன்னாள் உறுப்பினர்களான திருமதி மதினி நெல்சன், எஸ். தீபானந்தன் மற்றும் தமிழரசுக்கட்சியின் பருத்தித்துறைத்தொகுதி அமைப்பாளர் ஜி. தங்கவேல் உட்படப் பலரும் ஏற்றி வைத்தனர். (ஐ-108)

## யாழ். தமிழ்ச் சங்கத்துக்கு புதிதாக நிர்வாகக் குழு

யாழ்ப்பாணம், மே 16

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்துக்கான புதிய நிர்வாகக் குழுத் தெரிவு அண்மையில் நீராவியடியில் உள்ள சைவபரிபாலன சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் தமிழ்ச் சங்கத்துக்கான பெருந் தலைவராக பேராசிரியர் அ.சண்முகதாஸூம், தலைவராகப் பேராசிரியர் மனோன் மணி சண்முகதாஸூம், துணைத் தலைவர்களாகப் பேராசிரியர் தி.வேல்நம்பி, ஆறு.திருமுருகன், பேராசிரியர் ம.இரகுநாதன், அருட்பணி. ஜெறோ செல்வநாயகம் ஆகியோரும், பொதுச் செயலாளராக ச.லலீசனும், துணைச் செயலாளர்களாக செல்வ ரஞ்சிதமும், கோ.ரஜனிகாந்தும், நிதிச் செயலளாராக லோ. துஷிகரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (த-ஐ-ரி)

## நகைகளைக் காக்க வகுத்த உபாயத்தால் வந்த சிக்கல்

யாழ்ப்பாணம், மே 16

யாழ்ப்பாணத்தில் கொள்ளை-களவு என்பன அதிகரித்துள்ளன. இதனால் வீட்டில் உள்ள பெறுமதியான பொருள்களைப் பாதுகாப்பதற்கு ஒவ்வொரு வரும் ஒவ்வொரு உபாயம் தேட வேண்டியிருக்கின்றது. அப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட உபாயத்தினாலேயே, நகை யும் பணமும் பறிபோக இருந்த நிலையில் இறுதிக் கணத்தில் காப்பாற்றப்பட்டிருக் கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:-

சாவகச்சேரி பொதுச் சந்தைக்கு கடந்த வெள்ளிக் கிழமை கொடிகாமத்தைச் சேர்ந்த ஒருவர் மூன்று கோழிகளைக் கட தாசிப் பெட்டியில் அடைத்துச் சந்தைக்குக் கொண்டு வந்துள்ளார்.

அதனை அச்சுவேலியைச் சேர்ந்த ஒருவர் வாங்கிக் கொண்டு சென்றுள்ளார்.

சிறிது நேரத்தில் கணவன் கொண்டு வந்த கடதாசிப் பெட்டியைத் தேடி மனைவி சந்தைக்குச் சென்றுள்ளார். அவர் சந்தையில் உள்ளவர்களிடம் விசாரித்துள்ளார். இவ்வாறு திடீரென்று விசாரிப்பது தொடர்பில் சந்தை வர்த்தகர்கள் அவரிடம் கேட்டுள்ளனர். இதன்போது அவர், களவுக்குப் பயந்து, கடதாசிப் பெட்டியின் அடியில் நகைகள், பணத்தை மறைத்து வைத்திருந்தேன். கணவர் அது தெரியாமல், பெட்டிக்குள் மேலே காணப்பட்ட பொருள்களை நிலத்தில் கொட்டிவிட்டு அதற்குள் கோழி களை வைத்துக் கொண்டு வந்துள்ளார். அதனால்தான் கோழியை யார் வாங்கியவர் என்று வினவுகின்றேன் எனப் பதிலளித்துள்ளார்.

கோழி வாங்குபவர் தினமும் சாவகச்சேரிச் சந்தைக்குப் பொருள்கள் வாங்க வருபவர். அதனால் சந்தை வியாபாரிகள் அவரது முகவரியைக் கொடுத்துள்ளனர். உடனே அந்தப் பெண் கோழி வாங்கியவரின் வீட்டுக்குச் சென்றுள்ளார். கோழியைக் கொண்டு சென்றவர், கோழிகளை வெளியே எடுத்துவிட்டுப் பெட்டியைக் குப்பையில் எறிந்துள்ளார்.

கோழி வாங்கியவரிடம் விவரத்தைக் கூறிவிட்டு, குப்பை மேட்டிலிருந்த கடதாசிப் பெட்டியை எடுத்து அதன் அடிப் பாகத்தைப் பிரித்துப் பார்த்த போது, அதனுள் 17 ஆயிரம் ரூபா பண மும், தங்க மோதிரம், தோடு, கைச்சங்கிலி உட்பட பெறுமதியான தங்க நகைகள் காணப்பட்டன. அவற்றை மீட்டுக் கொண்டு வீடு திரும்பினார் அந்தப் பெண். (த-ஐ-5-9)

## சிவில் பாதுகாப்புக் குழுவில் உள்ளவர் பொறுப்பற்றவராயின் இடைநிறுத்துக

### கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் பணிப்பு

யாழ்ப்பாணம், மே 16

சிவில் பாதுகாப்பு குழுவில் உள்ளவர்கள் பொறுப்புத் தவறிச் செயற்பட்டால், அவர்களை இடை நிறுத்துவதற்கு தயங்க வேண்டாம். -இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார். கிளிநொச்சி மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் கிளிநொச்சி மாவட்டச் செயலக மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே அரச அதிபர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சிவில் பாதுகாப்புக் குழுவில் அங்கத்தவர்களாக உள்ளவர்களும் சில விடயங்களில் தவறு செய்கின்றனர். இவ்வாறு தெரிவிக்கப்படுகின்ற குற்றச் சாட்டுத் தொடர்பில் முறைப் பாடுகள் கிடைக்கப் பெற்றால் அவர்களை உடனடியாகச் சிவில் பாதுகாப்புக் குழுவிலிருந்து நீக்குங்கள். அவர்கள் யார் எவர் என்று பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

பாடசாலைக்குச் செல்லாத மாணவர்கள் தொடர்பில் வலயக் கல்வி அலுவலகத்தினர் எமக்குத் தெரியப்படுத்தினால், அந்த மாணவர்களைப் பாடசாலையில் இணைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் இருப்பதனால் தான் பல்வேறு பிரச்சினைகள் தோன்றுகின்றன.

சிறுவர்கள் மற்றும் பெண்களின் பாதுகாப்புத் தொடர்பில் எதிர்காலத்தில் பொலிஸார் மற்றும் அரச திணைக்களத்தினருடன் இணைந்து செயற்பட உள்ளோம் - என்றார்.

சிவில் பாதுகாப்புக் கூட்டத்தில், கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது முக்கிய பிரச்சினையாக உள்ள கசிப்பு உற்பத்தி தொடர்பிலும், மணல் அகழ்வு தொடர்பில் சிவில் அமைப்புக்களினால் பல்வேறு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன. இவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-ஐ-5-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளப் புனரமைப்பில் மோசடி; விசாரணை அறிக்கை பூர்த்தி

## வடக்கு பிரதம செயலரிடம் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், மே 16

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்புக் குளம் மற்றும் விசுவமடுக் குளம் ஆகியவற்றின் புனரமைப்பின்போது இடம்பெற்றதாகச் சொல்லப்படும் மோசடி தொடர்பில் விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு, தனது அறிக்கையை வடக்கு மாகாணப் பிரதம செயலாளரிடம் கையளித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கிய நீர்ப்பாசனக் குளங்களான தண்ணிமுறிப்புக் குளம் மற்றும் விசுவமடுக் குளம் ஆகியவற்றின் புனரமைப்பின் போது மோசடி இடம்பெற்றதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பில் விவசாய அமைப்புக்களின் அறிக்கைகளை வடக்கு மாகாண சபையில் சமர்ப்பித்த ஆளும் கட்சி உறுப்பினர் து.ரவிகரன், இது தொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கோரியிருந்தார்.

> “கடந்த ஆண்டு இறுதிக்குள் விசாரணை அறிக்கையை பிரதம செயலாளரிடம் கையளிக்க வேண்டும் என்று தெரி விக்கப்பட்டிருந்த போதும், விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.”

இதற்கமைய, வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் அ.பத்திநாதன் விசாரணைக்குழு ஒன்றை அமைத்து விசாரணை மேற்கொண்டு, அதன் அறிக்கையை மாகாண சபையில் சமர்ப்பிக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது.

பிரதம செயலாளரினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு, கடந்த ஆண்டு இறுதிக்குள் விசாரணை அறிக்கையை பிரதம செயலாளரிடம் கையளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்த போதும், விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த அறிக்கையை விரைவில் கையளிக்குமாறு பிரதம செயலாளர், விசாரணைக் குழுவிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில், நீண்ட காலத்தின் பின்னர் விசாரணை அறிக்கை பிரதம செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம், பிரதம செயலாளரிடம் இந்த அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது. இதன் பிரதிகள், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோருக்கு பிரதம செயலாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(த-ஐ-5-101)

## ஓவியங்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு





சாவகச்சேரி,மே 16

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் சித்திர பாட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களால் உருவாக்கப்பட்ட ஓவியங்கள் காட்சிப்படுத்தல் வின் - 3 நிகழ்வு நேற்று முன்தினம் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.



வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணா, ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர் பீ.முத்துலிங்கம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு காட்சிக் கூடத்தைத் திறந்து வைத்தனர்.

காட்சிக்கூடத்தைப் பார்வையிடப் பெருமளவு மாணவர்களும் ஆசிரியர்களும், பொது மக்களும் கலந்து கொண்டனர்.



ஓவியங்களை உருவாக்கிய மாணவர்களுக்கு ஓய்வுநிலை அழகியற்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.கைலாசநாதன் தனது சொந்த நிதியிலிருந்து ஊக்குவிப்புத் தொகைகளை வழங்கினார்.

(த-ஐ-9)

# மன்னார் நகர சபையின் முன்னாள் தலைவர் சாவு

மன்னார்,மே 16

மன்னார் நகர சபையின் முன்னாள் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் (வயது-67) மாரடைப்பின் காரணமாக நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மன்னார் பொது வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.




சுகயீனம் காரணமாக நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மன்னார் பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில், காலை 5.50 மணியளவில் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் சார்பாக மன்னார் நகர சபைத் தேர்தலில் போட்டியிட்டு அதி கூடிய வாக்குகளைப் பெற்று மன்னார் நகரசபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-ஐ-56)

# பாழடைந்த கிணற்றில் பெண்ணின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம். மே 16

திருமுறிகண்டி வசந்த நகர்ப் பகுதியிலுள்ள பாழடைந்த கிணற்றிலிருந்து பெண்ணின் சடலமொன்றை நேற்று முன்தினம் மீட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் பொதுமக்களின் உதவி யுடன் சடலத்தை மீட்டுள்ளனர்.



இதில் உயிரிழந்த பெண் 28 வயதுடைய இரு பிள்ளைகளின் தாய் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் வீட்டிலிருந்து சுமார் 50 மீற்றர் தொலைவிலுள்ள பாழடைந்த கிணற்றிலிருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட பொலிஸார், பெண்ணின் உயிரிழப்புக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை என்றும் விசாரணைகள் தொடர்வதாகவும் கூறினர்.

(த-வ-4)

# பிரான்பற்று விவேகானந்தர் வீதியின் புனரமைப்புக்கு ரூ.40 லட்சம் ஒதுக்கீடு

## நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே 16

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பிரான்பற்று சுவாமி விவேகானந்தர் வீதியின் மீள்புனரமைப்புக்கு ரூபா 40 லட்சம் ஒதுக்கி வழங்கப்படும். இதன் மூலம் பிரான்பற்று மக்கள் முழு நன்மை அடைவதுடன், முன்னாள் மானிப்பாய் பிரதேச சபைத் தவிசாளரின் கோரிக்கையும் நிறைவேறும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

பிரான்பற்று மக்களுடனான சந்திப்பு, பிரான்பற்று முருகன் ஆலய அன்னதான மண்டபத்தில் முன்னாள் தவிசாளர் சி.மகேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மேலும் தெரிவிக்கையில்,

இன்று வடக்கு மாகாணத்தில் மக்களின் தலையாய தேவையாக உள்ளது உள்ளூராட்சி மன்றங்களுக்கு உட்பட்ட வீதிகளின் புனரமைப்பு மற்றும் மீள்புனரமைப்பு ஆகும்.

ஒவ்வொரு உள்ளூராட்சிச் சபைகளிலும் 300 இற்கும் மேற்பட்ட வீதிகள் உள்ளன. இதில் 15 வீதமான வீதிகளே ஒவ்வொரு உள்ளூராட்சிச் சபைகளிலும் மீள்புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

மீதமான வீதிகள் மீள்புனரமைப்பின்றி உள்ளன. இவ்வாறான வீதிகளை மத்திய அரசின் கவனத்துக்குக் கொண்டு வருவதன் மூலம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கலாம்.

இன்று வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு,சபை வீதிகளின் விவரங்களை வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அபிவிருத்தி முன்னேற்றம் குறித்து அடிக்கடி பேச்சுக்கள் மட்டுமே இடம்பெறுகின்றன. எவையும் செயல் உருப்பெறவில்லை.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, காங்கேசன் துறை சீமெந்துத்தொழிற்சாலை, உப்பளம் மற்றும் தொழிற்சாலைகள் குறித்து பேசி வருகின்றனர். எனினும் எப்போது மக்களுக்கு அபிவிருத்தியின் பயன் கிடைக்கும் என்பது தெரியாது. -என்றார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள் பிரதிநிதிகள் இணைந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்கு மலர்மாலைகள் அணிவித்து, பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

நிகழ்வுக்குத் தலைமைதாங்கிய முன்னாள் தவிசாளர் சி.மகேந்திரன் தெரிவிக்கையில்,

பிரான்பற்றில் வட்டார ரீதியாகவும், வரைபட ரீதியாகவும் குறித்த 130 குடும்பங்களின் ஆதனங்கள் வலி.மேற்கு பிரதேச சபை ஆதனத்தில் தவறாக பதியப்பட்டுள்ளன.

இவ்வாறான பதிவுகள் முழுமையாக வலி.தென்மேற்கு வட்டார எல்லைக்குள் வருவதற்கு வலி. தென்-மேற்கு பிரதேச செயலாளரும், பிரதேச சபைச் செயலாளரும் முன்வரவேண்டும்.

இந்தத் திட்டம் முன்னெடுக்கும் போது, நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் உதவ வேண்டும்.-என்றார்.

இந்த நிகழ்வில் மத்தியஸ்தர் அ.சிறீஸ்பரலிங்கம், பண்டத்தரிப்பு ப.நோ.கூ சங்க பொது முகாமையாளர் க.ரவிச்சந்திரன், முன்னாள் தவிசாளர் அ.ஜெபநேசன், உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஷ் ஆகியோர் உரையாற்றினர்.

(த-ஐ-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே 18 நினைவேந்தலில் அனைவரும் அணி திரள்க

## வடக்கு போக்குவரத்து அமைச்சர் அழைப்பு

யாழ்ப்பாணம், மே 16
தமிழினத்தின் மொத்த இழப்புக்களின் இறுதி நாளான மே 18 நினைவேந்தல் நிகழ்வு முள்ளிவாய்க்காலில் காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரை உணர்வுபூர்வமாக அஞ்சலி வழிபாடுகள் செய்வதற்கு வடக்கு மாகாண சபையால் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வுக்கு அனைவரும் வருகை தந்து கொல்லப்பட்ட அனைத்து ஈழ உறவுகளுக்கும்? அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன் என வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தனது ஊடக அறிக்கையிலே தெரிவித்துள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மே 18 அன்று தேவையற்ற நிகழ்ச்சிகள், களியாட்டங்களைத் தவிர்த்து எமது ஈழ உறவுகளுக்காக நாம் அஞ்சலிப்போம்.

முள்ளிவாய்க்காலுக்கு வந்து அஞ்சலிக்க முடியாதவர்கள் தமது இல்லங்களில் அல்லது வேறு இடங்களில் எமது உறவுகளை நினைத்து அஞ்சலி வழிபாடுகளை மேற்கொள்வோம்.

எமது இனம் இந்த உலகில் இருக்கும் வரைக்கும் நினைவில் வைத்திருக்க வேண்டிய நாள் மே 18. இந்தத் தினம் எம்முடைய மனங்களிலிருந்து படிப்படியாகக் குறைந்து வருவதை தற்போதைய காலத்தில் உணர முடிகின்றது. இந்த நிலை தொடருமெனில், நாம் இந்த மண்ணுக்காக சிந்திய குருதி, விதைக்கப்பட்ட ஒவ்வொரு உயிர்கள், எம்மினத்தின் சரித்திரம் தொடர்பில் எமது அடுத்த சந்ததியினர் பிற இனத்தவரிடம் கேட்டு அறிய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை வெகு தொலைவில் இல்லை என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இன்று எமது பகுதிகளில் கொலை, கொள்ளை, கற்பழிப்புக்கள் இவற்றுக்கு மேலாக தற்போது வாள் வெட்டு நிறைந்து காணப்படுகின்றது. மே 18 நினைவேந்தல் நிகழ்வுக்குப் பிறகாவது எமது இளைஞர்கள் சிந்தித்து இதிலிருந்து வெளிவர வேண்டும்.

மேலும் மே 18 அன்று முல்லைத்தீவு நகரத்திலிருந்து முள்ளிவாய்க்காலுக்கான விசேட பஸ் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அன்றைய நினைவேந்தல் ஆராதனைகள் மாலை 5 மணிவரை தொடர்ந்தும் நடைபெறுவதால் பொதுமக்கள் தமக்கு வசதியான நேரத்துக்குச் சென்று நினைவஞ்சலி செய்ய முடியும்.- எனவும் குறிப்பிட்டுள்ளார். (த-ஜ-ரி)



## சரசாலை மாத்தளான் வெளியில் இரவோடிரவாக கற்கள் அகழ்வு

சாவகச்சேரி,மே 16
சரசாலை வடக்கு மாத்தளான் வெளியில் இரவோடிரவாக கற்கள் அகழ்ந்து எடுக்கப்படுவது குறித்து அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

சரசாலையிலிருந்து மந்துவிலுக்குச் செல்லும் வீதியை அண்டிய பகுதிகளில் கற்கள் அகழ்வு இடம்பெறுகிறது. இதனால் பல இடங்களில் பெரிய குழிகள் ஏற்பட்டுப் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

மாலை வேளையில் கற்கள் அகழ்வதற்கான ஆயுதங்களுடன் வருகை தருவோர் இரவோடிரவாக கற்களை அகழ்ந்து வாகனங்களில் ஏற்றிச் சென்றுவிடுகின்றனர் எனவும் தெரிவித்தனர்.

கற்கள் அகழ்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் அப்பகுதிகளைச் சேர்ந்த கல் அகழ்வில் ஈடுபட்டோர் தொழில் இன்றித் தவிக்கும் வேளையில், வேறு இடங் களைச் சேர்ந்தவர்கள் சன நடமாட்டமில்லாத நேரங்களில் கற்களை அகழ்ந்து செல்வது குறித்தும் கவலை தெரிவித்தனர். (த-ஜ-9)

## பருத்தித்துறை நகர சபைக்குட்பட்ட 10 வீதிகள் இவ்வருடம் புனரமைப்பு

### 14.32 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

பருத்தித்துறை நகர சபைக்கு இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட சபை நிதியில் 10 வீதிகள் புனரமைப்புச்செய்யப்படவுள்ளதாக நகர சபைச்செயலாளர் புரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதற்காக 14.32 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த நிதியில், முன்னுரிமை அடிப்படையில் சாஸ்திரியார் வீதி, தங்காலை வீதி, பெருவெட்டி வீதி, லூர்த்து மாதா கோவில் வீதி, கிழுவப்பை வீதி, பூதவராயர் வீதி, வேதவனம் வீதி, முருகன் கோயில் வீதி, பிரதான வீதி இரண்டாம் ஒழுங்கை, அம்புலி யோடை ஆகிய வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதேவேளை – உலகவங்கியின் நிதி உதவியுடன் செயற்படுத்தப்படும் நெல்சிப் திட்டத்தின் கீழ் 8.6 மில்லியன் ரூபா செலவில் பருத்தித்துறை வெளிச்சவீட்டு வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டில் 4.8 மில்லியன் ரூபா செலவில் நாவலடி, கலப்பணாவத்தை வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளன. .

இதனால் நல்ல நிலையில் இருந்த சில வீதிகளும் சேதமடைந்தன.

இந்த நிலையைக் கருத்தில் கொண்டு குழாய் மூலமாக குடிதண்ணீர் விநியோகம் பெற ஆர்வமுள்ள பொதுமக்கள் இந்த மாத இறுதிக்குள் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடன் தொடர்பு கொண்டு நீரிணைப்பைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-ஜ-5-ரி)



சாவகச்சேரி நகர் வகுப்புத் தொழிலாளர் சங்கத்தால், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பத்தைச் சேர்ந்த தந்தையை இழந்த பாடசாலை மாணவனுக்கு நேற்று சைக்கிள் வழங்கப்பட்டது. இரு வருடங்களுக்கு முன்னர் சுவர் இடிந்து வீழ்ந்து சாவடைந்த சங்க உறுப்பினரின் குடும்பத்தினருக்கே இந்தச் சைக்கிள் வழங்கப்பட்டது. (த-ஜ-9)

## தாலாட்டு நூல் வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், மே 16
தென்பொலிகை குமாரதீபனின் 'ஆராரோ ஆரிவரோ' மனிதம் விளையும் தாலாட்டு நூல் வெளியீடும், உணர்வெழு கானங்கள் இறுவட்டு வெளியீடும் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு பொலிகண்டி வீரபத்திரர் ஆலயப் பின்னரங்கில் நடைபெறவுள்ளது. .

பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வானது ஆதிரை கலை இலக்கிய சமூக விஞ்ஞான மன்றம் விருட்சம் புலர் கல்வி சேவைக்காக நடைபெறவுள்ளது. (த-ரி)

## யாழில் முதன் முதலாக நடத்தப்பட்ட அச்சகதாரருக்கான பயிற்சிப்பட்டறை





யாழ்ப்பாணம்,மே 16
யாழில் முதன்முதலாக அச்சகதாரர்களுக்கு 'தொழில்நுட்ப அபிவிருத்தியும், புதிய சந்தை வாய்ப்புக்களும்' எனும் தொனிப் பொருளில் பயிற்சிப் பட்டறை ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இலங்கை அச்சகதாரர் சங்கத்தின் ஏற்பாட்டில், பேப்பர் கொம் மற்றும் அச்சகதாரர் கல்வி நிறுவனம், கிமாகோ, கலர்க் ரோமா உள்ளிட்ட நிறுவனங் களின் அனுசரணையுடன் இந்தப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

யாழ்.ஞானம்ஸ் விருந்தினர் விடுதியில் நடைபெற்ற இந்த அச்சகதாரர்களுக்கான பயிற்சிப் பட்டறையில் சுமார் 80 இற்கும் மேற்பட்ட அச்சக உரிமையாளர்கள் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்டத்தில் முதன் முதலாக நடத்தப்பட்ட இந்தப் பயிற்சி பட்டறையில், சிறிய மற்றும் நடுத்தர மத்திய அச்சகதாரர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கண்டறிந்து, அவற்றுக்கான தீர்வு பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன், பயிற்சிப்பட்டறை நடைபெற்றது.

யாழ். மாவட்ட அச்சகதாரர்கள் இணையத்தின் ஊடாக யாழ். அச்சகதாரர்கள் எதிர்நோக்கும் சவால்களையும், தொழில் இலாபகரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான உத்திகளை எவ்வாறு பயன்படுத்தவேண்டும் என்பது பற்றியும், கல்வி, உயர் தொழில்நுட்பம் மற்றும் நிர்வாக ரீதியான பிரச்சினைகளும் ஆராயப்பட்டு, தீர்வுகளுக்கான முன்யோசனைகளும் பயிற்சிப் பட்டறையில் முன்வைக்கப்பட்டன.


இந்த பயிற்சிப் பட்டறையில், இலங்கை அச்சகதாரர் சங்கத் தலைவர் வீராசாமி குமரன், இலங்கை அச்சக கல்வி நிறுவன தலைவர் சாஹீர் கம்ருடீன், மற்றும் அனுசரணையாளர்கள் உட்பட அச்சகதாரர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இரண்டாவது பயிற்சிப் பட்டறை எதிர்வரும் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் காலி மற்றும் மாத்தளைப் பிரதேசங்களில் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (த-ஜ-106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# 'ஞாபகங்களின் வலி' ஒளிப்படப் போட்டி நடுவர்களின் பாராட்டுப் பெற்ற ஒளிப்படங்கள்



த. குகரூபன்


ஸ்ரீ.மயூதரன்


ஸ்ரீ.மயூதரன்


கு.டிலீப்அமுதன்


செ.கஜேந்தினி


கு.டிலீப்அமுதன்


சி.சுமணன்



ச. தர்சன்


ச. தர்சன்


க. சுரேந்திரகுமார்


க. சுரேந்திரகுமார்


க. சுரேந்திரகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுமக்கள் மீதான வரிச் சுமையை குறைக்கக் கூட்டு எதிரணி யோசனை

கொழும்பு, மே 16
பொதுமக்கள் மீதான வரிச் சுமையைக் குறைக்குமாறு கோரியுள்ள கூட்டு எதிரணி, அதற்கான நான்கு யோசனைகளையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் வற் வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிராகக் கூட்டு எதிரணி தொடர்ச்சியாகக் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றது. வற் வரியைக் குறைத்துப் பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும் என்று கூட்டு எதிரணி வலியுறுத்தி வருகின்றது.

வற் வரியை 12 சதவீதத்தால் குறைத்தல், சுகாதார மற்றும் கல்வித் துறைகளுக்கான வற் வரியை நீக்கல், குடிதண்ணீருக்கான மேலதிக வரியை நீக்குதல் போன்ற யோசனைகளையே கூட்டு எதிரணி முன்வைத்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த யோசனைகள் எழுத்து மூலமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு வரிச் சுமையை ஏற்படுத்தப் போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். எனவே அவரின் வாக்குறுதிக்கு அமைய வரிச் சுமையை நீக்கி மக்களுக்கு நிவாரணத்தை வழங்குமாறு வலியுறுத்தியே இந்த யோசனையை முன்வைத்துள்ளதாகவும், இதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என்று நம்புவதாகவும் கூட்டு எதிரணி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (த-ஐ-5)

## மின்சாரம் தாக்கி ஒருவர் சாவு

திருகோணமலை- பபுறுகஸ்வெவ பகுதியில் மின்சாரம் தாக்கி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கோமரங்கட வெல- பபுறுகஸ்வெள பகுதியைச் சேர்ந்த பகிராலகே சுதத் ரணவீர (வயது- 42) என்ற நபரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

இயங்காத நிலையில் இருந்த நீர் வழங்கும் இயந்திரத்தை திருத்துவதற்கு முற்பட்டபோதே, மின்சாரம் தாக்கி குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)

# மீண்டும் போர் எப்போதுமே வெடிக்கலாம்

### எழுத்தாளர் காமினி வெயங்கொட தெரிவிப்பு



கொழும்பு, மே 16
வடக்கில் உள்ளவர்கள் ஏன் சமஷ்டி கேட்கின்றார்கள் என்பதை ஆராய்ந்து பார்த்தால், அதற்குக் கிடைக்கும் விடை தான் போர் ஏற்பட்டதற்கான காரணமாகும். போர் நிறைவடைந்து 7 வருடங்களாகியுள்ளது. சமாதானம் தோல்வியடைந்துள்ளது. இதன் அர்த்தம், மீண்டும் போர் எப்போதும் ஆரம்பமாகலாம் என்பதாகும். -இவ்வாறு பிரஜைகள் சக்தி அமைப்பின் அமைப்பாளரும், எழுத்தாளருமான காமினி வெயங்கொட தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி எழுதிய நூலின் சிங்கள மொழி பெயர்ப்பு வெளியீட்டு விழா கொழும்பில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், இரு சமூகங்களுக்கு இடையில் போர் நடந்ததாகக் கூறப்படுகின்றது. அது இரு சமூகங்களுக்கு இடையில் நடைபெறவில்லை. அரசுக்கும், பயங்கரவாதிகளுக்கும் இடையில் நடைபெற்றது.

இருப்பினும் தெற்கிலுள்ள மக்கள் இந்தப் போரை, தமது இனத்தைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளும் போராகப் பார்த்தனர். வடக்கிலுள்ள தமிழ் மக்கள், தமது பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்படும் - தமக்குச் சார்பாக நடக்கும் ஒன்றாகப் பார்த்தார்கள். இருப்பினும் போரினால் எல்லோருக்கும் அழிவுகள்தான் ஏற்பட்டன.

போரின் பின்னர் நாம் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்கு சலரும் பங்களிக்கவேண்டும். ஆனால் இந்த முயற்சியில் எத்தனை பேர் பங்கு கொண்டுள்ளனர்.


ஜனாதிபதி மைத்திரிபால அண்மையில் முக்கிய கருத்தை வெளியிட்டிருந்தார். அதாவது, வடக்கில் உள்ளவர்கள் ஏன் சமஷ்டியைக் கேட்கின்றார்கள் என்பதை ஆராய வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இங்கு தான் முக்கிய திருப்பு முனை இருக்கின்றது. சமஷ்டி வழங்குவதா ? இல்லையா ? என்பது இரண்டாவது விடயம். முதலில் வடக்கில் உள்ளவர்கள் ஏன் சமஷ்டி கேட்கின்றார்கள் என்பதை ஆராய வேண்டும். அதனை ஆராயும்போது கிடைக்கும் விடை தான், போர் ஏற்பட்டதற்கான காரணமுமாகும்.

போர் வெற்றியால் நாடு ஒருமைப்படுத்தப்பட்டுள்ளதாக நினைத்துக் கொண்டிருக்கின்றோம். தமிழினி தனது சுயசரிதை நூலில் தனது அமைப்பு தொடர்பில் விமர்சன ரீதியாக நோக்கியுள்ளார். அவர் அவ்வாறு செய்யும் போது, நாமும் அதே போன்று விமர்சன ரீதியாக நோக்குவது தீர்வுக்கு சிறந்த வழியாகும் என்று நினைக்கின்றேன். மீண்டும் ஒரு முறை போர் உருவெடுப்பதை தவிர்ப்பதற்கான ஒரே வழி அது தான்.

இதனைச் சிங்களவர்கள் என்ற ரீதியில் நாம் பொறுப்பேற்க வேண்டும். இந்த நாட்டில் நாம் பெரும்பான்மைச் சமூகம் என்று பெருமையுடன் கூறிக் கொள்கின்றோம். எமக்கு 2 ஆயிரத்து 500 ஆண்டு கால சரித்திரம் இருக்கின்றது என்று மார் தட்டிக் கொள்கின்றோம். எங்கு பிழை நடந்திருக்கின்றது என்பதை அறிந்து அதனை நிவர்த்தி செய்து கொண்டு முன்செல்ல வேண்டும்.

போர் முடிந்து ஏழு ஆண்டுகளாகியுள்ளது. போரை நிறைவு செய்வதற்கான இலக்காக இருந்த சமாதானத்தை வெற்றி கொள்ள முடியாமல் போயுள்ளது. ஏழு வருடங்களாக சமாதானம் தோல்வியடைந்துள்ளதன் வரைவிலக்கணம், எந்தச் சந்தர்ப்பத்திலும் மீண்டும் போரை ஆரம்பமாகலாம் என்பதாகும் - என்றார். (த-ஐ-5)





## மலையகப் பகுதியெங்கும் கடுமையான பனி மூட்டம்

கொழும்பு,மே 16
மலையகத்தின் முக்கிய நகரங்கள் இரவு முதல் கன மழையுடன், கடும் பனிமூட்டமும் கூடிய சீரற்ற கால நிலையுடன் காணப்படுகின்றது.

பனிமூட்டம் அதிகரித்துக் காணப்படுவதால் வாகனச் சாரதிகள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். சில பிரதான வீதிகளில் மண்சரிவு ஏற்படும் அபாயமும் உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக ஹற்றன்-கொழும்பு பிரதான வீதி மற்றும் ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் பனிமூட்டம் காணப்படுவதன் காரணமாக, இந்த வீதிகளைப் பயன்படுத்தும் சாரதிகள் வாகனத்தை அவதானமாக செலுத்துமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அத்துடன் வாகனத்தில் (ஹெட்லைட்) முன் விளக்கு போட்டுக் கொண்டு வாகன சாரதிகள் வாகனத்தைச் செலுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மழை காரணமாக ஹற்றன் தும்புருகிரிய வீதியில் அமைந்துள்ள குடியிருப்பு ஒன்றில் மண்மேட்டுடன் கூடிய கட்டடம் சரிந்து விழுந்ததில், குறித்த வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளதோடு, எந்தவிதமான உயிராபத்துக்களும் ஏற்படவில்லை.

எனினும் இதில் பாதிக்கப்பட்ட நான்கு பேரை வேறு இடங்களுக்குச் செல்லுமாறு கிராம சேவகர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ஐ)

## வற் வரியை மீளப் பெறக் கோரி நாடளாவிய ரீதியில் கவனவீர்ப்பு

### முன்னிலை சோசலிசக் கட்சி ஏற்பாடு

கொழும்பு, மே 16
'வற் வரியியை மீளப் பெறு' என்ற தொனிப் பொருளில் நாடளாவிய ரீதியில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தவுள்ளதாக, முன்னிலை சோசலிசக் கட்சி தெரிவித்துள்ளது.

வற் வரியைப் 15 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு எதிராக நாடு முழுவதும் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படும். இதில் தொழிற் சங்கங்கள் உள்ளிட்ட ஏராளமான அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

'வற் வரியை அதிகரித்து மக்கள் மீது சுமை சுமத்தப்பட்டுள்ளமையை ஏற்றுக் கொள்ளமுடியாது. அரசு மக்களுக்கு பொருளாதார ரீதியில் சலுகை வழங்க வேண்டும். அதனை விடுத்து, வரிகளை விதித்து மக்களின் வாழ்வாதாரத்தை நெருக்கடிக்குள் உள்ளாக்கக் கூடாது.

எனவே வற் வரி தொடர்பில் அரசு எடுத்துள்ள தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்யவேண்டும். மக்கள் மீது சுமை ஏற்படுத்தாத பொருளாதாரக் கொள்கையை அரசு கடைப்பிடிக்க வேண்டும். வற் வரி அதிகரிப்புத் தொடர்பில் அரசு மேற்கொண்டிருக்கும் வேலைத் திட்டத்துக்கு எதிராக எமது கட்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளது. பிரதான நகரங்கள் உட்பட நாட்டின் பல பிரதேசங்களிலும் இந்த எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்'- என்று முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசாரச் செயலாளர் தெரிவித்துள்ளார். (த-ஐ-5)

## கூட்டு எதிரணி உறுப்பினர்கள் பசிலுக்கு எதிராக போர்க்கொடி

கொழும்பு, மே 16
கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

கூட்டு எதிர்க் கட்சியின் அரசியல் ஒழுங்கமைப்புப் பணிகள் பசில் ராஜபக்சவிடம் ஒப்படைக்கப்படுவதற்கு ஒரு தொகுதி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கட்சி நடவடிக்கைகளில் பசில் இணைத்துக்கொள்ளப்படுவதற்கு நேரடியாகவே எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

மகிந்த தோல்வியைத் தழுவக் காரணமாயிருந்தவர்கள், கூட்டு எதிர்க்கட்சியின் கட்சிப் பொறிமுறையில் இருந்தால் கூட்டு எதிர்க்கட்சி பாரதூரமான நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடலாம் என்று கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

விமர்சனத்துக்கு உள்ளானவர்கள் கூட்டத்தை ஒழுங்கமைக்கும் பணிகளை பொறுப்பேற்றிருந்த காரணத்தால் அண்மையில் கிருலப்பனையில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் பங்கேற்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (த-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தீதும் நன்றும் பிறர்தர வாரா

பயங்கரவாதத் தடைச் சட்டம் இனித் தேவையற்றது. அது நடைமுறையில் இருக்க வேண்டிய யுகம் முடிந்து விட்டது. அனைவரும் அச்சமின்றி நாட்டில் சுதந்திரமாக வாழக் கூடிய சட்டம் ஒன்றே இன்றைய தேவை.

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும். புதிய சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்தத் தகவலை மூத்த அரசியல்வாதியும் வெளிவிவகார அமைச்சருமான மங்கள சமரவீர வெளியிட்டு உள்ளார்.

மேலும்--

நாட்டில் அசாதாரண சூழ்நிலை நிலவிய போதே பயங்கரவாதத் தடைச் சட்டம் தேவையாக இருந்தது. தற்போது அந்த யுகம் முடிந்து விட்டது.

கடந்த காலங்களில், குறிப்பிட்ட சில அரசியல்வாதிகளின் தேவை கருதி அது பயன்படுத்தப்பட்டது.

உண்மையைச் சொன்னால், கடந்த அரசுக்கு விரோதமானவர்களை இந்தச் சட்டத்தின் மூலம் கைது செய்தனர் என்று அவர் விலாவாரியாகப் புட்டுக் காட்டி உள்ளார்.

மேலும்--

அனைத்துலக நாடுகள் ஏற்றுக்கொள்ளத்தக்க சட்டத்தை விரைவில் கொண்டு வரப்போவதாகவும் வெளிவிவகார அமைச்சர் உறுதி கூறி உள்ளார். அதனை உறுதி செய்யும் வகையில், புதிய சட்டத்தை உருவாக்கும் பணியில், அதற்கான ஜனாதிபதியின் சட்டத்தரணி ரொமேஸ் டி சில்வா தலைமையிலான குழு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் அமைச்சர் மங்கள சமரவீர தகவல் வெளியிட்டுள்ளார்.

இதேவேளை--

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பில், இராணுவத்தினர் உள்ளிட்ட ஏனைய பங்காளர்கள் இடமும் கலந்துரையாடிய பின்னரே முடிவு எடுக்க ப்படும் என்று-அரச தரப்பினர் ஒருவர் விட்டேத்தியாகக் கருத்து வெளியிட்டு இருந்தமையும் இங்கு குறிப்பிட்டுக் கூற வேண்டிய ஒன்றாகும்.

எனினும் மூத்த அமைச்சரான மங்கள சமரவீர அந்தச் சந்தேகத்தை நீக்குமுகமாக மிகத் தெளிவாகக் கூறியதால், தமிழ் மக்கள் ஓரளவேனும் நிம்மதிப் பெருமூச்சு விட வாய்ப்பு உண்டு, இல்லையா?

ஜனாதிபதியின் சட்டத்தரணி ரொமேஸ் டி சில்வா தலைமையில் அமைக்கப்பட்ட குழு செயற்பட்டு வருவது ஓர் உந்து சக்தியாகப் பாதிப்புற்ற தமிழ் மக்கள் நோக்குகிறார்கள் என்பதையும் இங்கு தொட்டுக் காட்ட விழைகின்றோம்.

தீதும் நன்றும் பிறர்தர வாரா என்ற கணியன் பூங்குன்றனாரின் அர்த்தமுள்ள வரிகளை மீட்டுப் பார்ப்பது பொருத்தம்...!

# யேமனுக்குள் நுழையும் அமெரிக்கா

எம்.ஐ.முபாறக்



மத்திய கிழக்கின் போர் மேகத்துக்குள் சிக்கியுள்ள நாடுகளுள்-அங்கு அதிகாரத்தை நிலைநாட்டுவதற்கான போட்டிக்குப் பலியான நாடுகளுள் யேமனும் ஒன்று. அந்நாட்டின் தெற்கு மற்றும் தென் கிழக்குப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் அல்–கைதா நீண்ட காலமாக அந்நாட்டு அரசுக்கு எதிராகப் போரிட்டு வருகின்றது.

இந்தத்தலையிடி போதாதென்று கடந்த வருடம் ஈரானின் ஆதரவு பெற்ற ஷியா பிரிவான ஹவ்தி ஆயுதக்குழுவும் யேமனுக்கு எதிராகப் போரைத் தொடங்கியது. இந்த இருமுனைத் தாக்குதல்களால் யேமன் உள்நாட்டுப் போரை எதிர்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டது.

மத்திய கிழக்கின் ஏனைய நாடுகளில் இடம் பெற்று வருவதைப் போன்று யேமன் போரும் அந்தப் பிராந்தியத்தில் தங்களின் வல்லாதிக்கத்தை நிலைநாட்டப் போராடி வரும் ஷியா பிரிவினருக்கும் சுன்னி பிரிவினருக்கும் இடையிலான போட்டிதான் .

### ஈரானுக்கும் சவூதிக்கும் இடையில் மோதல்

மத்திய கிழக்கின் வல்லரசு நாடாகத் துடிக்கும் ஷியா முஸ்லிம் நாடான ஈரானும் சுன்னி முஸ்லிம் நாடான சவூதி அரேபியாவும் நடத்துகின்ற பலப் பரீட்சையின் மற்றுமோர் அங்கம்தான் இந்த யேமன் போர்.

மத்திய கிழக்கில் உள்ள ஈராக் மற்றும் சிரியா போன்ற ஷியா முஸ்லிம் நாடுகளையும் சுன்னி முஸ்லிம் நாடுகளில் வாழும் ஷியா முஸ்லிம்களையும் பாதுகாத்து - பலப்படுத்தி - மத்திய கிழக்கு முழுவதிலும் ஷியா முஸ்லிம்களின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக ஈரான் காய் நகர்த்தி வருகின்றது.

[illegible] மறுபுறம் இந்தத் திட்டத்தை முறியடித்து தனது ஆதிக்கத்தை அந்தப் பிராந்தியத்தில் நிலைநாட்டுவதற்காக சுன்னி நாடான சவூதி அரேபியா முயற்சித்து வருகின்றது. சவூதி அதனுடன் சுன்னி முஸ்லிம் நாடுகள் பலவற்றை இணைத்துக் கொண்டு ஈரானை ஒரு கை பார்ப்பதென்றே நிற்கின்றது. இதன் காரணமாக மத்திய கிழக்கு நாடுகள் எங்கும் போர் வெடித்துள்ளன.

சிரியாவின் ஷியா ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக சுன்னி முஸ்லிம் ஆயுதக்குழுக்கள் பல களமிறங்கியுள்ளன. மறுபுறம் ஈரான் - ரஷ்யாவுடனும், ஹிஸ்புல்லாஹ் ஆயுதக்குழுவுடனும் இணைந்து அந்த ஆட்சியைக் காப்பாற்றி வருகின்றது.

சிரியா அரசுக்கு எதிராகப் போராடும் ஆயுதக்குழுக்களுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் சவூதி மற்றும் துருக்கி போன்ற நாடுகள் உதவி வருகின்றன. அதே போல், அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளின் ஆதரவும் சிரியா அரசுக்கு எதிரான தரப்புக்குக் கிடைக்கின்றது.

இந்த அதிகாரப் போட்டியும் பெரும் போரும் 2011இல் தொடங்கி பேரழிவுகளை ஏற்படுத்தி. இந்த வருடம் பெப்ரவரியில்தான் ஓரளவு முடிவுக்கு வந்தது. சிரியா அரசுக்கும் அதற்கு எதிராகப் போராடும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் இப்போது அங்கு பகுதியளவிலான போர் நிறுத்தம் ஒன்று நடைமுறையில் உள்ளது. ஆனால், சிரியா அரசுக்கும் ஐ.எஸ். மற்றும் அல்-குவைதா உள்ளிட்ட ஆயுதக் குழுக்களுக்குமிடையிலான போர் தொடர்கின்றது.

இந்த ஷியா-சுன்னி அதிகாரப்

> ஒரே நாளில் அழித்து ஒழிக்கக்கூடிய ஒரு சிறிய ஆயுதக் குழுவை மிகப் பெரும் ஆயுதக்குழுவாக உலகுக்குக் காட்டி – அந்தக் குழுவைப் பாதுகாத்துக் கொண்டு – அந்தக் குழுவுக்கு அதிகம் சேதம் ஏற்படாதவாறு பல வருடங்களாக பெரும் போரைத் தொடுத்து, அந்த நாட்டின் பௌதிக வளத்தையும் மனித வளத்தையும் அழித்தொழிப்பதே அமெரிக்காவின் அகராதியில் 'பயங்கரவாதிகளுக்கு எதிரான போர்' என்று அர்த்தமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போட்டியின் மற்றுமொரு பகுதியாக யேமனில் வாழும் ஹவ்தி ஷிஆ பிரிவினர் யேமன் அரசுக்கு எதிராகத் தாக்குதலைத் தொடங்கினர். அவர்கள் தலைநகர் சனாவைக் கைப்பற்றி அந் நாட்டின் ஜனாதிபதி மன்சூர் ஹாதியை வீட்டுக் காவலிலும் வைத்தனர்.

பிறகு அங்கிருந்து யேமனின் தென் பகுதிக்குத் தப்பிச் சென்ற ஹாதி யெதன் பகுதியை தலைநகராகக் கொண்டு அங்கிருந்து ஆட்சிசெய்யத் தொடங்கினார். ஆனால், ஹவ்திகள் அந்தப்பகுதியையும்நெருங்கியதால், ஹாதி சவூதியின் உதவியை நாடினார். இதனால், சவூதி தலைமையில் ஜோர்தான், எகிப்து, மொரோக்கோ மற்றும் சூடான் ஆகிய நாடுகள் இணைந்து ஹவ்திக்கள் மீது விமானத் தாக்குதல்களை நடத்தின.

### ஒரு வருடமாகத் தொடரும் போர்

இவ்வாறு ஒரு வருடத்துக்கும் மேலாகத் தொடர்ந்த போரினால் சுமார் 6,800 பேர் உயிரிழந்துள்ளதோடு 28 இலட்சம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர். இந்த போரை நிறுத்துவதற்காக மூன்று தடவைகள் போர் நிறுத்த ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. அவை எவையும் வெற்றியளிக்காத நிலையில் மீண்டும் நான்காவது தடவையாக மற்றுமோர் ஒப்பந்தம் கடந்த மாதம் 11ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் அதே மாதம் 21ஆம் திகதி இரண்டு தரப்புகளுக்கும் இடையில் அமைதிப் பேச்சு ஒன்று ஆரம்பமாகி இன்று வரை இடம்பெற்று வருகின்றது.

ஆனால், இந்தப் பேச்சு வெற்றியடைந்து போர் நிறுத்தப்பட்டாலும், அது முழுமையான போர் நிறுத்தமாக இருக்காது. அங்கு யேமன் அரசுடனும் ஹவ்திக்களுடனும் போரிட்டு வரும் அல்-கைதா அமைப்பு இந்தப் பேச்சில்உள்ளடக்கப்படாமையே இதற்குக் காரணம். அந்த அமைப்பு மீது யேமன் அரசும் சவூதி தலைமையிலான நாடுகளும் தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்திக் கொண்டே இருக்கின்றன. இந்தத் தாக்குதல் காரணமாக அந்த அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் ஒரு வருடமாக இருந்து வந்த முகெல்லா என்ற நகரம் மீட்கப்பட்டுள்ளது.

அல்-கைத்தாவின் செயற்பாடுகளைக் காரணம் காட்டி - அவர்களுக்கு எதிராகத் தாக்குதலை நடத்துதல் என்ற பெயரில் இப்போது அமெரிக்கா யேமன் மண்ணில் கால்வைக்கப் போகின்றது .அமெரிக்கா நுழைந்த எந்தவொரு நாட்டிலும் போர் முடிவுக்கு வந்த வரலாறே இல்லை.

ஒரே நாளில் அழித்து ஒழிக்கக் கூடிய ஒரு சிறிய ஆயுதக் குழுவை மிகப் பெரும் ஆயுதக் குழுவாக உலகுக்குக் காட்டி - அந்தக் குழுவைப் பாதுகாத்துக் கொண்டு - அந்தக் குழுவுக்கு அதிகம் சேதம் ஏற்படாதவாறு பல வருடங்களாக பெரும் போரைத் தொடுத்து அந்த நாட்டின் பௌதிக வளத்தையும் மனித வளத்தையும் அழித்தொழிப்பதே அமெரிக்காவின் அகராதியில் 'பயங்கரவாதிகளுக்கு எதிரான போர்' என்று அர்த்தமாகும்.

ஈராக் மற்றும் ஆப்கான் போன்ற நாடுகள் இதற்கு நல்ல உதாரணங்களாகும். அங்கு பயங்கரவாதிகள் அழிந்ததைவிட பொதுமக்கள் அழிந்ததுதான் அதிகம். ஆப்கானில் அமெரிக்காவின் ஆளில்லா விமானத் தாக்குதல்களால் அதிகளவில் பொதுமக்களே அழிந்துள்ளனர். இந்த அழிவுகள் இன்னும் தொடர்கின்றன.

ஒவ்வொரு நாட்டையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்காக இவ்வாறான ஆயுதக்குழுக்களை அமெரிக்கா ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றது. அதன் மூலம் அந்தநாட்டைப்பலவீனப்படுத்தி -தன்னில்தங்கி இருக்கச்செய்து தனது திட்டத்தை அமெரிக்கா நிறைவேற்றி வருகின்றது.

### யேமனும் சிக்கப் போகின்றது

அந்த வரிசையில் இப்போது யேமனும் சிக்கப்போகின்றது. ஏற்கனவே யேமன் இராணுவத்துக்கு ஆலோசனை வழங்குதல் என்ற பெயரில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையில் அமெரிக்க இராணுவம் யேமனில் உள்ளது. அத்தோடு, ஹவ்திக்களின் தாக்குதல்கள் தொடங்கும் முன் அமெரிக்கா யேமன் அரசுடன் இணைந்து அல்-கைதாவுக்கு எதிராக விமானத் தாக்குதல்களை நடத்தி வந்தது. ஹவ்திக்களின் போர் தொடங்கியதும் அமெரிக்கா தற்காலிகமாக அந்தத்தாக்குதல்களை நிறுத்திக்கொண்டது. இப்போது மீண்டும் தொடங்கவுள்ளது.

யேமன் அரசுக்கும் ஹவ்திக்களுக்கும் இடையிலான போர் முடிவுக்கு வந்தாலும் யேமன் அரசுக்கும் அல்-கைதாவுக்கும் இடையிலான போர் மேலும் தொடரப் போகின்றமை நிச்சயம்.

## கண்கள் பாதுகாக்கப்படுமா?

மனிதகுலத்தின்அதிமுக்கியஉறுப்பானதுகண்கள். அவைகள் மிகவும் கவனமாகப் பாதுகாத்து பராமரிக்க வேண்டிய அதியுன்னத உறுப்பாகும்.

கண்கள் பற்றிய முக்கியத்துவம். அதன் தன்மைகள் ஆகிய முக்கிய குறிப்புக்கள் அடங்கிய ஒரு சிறப்புக் கட்டுரையை எங்கள் அபிமான உதயன் நாளிதழில் இரண்டோ மூன்று வருடங்களுக்கு முன் வாசித்த நினைவிருக்கின்றது.

இப்போது ஏற்பட்டுள்ள வெளிப்புறச் சூழ்நிலைகள் காரணமாகவும் எம்மினத்தவர்கள் செய்யும் தரன்தோன்றிச்செய்கைகளாலும் நாம் எமது கண்களைப் பாதுகாப்பது மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. இதில் நான் இரண்டு முறை பாதிப்படைந்து தொடர்ந்து வைத்தியம் செய்து அலைகின்றேன். இன்னும் என்னைப் போல் எத்தனை பேர் பாதிப்படைந்தார்களோ தெரியாது. சில இடங்களில் வெளியில் தெருவோரங்களில் வைத்து சக்தி வாய்ந்த மின் ஒட்டுகள் செய்கிறார்கள். இதனால் வீதியால் மோட்டார் சைக்கிளில் செல்லும் போதே கண்கள் தாக்கப்படுகின்றன. என்னைப்போல் அனேகம் பேர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

அதைச் செய்பவர்கள் அது தமது தொழில் என்று கூறுவார்கள். மற்றையவர்களின் பாதிப்பை யோசிக்க மாட்டார்கள். இவற்றைக் கவனித்து அவர்களை ஒழுங்கான மறைவான இடங்களில் வைத்துச் செய்ய வைப்பது யார்?

மாநகரசபை திட்டப்பிரிவு அதிகாரிகளா?

தொழிற் திணைக்கள வேலை ஒழுங்கு அதிகாரிகளா?

சமூக சேவை திணைக்கள அதிகாரிகளா?

உங்கள் பத்திரிகை மூலமாக இந்த விடயம் சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுத்து வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

*உங்கள் அபிமான ஒரு பத்திரிகை வாசகன்.*

## பலியேது? பழியேது?

தற்போது யாழ்.நகரில் என்றுமில்லாதவாறு சனநெருக்கம் அதிகரித்துள்ளதைக் காணமுடிகிறது. குறிப்பாக மோட்டார் சைக்கிள்களின் பாவனை அதிகமாகியுள்ள நிலையில், வீதிகளில் பயணிக்கும் பொதுமக்கள் அச்ச உணர்வுடனேயே நடமாடி வருகின்றனர்.

இந்த நிலையில், வீதிகளைக் கடப்பதற்குப் போடப்பட்ட மஞ்சள் கடவைக் கோடுகள் பலவும் முற்றாகத் தேய்மானமாகி விட்ட நிலையில், பொதுமக்கள் வீதிகளை கடந்து செல்லவே மிகவும் பயப்படுகிறார்கள். வீதியில் போடப்பட்ட மஞ்சள் கோடுகள் தூரத்தே வரும் வாகன சாரதிகளுக்கு தெரியாமல் இருப்பதனால், அவர்கள் தமது வாகனங்களை அதிவேகமாகச் செலுத்தி வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. இதனால் விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன, இனியும் ஏற்படவும் வாய்ப் புண்டு.

யாழ்.நகரில் மஞ்சள் கடவைக் கோடுகள் தேய்ந்து விட்டிருக்கும் நிலையை உதயன் வாசகர் திருமுகம் ஊடாகவும், வேறு பத்திரிகை ஊடகங்கள் ஊடாகவும் வாசகர்கள் பலர் சுட்டிக்காட்டியிருந்தும் சம்பந்தப்பட்டவர்கள் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. குறிப்பிட்ட இடங்களில் விபத்து நடந்து ஒருவர் சாவடைந்த பின்பு, அந்தச் சாவை காலன் (இயமன்) மீது பழியாகப் போடுவதை விடுத்து அவரவர்கள் தங்கள் கடமைகளை விசுவாசத்தோடு செய்ய முன் வருவார்களானால் இங்கு பலியுமேது? பழியுமேது?

*வன்னிவாசகி*

## பிரச்சினைகளுடன் வாழப் பழகிக்கொள்ள வேண்டும்

தற்போது அனல் பறக்கும் வெயில் எங்கும் எறித்து சற்று ஓய்ந்துள்ளது. இயற்கை எம்மைத் தொந்தரவு செய்கின்றபோது மனிதர்களாகப் பிறந்தோரும் ஒழுங்கீனமான நடவடிக்கைகளில் இறங்கி எம்மைப் பிரச்சினைகளுக்கு உள்ளாக்குகிறார்கள். இந்த இரண்டையும் தாங்கி வாழ நாம் தான் எங்களைப் பழக்கிக் கொள்ள வேண்டும். 'அச்சம் தவிர், ஆண்மை தவறேல்' என்று பாரதி எமக்குப் புதிய பாதையொன்றைக் காட்டியுள்ளான். மூத்தோர் சொல் அமுதம். முன்பு இவ்வாறான சூழ்நிலைகளை எதிர்கொண்ட வழிவகைகளை அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

*சாவகச்சேரியூரான்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராக்கா நகரில் அவசர நிலை ஐ.எஸ்.அமைப்பால் பிரகடனம்

## அமெரிக்க கூட்டுப்படை தெரிவிப்பு

டமாஸ்கஸ், மே 16
சிரியாவின் ராக்கா நகர் ஐ.எஸ். அமைப்பின் தலைநகராக பிரகடனப் படுத்தப்பட்டிருந்தது. இந்த நகர் விரைவில் முற்றுகையிடப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அங்கு அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
இந்த நிலையில்ஐ.எஸ். அமைப்புநிலை குலைந்துள்ளதைக் காட்டுகிறது. அத்துடன் ராக்கா நகரப் பகுதியில் அதிக பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது என அமெரிக்க கூட்டுப்படைத்தளபதி தெரிவித்துள்ளார்.
மேலும், குறிப்பிட்ட சில பிரதேசங்களுக்கு ஐ.எஸ். அமைப்பினரால் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்கக் கூட்டுப் படைகளின் நகர்வு குறித்த அவர்கள் ஆராய ஆரம்பித்துள்ளனர் என்றும், பதில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஐ.எஸ். அமைப்பின் தலைவர் ராக்காப் பகுதியில் குடி கொண்டுள்ளார் எனச் சந்தேகிப்பதாகவும், அமெரிக்க இராணுவக் கூட்டுப் படையினர் தெரிவித்தனர். இதற்கிடையில் ஐ.எஸ். அமைப்பின் தலைவரை உயிருடன் பிடிக்கவோ, கொலை செய்யவோ திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் ஐ.எஸ். தலைவர் பக்தாதியின் சாவுக்கு பின்னர், அவ்விடத்தில் பதவி வகிக்கப் பலர் உள்ளனர். இதனால் இவரை மாத்திரம் அழிப்பது தீர்வாகாது எனவும் தெரிவித்துள்ளனர். (ஐ-ரி4)

# செல்போனை விழுங்கிய கைதி

## அறுவை சிகிச்சை மூலம் வெளியில் எடுத்த மருத்துவர்கள்

டப்ளின், மே 16
அயர்லாந்து நாட்டின் தலைநகரான டப்ளின் நகர சிறையில் அடைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர், சிறைக்காவலர்களுக்குப் பயந்து சிறியரக அலைபேசி ஒன்றை விழுங்கியுள்ளார். அலைபேசியை விழுங்கிய காரணத்தால், 29 வயதான அந்த நருக்கு தொடர்ந்து வாந்திவந்து கொண்டே இருந்துள்ளது. இதனைத் தொடர்ந்து அவரை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அலைபேசியை விழுங்கிய 4 மணிநேரங்கள் கடந்த பின்னர், வயிற்று வலி என மருத்துவமனையில் கண்டறியப்பட்டுள்ளது.
எண்டோஸ்கோப் மூலம் ஒரு நீண்ட மெல்லிய குழாயின் வழியாக ஒளியைப் பாய்ச்சி வீடியோ கமராவின் வழியாகப் பார்த்த போது, உணவுக் குழாயின் இடையில் அவரது வயிற்றுக்குள் அலைபேசி சிக்கி இருப்பதை 18 மணி நேரங்களின் பின்னர் மருத்துவர்கள் கண்டறிந்தனர்.
அந்த அலைபேசியை மருத்துவர்கள் வெளியே எடுத்துள்ளனர். 2.3 இஞ்சி நீளமும், ஒரு இஞ்சி அகலமுமாகும். சுமார் ஒருவார மருத்துவக் கண்காணிப்புக்குப் பின்னர், அவர் சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக சர்வதேசமருத்துவஆராய்ச்சிக்கையேடு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி4)




# தமிழகத்தில் இன்று

சென்னை, மே 16
தமிழகத்தில் 15 ஆவது சட்ட சபையைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. 234 தொகுதிகளில் அரவக்குறிச்சி தவிர ஏனைய 233 தொகுதிகளிலும் வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.
5 கோடி 82 லட்சம் வாக்காளர்கள் வாக்கிட்டு தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கவுள்ளனர். இதற்காக தமிழகம் முழுவதும் மொத்தம் 66 ஆயிரத்து 7 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.
இந்த வாக்குச் சாவடிகளுக்கு நேற்றுக் காலை முதல் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களும், வாக்குப் பதிவுக்கு தேவையான 43 வகையான பொருள்களும், பலத்த பாதுகாப்புடன் அனுப்பி வைக்கும் பணிகள் தொடந்து நடைபெற்று வருகிறது.
234 தொகுதிகளிலும் மொத்தம் 3 ஆயிரத்து 776 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இதில் அரவக்குறிச்சி தொகுதி வேட்பாளர்கள் மட்டும் எதிர்வரும் 23 ஆம் திகதி தேர்தலை சந்திக்கிறார்கள். தேர்தல் பணியில் மொத்தம் 4 லட்சத்து 70 ஆயிரம் அரச ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
அனைத்து வாக்குச் சாவடிகளிலும், கண்காணிப்பு கமராக்கள் அமைக்கப்பட்டு, வாக்குப் பதிவு கண்காணிக்கப்படுகிறது. வாக்குப்பதிவு வீடியோவிலும் பதிவு செய்யப்படவுள்ளன.
முதியோர் மற்றும் ஊன முற்றோர் வாக்குப்பதிவு செய்வதற்காக வாக்குச் சாவடிகளுக்கு செல்ல சக்கர நாற்காலிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதற்காக தமிழ்நாடு முழுவதும் 11 ஆயிரம் சக்கர நாற்காலிகள் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
வாக்குப்பதிவு அமைதியாக நடைபெறவும் வாக்காளர்கள் அச்சமின்றி வாக்குப் பதிவு செய்யவும் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இதற்காக 300 நிறுவனங்களைச் சேர்ந்த 18 ஆயிரம் துணை ராணுவப் படையினர் வெளி மாநிலங்களில் இருந்து தமிழகம் வரவழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் ஏற்கனவே தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளுக்கு சென்று பாதுகாப்பு பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளனர்.
சென்னையைத் தவிர்த்து 31 மாவட்டங்களில் உள்ள 58 ஆயிரத்து 468 வாக்குச் சாவடிகளில், 3 ஆயி

# போகோ ஹறாம் தாக்குதல்களால் 2.2 மில்லியன் பேர் இடம்பெயர்வு


## ஐ.நாவின் பாதுகாப்புச் சபை தகவல்

அபுஜா, மே 16
கடந்த 7 வருடங்களில் போகோ ஹறாம் தீவிரவாதிகளின் தாக்குதல்களில் 2.2 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன், 4.2 மில்லியன் மக்கள் உணவு நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளனர் என ஐ.நாவின் பாதுகாப்பு சபை அறிக்கை தெரி வித்துள்ளது.
அத்துடன் ஐ.எஸ் அமைப்புக்கும், போகோ ஹறாம் அமைப்புக்கும் இடையில் நிலவும் உறவு நிலை தொடர்பாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளது.
நாடுகளின் பாதுகாப்புத் தொடர்பாக ஐ.நா. நேற்றுமுன்தினம் நைஜீரியாவில் நடத்திய மாநாட்டில், தீவிரவாதப் பிரசேநிலை குறித்த அலசி ஆராயப்பட்டது. இந்த மாநாட்டில் அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது.
மேலும் சந்தேகத்துக்கு இடமின்றி ஐ.எஸ். அமைப்பு வன்செயலிலும், மனித உரிமை மீறம் செயல்களிலும் ஈடுபட்டுள்ளது என்பதுடன், இவை சர்வதேச விதிகளுக்கு முரணானது. எனவே உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பாதுகாப்புச் சபை அங்கத்தவர்கள் 15 பேரின் ஒப்புதலுடன் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.
நைஜீரியத் தலைநகர் அபுஜாவில் இடம் பெற்ற இந்த மாநாட்டுக்கு அந்த நாட்டு ஜனாதிபதி, பெனின், கமரூன், சாட், நிகர் ஆகிய பகுதித் தலைவர்களுக்கும் விசேட அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இவர்களின் உதவியுடன் போகோ ஹறாத்தை முற்றாக எதிர்ப்பது தொடர்பான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.



மேலும், ஆபிரிக்க பகுதியில் போர்ச் சூழலால் நிலவும் நெருக்கடியைத் தீர்க்க ஆபிரிக்க சர்வதேச சமூகத்திடம் பாதுகாப்புச் சபை உதவி கோரியுள்ளது. ஏற்கனவே [illegible] மில்லியன் டொலர் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இவ்வருடம் ஏப்ரலில் அதிகரித்த வெப்பம்

## நாஸா அறிவிப்பு

வொஷிங்டன், மே 16
உலக வெப்பநிலை பட்டியலில் கடந்த 130 வருடங்களில் இந்த வருடம் ஏப்ரல் மாதம் என்றும் இல்லாத அளவுக்கு வெப்ப நிலை உச்ச அளவை எட்டியுள்ளது என நாஸா அறிவித்துள்ளது.
இது தொடர்பில் நிபுணர் ஒருவர் தெரிவிக்கையில், ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தால் இந்த வருடத்தின் 12 மாதங்களுமே உயர் வெப்ப நிலை வாசிப்பைப் பெறக் கூடிய சந்தர்ப்பம் உண்டு - என்றார்.
எல்-நினோ விளைவால் 1880 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 25 சதவீத வெப்பநிலை உயர்வு ஏற்பட்டுள்ளது. காலநிலை மாற்றங்கள், சூழலியல் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. கடல் மட்ட உயர்வு, பவளப்பாறை உயர்வு, நீர் வெப்பநிலை உயிர்வு என்பன பெரிய பிரச்சினையாக உள்ளன.
மனிதச் செயற்பாடுகளும் உலக காலநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என வெப்பநிலை ஆய்வாளர் தெரிவித்துள்ளார். இந்தக் காலநிலை மாற்றக் காரணிகள் 1950 ஆம் ஆண்டில் இருந்து ஏற்பட்டுள்ளன. (ஐ-ரி4)



# ...ன்று தேர்தல்

கண்காணிப்பு
...குப் பதிவு கண்
வீடியோவிலும்

... வாக்குப்பதிவு
...கு செல்ல சக்கர
...டுள்ளன. இதற்
...ரும் சக்கர நாற்
...து.

...டைபெறவும்,
...பதிவு செய்யவும்
செய்யப்பட்டுள்
...ளைச் சேர்ந்த 18
...வெளிமாநிலங்
...கப்பட்டுள்ளனர்.
...ஒதுக்கப்பட்ட
...பு பொறுப்பை

...ங்களில் உள்ள
...களில், 3 ஆயி

ரத்து 653 வாக்குச் சாவடிகள் பதட்டமானவை எனக் கண்டறியப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள 3 ஆயிரத்து 773 வாக்குச் சாவடிகளில் 433 மையங்கள் பதட்டமானவை எனக் கண்டறியப்பட்டுள்ளது. இங்கு துணை இராணுவப் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

பாதுகாப்பு பணிகளை மேற்பார்வையிடவும், பாது காப்பு பணியில் ஈடுபடவும் வெளிமாநிலங்களில் இருந்து 31 ஐ.பி.எஸ். அதிகாரிகள் தமிழகம் வருகை தந்துள்ளனர்.

வாக்குப்பதிவு முடிந்ததும் மின்னணு இயந்திரங்கள் சீல் வைக்கப்பட்டு வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு செல்லப்படும். அங்கு எதிர்வரும் 19 ஆம்; திகதி வாக்குகள் எண்ணப்பட்டு அன்றைய தினம் முடிவுகள் அறிவிக்கப்படும் எனவும் தமிழகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

(ஐ-ரி4)

# பேஸ்புக்கில் அறிமுகமாகியுள்ள உணர்வு குறியீடுகளைப் பயன்படுத்த வேண்டாம்

## பெல்ஜியம் பொலிஸார் எச்சரிக்கை

புரூசல்ஸ்,மே 16

பேஸ்புக்கில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள உணர்வுக் குறியீடுகளைப் பயன்படுத்த வேண்டாம் என பெல்ஜியம் பொலிஸார் அந்த நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். தனி நபர் பாதுகாப்பு கருதி இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் பேஸ்புக் நிறுவனத்தால் விருப்புத் தெரிவுடன், 6 உணர்வுக் குறியீடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

ஆனால், பெல்ஜியம் பொலிஸார், உணர்வுக் குறியீட்டின் மூலம் தனிநபர் உணர்வு வெளிக் கொணரப்படுவதுடன், தகவல் திரட்ட ஏதுவாக அமைகிறது. அத்துடன் இந்தத் தெரிவுகள் பிறருக்கும் பகிரப்படும் என்பதால், தனித்துவத்தைப் பாதுகாக்க விரும்புவோர் உணர்வுக் குறியீடுகளைப் பயன்படுத்த வேண்டாம் என அறிவுறுத்தியுள்ளனர்.


மேலும், இந்த உணர்வுக் குறியீடுகளைச் சேகரிக்கும் பேஸ்புக் தளம், உங்களைப் புரிந்து கொண்டு விளம்பரங்களைப் பிரசுரிக்கின்றது எனவும் பெல்ஜியம் பொலிஸார் தமது இணையத்தில் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் உணர்வு ரீதியான பிணப்பை ஏற்படுத்தும் விதத்தில் பேஸ்புக் செயற்படும். உங்களை மகிழ்விக்கும் பிரசுரிப்புக்களை வெளிப்படுத்தும். விளம்பர தரப்பினருக்கு இவ்வாறான குறியீடுகள் அதிக நன்மையளிப்பனவாகும். இவற்றின் மூலம் மக்களின் விருப்பு வெறுப்புக்களை உணர முடியும். இதன் மூலம் மக்களுக்கு தகுந்த விளம்பரங்களை வெளிப்படுத்த முடியும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.




உணர்வுக் குறியீடுகளின் பின்னர் விளம்பர நிறுவனங்கள் அதிக இலாபத்தைப் பெறக்கூடியனவாக உள்ளன. அத்துடன் பெரும்பாலும் ஏதோ ஒரு உணர்வை வெளிப்படுத்தக் கூடிய சந்தர்ப்பமாகவும் இது அமைந்துள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ-ரி4)



# ...ஏப்ரலில் ...வெப்பம்

...டியலில் கடந்த
...ந்த வருடம் ஏப்
...இல்லாத அள
...உச்ச அளவை
...அறிவித்துள்

...ர் ஒருவர் தெரி
...ள காலநிலை
...வருடத்தின் 12
... வெப்ப நிலை
...டிய சந்தர்ப்பம்

...ல் 1880 ஆம்
...ர் 25 சதவீத
...ஏற்பட்டுள்ளது.
...கள், சூழலியல்
...டுள்ளன. கடல்
...பாறை உயர்வு,
...யிர்வு என்பன
...க உள்ளன.
...களும் உலக
...த்தை ஏற்படுத்
...நிலை ஆய்வா
... இந்தக் கால
...ணிகள் 1950
...ந்து ஏற்பட்டுள்

(ஐ-ரி4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்சத்திரப் பொதுப் பலன்கள்

நட்சத்திரப் பொதுப்பலன்கள் என்ற தலைப்பில் நேற்று முன்தினம் உதயனில் பூரம், உத்தரம் நட்சத்திரங்களது பலன்களைப் பார்த்தோம். இன்று அத்தம், சித்திரை நட்சத்திரங்களது பலன்களைப் பற்றிப் பார்ப்போம்.

## அத்தம்

அத்தம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் நல்ல அறிவு பூர்வமான பேச்சுத் திறமையை உடையவராக இருப்பீர்கள். எந்த நேரத்திலும் சுறுசுறுப்பான மன நிலையைக் கொண்டிருப்பீர்கள். சேமிப்பில் ஆர்வம் கொண்டிருப்பீர்கள். திறமையான பேச்சால் சிறந்த நிர்வாகத் திறமை கொண்டவராய் விளங்குவீர்கள்.

திறமையாக மற்றவர்களிடம் வேலை வாங்குவதில் சமர்த்தராய் இருப்பீர்கள். கல்வியில் ஆர்வம் காட்டுவர்.

நாட்டியம், சங்கீதம் போன்ற கலைகளில் ரசிகத்தன்மை இருக்கும். வாயடித்தனமாகவும், விகடமாகவும் பேசும் இயல்பு கொண்டவர்கள். எவரிடமும் தானாக வலியச்சென்று பழகும் இவர்கள், தாயாரின் மீது அலாதி அன்பு கொண்டிருப்பர்.

1. அத்தம் முதல் பாதத்தில் பிறந்தவர் கலகம் செய்பவர், கர்வம் உடையவர், ஆசாரம் உடையவர், பசுக்களிடம் பிரிய முள்ளவர்.

2. அத்தம் இரண்டாம் பாதத்தில் பிறந்தவர் நல்ல குணமானவர், வாலிபத்தில் தாயை இழப்பவர், ஆடல் பாடலில் விருப்பம் உடையவர்.

3. அத்தம் முன்றாம் பாதத்தில் பிறந்தவர் பகைவர் போன்ற மனத்தை உடையவர், சிறுவயதில் தந்தையை இழக்கக்கூடியவர், பெரிய தந்திர சாலி வியாதியை உடையவர், வியாபாரி.

4. அத்தம் நான்காம் பாதத்தில் பிறந்தவர்கள் நன்னடைத்தை உடையவர், கொடையாளி, உயரமானவர், சந்தோஷி, மேன்மை, உடையவர், தாய்க்கு இனியவர், புகழ் உடையவர்.

## சித்திரை

சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பயன் எதிர்பாராமல் மற்றவர்களுக்கு உதவி செய்யும் குணத்தை உடையவராய் இருப்பீர்கள். மற்றவர்கள் தவறு செய்யும் போது அதை துணிந்து திருத்தவும் முயற்சி செய்வீர்கள். சுறுசுறுப்பான மனநிலையைக் கொண்டிருப்பீர்கள். சரியான நேரத்துக்கு உணவருந்த மாட்டீர்கள். சேமிப்பில் ஆர்வம் கொண்டு செயற்படுவீர்கள். சுத்தமான ஆடை அணிவது உங்களுக்கு மிகவும் பிடித்தமான விடயமாக இருக்கும். பலம் பொருந்திய உடல் உடையவர், அகன்ற மார்பை உடையவர், பிரியவசனம் உடையவர், நல்லகுணம் உடையவர், எல்லோருக்கும் நண்பர், திடகாத்திரம் உடையவர், முகத்தில் மரு உள்ளவர், அற்ப நித்திரை உடையவர், அதிகம், செலவழிக்க மாட்டார்.

துக்கம் உள்ளவர், முன்கோபி. தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்கும் இவர்கள், ஊர் சுற்றுவதில் மிகவும் விருப்பம் கொண்டவர்கள். கல்வி கேள்வியில் சிறந்து விளங்குவார்கள். தைரியம் நெஞ்சில் நிறைந்திருக்கும். எதிரியையும் நேசிக்கும் பரந்த உள்ளம் கொண்டவர்கள். பிறருடைய குணம் அறிந்து செயற்பட்டு தனக்கு வேண்டியதைச் சாதித்துக் கொள்வர்கள்.

1. சித்திரை முதல் பாதத்தில் பிறந்தவர் பொல்லாத காரியங்கள் செய்பவர், வியாக்கியானம் செய்பவர், சஞ்சாரி.

2. சித்திரை இரண்டாம் பாதத்தில் பிறந்தவர் நல்ல வார்த்தைப் பேசுபவர், தனது உடம்பைக் கவனித்துக் கொள்பவர், உயரமானவர், தவம் செய்பவர், சஞ்சல மனம் உடையவர்.

3. சித்திரை முன்றாம் பாதத்தில் பிறந்தவர் கீர்த்திமான், பராக்கிரமசாலி, வித்துவான், நல்லநடத்தையுடையவர், அறிவுள்ளவர்.

(தொடரும்)

# மே 18 இல் அணிதிரள்வோம்

முருகு கணபதி

வரலாற்றில் என்றுமே தமிழ் மக்களால் மறக்க முடியாத கோரமான, கொடூரமான இனப்படு கொலை இறுதியாக முள்ளிவாய்க்காலில் நடந்தேறியது.

இந்த இனப்படுகொலையின் இறுதி நாள் மே 18 என்பதாகும்.

உலக வரலாற்றில் தமிழர் வாழும் தேசங்களிலும் பிறநாடுகளிலும் உள்ள தமிழ் பற்றாளர்கள் இந்த மே 18 ஐ இருள் சூழ்ந்த இரத்தக்கறை படிந்த நாளாகக் கருதுகின்றனர்.

எம்முடன் வாழ்ந்த உறவுகளை ராஜபக்சாக்கள் தலைமையிலான அணியினர் கொன்று அழித்த நாள் இதுவாகும்.

இந்தக் கோரமான நாள் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட , சிறுவர்கள், முதியவர்கள், கர்ப்பிணிகள், மாற்றுத்திறனாளிகள், இயலாதவர்கள், நோயாளிகள், குடும்பத் தலைவர்கள் எனப் பல்வேறு உறவுகளும் இரத்தம் சிந்தி அழிந்த நாள்.

இதனைவிட இன்னும் ஆயிரக்கணக்கான உறவுகள் கையிழந்து, கால் இழந்து, முள்ளந்தண்டு வடம் பாதித்து ஒரு வேளை உணவுக்குக் கூட வழியில்லாது நாதியற்று இருப்பதைப் பார்க்கின்றோம்.

மேலும், இந்தப் போரினால் பல சிறுவர்கள், குழந்தைகள், பெண்கள் தாய் தந்தையரை இழந்து படும் வேதனைகளை நாம் சொல்லி ஆறமுடியாது.



பலர் ஊனமுற்றவர்களாகவும், மாற்றுத்திறனாளிகளாகவும் இன்னும் எவரது சிறுஉதவுமின்றி வீட்டில் முடங்கியுள்ளனர்.

உதவிகள் என்பதற்கு பதிலாக பிரதேச செயலகங்கள், கச்சேரிகளில் ஆவணங்களாக இவர்கள் உள்ளனர்.

ஒரு சில உதவிகளே இன்று பாதிக்கப்பட்டவர்களைச் சென்றடைகிறது.

மே18 இறந்த மக்களுக்காக நாம் அவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்திக்கின்ற நாள் ஆகும். அன்றைய நாள் ஒரு இனப்படுகொலை நாள். அதேபோல நாகர்கோவிலில் இடம் பெற்ற இனப்படுகொலை, நவாலியில் சென் பீற்றர்ஸ் தேவாலயத் தாக்குதல், நெடுந்தீவு குமுதினி படுகொலை, மிருசுவில் படுகொலை, மண்டைதீவுப் படுகொலை என கொலைத்தினங்கள் நீண்டு கொண்டே செல்கின்றன.

பல நாடுகளின் ஒன்றிணைப்புடன் வடக்கில் சிங்களதேசம் ராஜபக்ச தலைமையில் நடத்திய கொலை வெறி எம் மக்களின் ஒரு பகுதியை அழித்து நாதியற்றதாக்கிவிட்டது.

வெள்ளைக் கொடியுடன் சென்ற புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசனின் கொலையை அவரது மகன் பா.பார்த்தீபன் லண்டனில் வர்ணித்தபோது அங்கு சமூகமளித்திருந்த லிபரல்கட்சி, கொன்சவேட்டிக் கட்சி மற்றும் தொழிற்கட்சி உறுப்பினர்கள் கண் கலங்கினர்.

இதைச்சர்வதேசமும் உணரும். இவ்வாறாக தமிழன் தனக்கென சுயாட்சியுடன் வாழ வேண்டும் என்பதற்காக போராடிய மக்களின் விடிவு மே 18 இல் இருந்தே என்றோ ஒருநாள் மீண்டும் உருவாகும்.

எனவே, எதிர்வரும் 18 ஐ ஓர் அதிர்வு தினமாகப் பிரகடனம் செய்து, வடபால் எங்கும் எழுச்சியுடன் இந்தத் தினத்துக்கு உயிர்ப்பு கொடுக்க அனைத்துத் தமிழ் உறவுகளும் ஒன்று திரண்டு அணி திரளவேண்டும்.

ஒற்றுமையுடன் சர்வதேசத்துக்கு ஒரு செய்தி சொல்வோம்.

மே 18 ஐ வெற்றியின் படிக்கல்லாக முன்னெடுத்து அணி திரள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காசி நோக்கிய ஒரு பயணம்...

## அனுபவப் பகிர்வு

# பஞ்ச தீர்த்த யாத்திரை

லிங்கபுத்ரன்

('காசி நோக்கி ஒரு பயணம்' என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் 20 ஆம் பக்கத்தில் பிரசுரமான கட்டுரையின் தொடர்ச்சி இது.)

முதலில் கங்கை நீர், பிறகு பால், சந்தனம், தேன் ஆகியவற்றினால் அபிசேகம் செய்யப்பட்டது. அதன் பின் ஏழு அந்தணர்களுமாக இணைந்து மலர் அர்ச்சனை செய்தார்கள். மலர் மாலைகளை லிங்கத்தின் மேல் வளையங்களாக அலங்கரித்து. நாகாபரணம் சூட்டப்பட்டது. மலர் மாலைகளின் அலங்காரம் கண்ணைப் பறித்தது. அழகோ அழகு அத்தனை பேரழகு. லிங்கத்தின் தலையில் நாகமுடி சூடி ஆரார்த்தி இடம்பெற்றது. ஆரத்தியின் நிறைவில் ஒவ்வொரு வாசலின் வழியாகவும் அந்தணர்கள் வெளிப்பட்டு பக்தர்களுக்கு ஆசி வழங்கத் தொடங்கினார்கள்.

எங்கள் மனங்கள் எல்லாம் நிறைந்திருந்தது. இவ்வளவு தூரத்தில் இருந்து வந்து மிக அண்மையாக காசிநாதரைத் தரிசிக்கும் வாய்ப்புக் கிட்டியதை எண்ணி ஆனந்த வெள்ளத்தில் திளைத்திருந்தோம். வடக்கு வாசலினூடாக வந்த அந்தணரிடமிருந்து ஆசியும் பிரசாதமும் பெற்றுக்கொண்டு தெற்கு வாயிலுக் கூடாக வெளியேறினோம்.

காசியில் கங்கா பூசை மற்றும் விஸ்வநாதர் ஆலயத்தில் இடம்பெறும் சப்தரி பூசை என்பவற்றைக் கண்டுகளித்ததோடு புண்ணிய பயண காலத்தின் அரை வாசியை நிறைவு செய்துவிட்ட நிறைவுடன் ஆலயத்தை விட்டு வெளியேறினோம். விஸ்வநாதர் ஆலயத்துக்கு அருகில் காசி விசாலாட்சி ஆலயம் அமைந்திருந்தது. அங்கும் சென்று அன்னை விசாலாட்சியைத் தரிசித்த பின் மீண்டும் சைக்கிள் ரிக்சோக்களின் உதவியுடன் தங்கியிருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தோம்.

மறுநாள் அதிகாலை கங்கையில் புனித நீராடலுக்கான ஐந்து இடங்களுக்கும் சென்று நீராடி விட்டு, மதியம் அன்னபூரணி ஆலய அன்னதானத்துக்குச் செல்வதும், மாலையில் காசி மாநகரில் புகழ்பெற்ற வாரணாசி இந்து பல்கலைக்கழகத்தில் உள்ள சிவாலயம் உட்பட புகழ்பெற்ற ஆலயங்களுக்குச் செல்வதென்றும் பயண ஒழுங்கைச் சொல்லி பப்ளு சாஸ்திரியார் விடைபெற நாங்களும் உறங்கச் சென்றோம்.

முதல் நாள் குறிப்பிட்டபடி, படகோட்டி ஒருவரின் உதவியுடன் அதிகாலையில் கங்கையில் நீராடி சூரிய நமஸ்காரம் செய்வது அன்றைய நாளின் முதலாவது திட்டமாக இருந்தது. அவ்வேளையில் தனது தனிப்பட்ட அலுவல் ஒன்றின் நிமித்தம் பப்ளு எங்களிடமிருந்து தற்காலிகமாக விடைபெற்றிருந்தார்.

அதிகாலை 5 மணிக்கு நாங்கள் அனைவரும் அறையை விட்டு கீழிறங்கி தங்ககத்தின் வரவேற்புப் பகுதிக்கு வந்த வேளை, எமக்காக படகோட்டி காத்திருந்தார். அவர் எங்களுக்கு ஏற்கனவே அறிமுகமானவர். வாரணாசியில் நாங்கள் வந்த மறுநாள் எங்களை கங்காஸ்நானனம் செய்வதற்கு இவரது படகிலேயே பப்ளு அழைத்துச் சென்றிருந்ததனால், அவரை நாங்கள் இலகுவில் அடையாளம் கண்டு கொண்டோம்.

பேசிக் கொள்வதற்கு மொழி தடையாக இருந்தாலும் சைகைகளால் தொடர்பு கொண்டோம். அவர் முன்னே செல்ல, நாங்கள் தொடர்ந்து சென்று கங்கைக் கரைய அடைந்தோம்.

### பஞ்ச தீர்த்த யாத்திரை

கங்கை நதியின் ஓரத்தில் இருக்கின்ற 64 தீர்த்தக் கட்டங்களில், அஸ்சங்கம், தசாஸ்வமேதம், வரணசங்கம், பஞ்சகங்கா, மணிகர்ணிகா ஆகிய படித்துறைகளில் நீராடி சூரிய பகவானை வணங்கி அந்தத்தக் கரைகளில் இருக்கின்ற சிவாலயங்களில் வழிபடுவது பஞ்சதீர்த்த யாத்திரை என்று சொல்லப்படுகிறது. காசி யாத்திரை செல்வபவர்கள் மிக முக்கியமாகச் செய்யவேண்டியதொரு வழிபாட்டு முறைகளில் இதுவும் ஒன்று.

ஏற்கனவே குறிப்பிட்ட விடயங்களில் மீளவும் குறிப்பிட வேண்டியதொன்று – கீரிமலையில் இருக்கின்ற காசி விஸ்வநாதர் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த லிங்கங்கள் அனைத்தும் கங்கையில் தான்றோன்றிகளாக வந்தவை என்பதுவும், லிங்கத்தைப் போலவே கைலாயத்திலிருந்து வருகின்ற கங்கையோடு சிவ சின்னங்களில் ஒன்றாகிய உருத்திராக்கமும் கங்கையில் கிடைக்கும் என்ற செய்தியும் மனங்களில் ஆளப் பதிந்திருந்தது. அப்படி [illegible]களுக்குத் தட்டுப் பட்டால் இறையருளுக்கு அளவேயில்லை என்பது எங்கள் மூவரதும் உள்மனப் பிரார்த்தனையாக இருந்த போதிலும், எங்களில் ஒருவருக்கே அந்த அளப்பெரும் பாக்கியம் கிடைத்தது. எங்களோடு வந்திருந்த பிராமண நண்பருக்கு கங்கையின் பஞ்ச கங்கா பகுதியில் நீராடி எழுந்த போது உருத்திராட்சக் கொட்டைகள் கிடைத்தன.

முதலில் அஸ்சங்கம் என்று சொல்லப்படுகின்ற தீர்த்தக்கரையை அடைந்து படகில் உடைகளை வைத்து விட்டு, கையில் கொண்டு வந்த சிறு செம்புகளை (சூரிய நமஸ்காரத்துக்காக) எடுத்துக் கொண்டு நீரில் இறங்கினோம். பஞ்ச தீர்த்தக் கரைகளில் அஸ்சங்கம் எனப்படுவது, அஸ் நதி கங்கையுடன் கலக்கும் பகுதியாகும். வருண நதியும், அஸ் நதியும் சங்கமிப்பதனாலேயே காசிக்கு வாரணாசி (வருண + அசி) என்றபெயரும் ஏற்பட்டது. அஸ்சங்கத்தில் இருந்து தான் காசி திருத்தலப் பகுதி ஆரம்பமாகிறது. இந்தத் தீர்த்தக்கட்டம் காசியின் நுழைவுவாயில் என்று சொல்லப்படுகிறது. . பஞ்ச தீர்த்த யாத்திரையின் முதல் அங்கமாக அஸ்சங்கமத்தில் நீராடி, கையில் இருந்த செம்புகளில் நீர் நிரப்பி அதனைச் சூரிய பகவானுக்கு அர்ஜியம் செய்த பின், கரையில் இருக்கின்ற சங்கமேஸ்வர் ஆலயத்தை வணங்கி, அடுத்ததாக தசாஸ்வமேதம் என்ற தீர்த்தக்கரையில் நீராடி, சூரியனை வணங்குவதற்காக படகில் புறப்பட்டோம்.





பத்து அசுவமேத யாகங்களை பிரம்மன் இந்தப் பகுதியில் செய்ததால் தசாஸ்வமேத கட்டம் என இதற்குப் பெயர் வந்தது என்பது வரலாறு.

தசாஸ்வமேத தீர்த்தக்கரையில் நீராடி, சூரிய பகவானுக்கு அர்ஜியம் கொடுத்த பின்னர் அந்தக் கரையில் இருந்த சூலடங்கேஸ்வரர் என்ற சிவலிங்கத்தைத் தரிசித்து விட்டு, மூன்றாவதாக வாரணசங்கத்தில் நீராடுவதற்காகப் படகில் புறப்பட்டோம்.

வாரணசங்கம் எனப்படுவது, கங்கையுடன் வருண நதி சங்கமிக்கின்ற இடம் என்று குறிப்பிடப்படுகிறது. இந்தத் தீர்த்தக் கட்டத்தில் நீராடி, சூரியனை வழிபட்ட பின்னர் கரையில் இருக்கின்ற ஆதிகேஸ்வரரையும் வணங்கி அடுத்த தீர்த்தக்கட்டத்தை நோக்கிப் படகு நகர்ந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வண்ணத்துப்பூச்சியின் வருத்தம்!

அழகான தோட்டம் ஒன்றில், நிறையச் செடிகளும் மரங்களும் செழித்து வளர்ந்திருந்தன. வண்ண வண்ணப் பூக்கள் பூத்திருந்தன. தேனீக்களும் வண்ணத்துப் பூச்சிகளும் பூக்களைச் சுற்றி வட்டம் அடித்துத் தேனை உறிஞ்சின. ஆனால் வண்ணத்துப்பூச்சிகளுக்கு ஒரு வருத்தம். அதனால் அவை கூட்டம் போட்டுப் பேசின.

தேனீக்கள், பூக்களில் இருந்து அதிகமான தேனை எடுத்துவிடுவதால், எமக்குத் தேன் கிடைக்காமல் போகிறது. அதனால், ராணித் தேனீயைச் சந்தித்து ஓர் ஒப்பந்தம் செய்ய வேண்டியது கட்டாயம் என்றது ஒரு வண்ணத்துப்பூச்சி.

அதன்படி, ராணித் தேனீயைச் சந்தித்த வண்ணத்துப்பூச்சிகளின் தலைவர், ராணியாரே, நீங்கள் தேன்கூடு கட்டுவதன் காரணமாகப் பெரும் பகுதியான தேனை உறிஞ்சுவது சரியல்ல. பூக்களில் இருந்து இவ்வளவு தேனைத்தான் எடுக்க வேண்டும் என ஓர் ஒப்பந்தம் செய்து கொள்வோம் என்றது. இதைக் கேட்ட ராணித் தேனீ, எவர் எவருக்கும் கட்டுப்பாடு விதிக்க முடியாது. இதற்கு நான் சம்மதிக்க மாட்டேன் எனச் சொல்லிவிட்டு கூட்டுக்குள் சென்றுவிட்டது.

வருத்தத்துடன் திரும்பிய வண்ணத்துப்பூச்சிகளின் தலைவர், ஓர் இலையில் அமர்ந்தது. அங்கே வந்த வண்டு ஒன்று, ஏன் சோகமாக இருக்கிறாய்? என்று கேட்டது.

விடயத்தைச் சொன்ன வண்ணத்துப்பூச்சி, இந்த ராணித் தேனீ இவ்வளவு சுயநலமாக இருக்கும் என நினைக்கவில்லை என்றது.

அதற்கு வண்டு, நீ தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறாய். தேனீக்கள், தமக்காகத் தேனை எடுப்பது இல்லை. அவை சேகரிக்கும் தேன், பல லட்சம் மனிதர்களுக்கு உணவாகவும் மருந்தாகவும் பயன்படுகிறது. தமக்காக அல்லாமல், பிறருக்காக வாழ்பவர்களை நாம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்றது.

வண்டு சொன்ன விடயத்தில் இருந்த உண்மையைப் புரிந்துகொண்ட வண்ணத்துப்பூச்சி, ராணித் தேனீயைச் சந்தித்துப் பாராட்டுவதற்காக, மீண்டும் தேன்கூட்டை நோக்கிப் பறந்தது.



## சாம்பல் கலரிலும் கிளி!

கிளி என்றதும் அழகான பறவை, நாம் சொல்வதைச் சொல்லும், சர்க்கஸ் செய்யும், சோதிடத்தில் சீட்டு எடுத்துக் கொடுக்கும் என சில விடயங்கள் தெரியும். இதில், உலகம் முழுவதும் 315 வகையான கிளிகள் உள்ளன. ஒவ்வொன்றுக்கும் ஒரு தனித்திறன் உண்டு. குறிப்பாக, ஆபிரிக்காவில் உள்ள 'க்ரே பேரட்' என்ற கிளி இனத்துக்கு, நான்கு வயது குழந்தைக்குரிய அறிவு உள்ள தாம். நூற்றுக்கும் மேற்பட்ட வார்த்தை களை நினைவில்வைத்துச் சொல்லும். மனிதர்களின் பேச்சை அப்படியே உள்வாங்கிப் பேசும் ஆற்றல் கொண்டவை. இந்த 'க்ரே பேரட்', 50 ஆண்டுகள் வரை வாழக்கூடியவை.

## கருவிகளும் பயன்களும்!

கப்பல் செல்லும் திசையை அறிய
மரைனர்ஸ் கொம்பஸ் (Mariners Compass)

கடலின் ஆழத்தை அளக்க
ஃபாதம்மீட்டர் (Fathommeter)

விமானம் பறக்கும் உயரத்தை அறிய
ஆல்டிமீட்டர் (Altimeter)

மேகங்களின் திசை, உயரம் அறிய
நீபோஸ்கோப் (Nephoscope)

காற்றின் வேகம், திசை அறிய
அனிமோமீட்டர் (Anemometer)

காற்றின் ஈரப்பதத்தை அறிய
ஹைக்ரோமீட்டர் (Hygrometer)



## வரலாற்றில் இன்றைய தினம்

1568 - ஸ்கொட்லாந்து அரசி மேரி இங்கிலாந்துக்குத் தப்பி ஓடினார்.

1811 - ஸ்பெயின், போர்த்துக்கல் மற்றும் ஐக்கிய ராச்சிய கூட்டுப்படை அலுபெரிய போரில் பிரான்ஸைத் தோற்கடித்தது.

1877 - பிரான்ஸில் அரசியல் நெருக்கடி தொடங்கியது.

1929 - ஹொலிவூட்டில் முதன் முறையாக அக்கடமி விருது வழங்குதல் தொடங்கப்பட்டது.

1966 - கலாசாரப் புரட்சிக்கு வித்திட்ட மே 16 அறிவித்தலை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி விநியோகித்தது.

1969 - சோவியத்தின் றோபோ விண்கலம் வெனேறா 5 வீனஸில் தரையிறங்கியது.

1975 - எவரெஸ்ட் சிகரத்தையடைந்த முதற் பெண்மணியானார் யுங்கோ தாபி.

1997 - ஷயர் நாட்டின் ஜனாதிபதி மொபுடு செசெகோ நாட்டை விட்டுத் தப்பி ஓடினார்.

2002 - தமிழ் அரசியல் கைதிகளின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என இராணுவத் தளபதி தெரிவிப்பு.



## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்யும் செயலில் அவதானம் வேண்டும்..!

ஓர் அழகிய கிராமம்.அங்கு வாழ்ந்து வருகின்ற மக்கள் கூட்டத்திடை நடுத்தர வயதுடைய இளம் பெண்ணொருத்தியும் வாழ்ந்து வருகிறாள். தான் வளர்த்துவருகின்ற பசு மாட்டிலிருந்து பாலைக் கறந்து அதை ஒரு குடத்திலிட்டுத் தன் தலையில் சுமந்து கொண்டு அந்தக் கிராமத்தின் வழி நடந்து வியாபாரம் செய்து வந்தாள்.அதில் கிடைக்கின்ற வருமானம் தான் அவளது வாழ்வாதாரம். தான் ஏழையாக இருக்கின்ற சூழமைவுகள் இப்படித் தினமும் பால் விற்று வாழ்வைக் கொண்டு நடத்த வேண்டிய கட்டாயத்தைக் காலம் தந்ததை எண்ணியும் தன்னைப் போன்று அந்தக் கிராமத்தில் வாழ்கின்ற ஏனைய பெண்களெல்லாம் நல்ல ஆடை அணிகலன்களை அணிந்து சந்தோசமாக இருக்கிறார்களே என்ற கவலையின் தவிப்போடும் அவள் இருந்தாள்.

இந்த நிலையிலே வழக்கம் போலப் பாலைத் தலையில் சுமந்து கொண்டு கிராமத்தின் வீதி வழி நடக்கிறாள். வழக்கத்திற்கு மாறாக கால்கள் தன் வழியே நடப்பதற்கான உந்துதலை அவள் சிந்தனைகள் கொடுத்து விடுகின்றன. அவளை சுய உலகத்திலிருந்து தூக்கியெடுத்துக் கற்பனை என்ற உலகினுள் வைத்தும்விடுகிறது. சிந்தனைகள் அத்தனையும் வாழ்க்கைத் தரத்தை எப்படி முன்னேற்றலாம் என்ற வழியில் போகின்றன.

இன்று பாலை விற்று வருகின்ற பணத்தை வைத்துக் கொண்டு சில கோழிக் குஞ்சுகள் வாங்குவேன். அவை வளர்ந்து பெரிதாகும்.அவற்றை விற்பேன்.அதிலிருந்து வரும் பணத்தில் இரண்டு ஆட்டுக் குட்டிகளை வாங்குவேன். அவை வளர்ந்ததும் விற்று இன்னொரு பசு மாடு வாங்குவேன். பின்னர் பெரியதொரு மாட்டுப் பண்ணையை உருவாக்குவேன். அதில் வேலை செய்யப் பல பெண்களைப் பணிக்கமர்த்துவேன்.

கை நிறைந்த வருமானம் கிட்டும். பலவிதமான ஆடை அணிகலன்களையும் நகைகளையும் வாங்கி அணிவேன். கிராமத்தின் ஏனைய பெண்கள் எல்லாம் என்னைப் பார்த்து வியந்திருக்க இப்படி நடப்பேன் என்ற சிந்தனையின் முணு முணுப்பு வார்த்தைகளின் சீரோடு தலையில் சுமந்து வந்த பாற் குடத்தின் ஞாபகங்களை இழந்துவிட. மறந்துவிட அதைப் பற்றிப் பிடித்திருந்த கைகள் இயல்பாக அதிலிருந்து விலகின.கற்பனை மகிழ்வின் உச்சம், ஏனைய பெண்கள் எல்லாம் என்னைப் பார்த்து வியந்திருக்க இப்படி நடப்பேன் என்ற சிந்தனையின் வழியே கைகளை முன்னும் பின்னுமாக ஆசுவாசமாக விசுக்கி நடந்திருக்கப் பணித்தும் விட்டது.

அவள் நடந்த நடையின் ஆரவாரத்தில் தலையில் இருந்த அனைத்துப் பாலும் அலைபாய்ந்து கரைபுரள கீழே கொட்டியது. குடமும் உடைந்தது.சிந்தனையின் செயலூக்கமும் அவளின் ஏழ்மை என்ற சமூகத்தின் தோற்றமும் அன்றைய பால் வியாபாரத்தையும் அதற்கு ஆதாரமாக அவளோடு பயணித்திருந்த பாற் குடம் என்ற மூலதனத்தையும் இழக்கச் செய்தன. புதிதாகக் குடம் ஒன்றை வாங்க முடியாத ஏது நிலையையும் ஏற்படுத்திவிட்டது.

இப்போது அந்தச் சூழ்நிலைகள், ஒன்றை அவளுக்குப் பாடமாக சில விடயங்களைத் தெளிவுபடுத்தின. என்ன தெளிவு அது...? எந்த ஒரு காரியமும் நடந்து முடியும் முன்பாக அது தொடர் பில் சிந்தனையின் போக்கில் சுய மதிப்பீடு இன்றி, சுய மீள்தலின்றி அதைத் தாண்டியதான திட்டங்களைக் கணிப்பிடக்கூடாது என்பது தான் அது. அவள் அதை உணர்ந்தாள். வாழ்வில் அதன் பின் தோற்றல் இன்றி வென்றாள்.

ஆக,எந்த ஒரு செயலில் ஈடுபட்டாலும். அது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். திட்டமிடல் வேண்டும். தங்களின் தற்போதைய நிலை தொடர்பிலும் அதிலிருந்து மீள்வதற்கான செயல் முனைப்புக்கள் தொடர்பிலும், தங்களின் தற்போது வரையான செயற்பாடுகளின் பின்னூட்டல் தொடர்பிலும் சுயமதிப்பீடு மேற்கொள்ள வேண்டும்.




இடையில் வேறு சிந்தனைகள், நினைவுகள் வந்தால், தை பட்டால் நஷ்டமே.இதைப் புரிந்து கொள்ள வேண்டும் வட மாகாண சபை என்ற அழகிய இள நங்கையும் பூப் படை இரண்டு வருடங்கள் கடந்துவிட்டன. தமிழர்களின் வ வுரிமை தொடர்பில் அவள் சுமந்து செல்கின்ற தலைமைத்து களின் வழி வெளிப்படுகின்ற அல்லது அவர்களின் பதவி நி என்ற தாற்பரியங்களின் வழி செய்ய வேண்டிய செயல்க கனதி என்பதும் கடமை உணர்வு என்பதும் வினைத் திற வெளித்தெரியவில்லை. மாறாக இந்தக் கதையிலே வருகி பெண் மகளைப் போன்று தன் நிலையெண்ணித் தி மிட்டு முன்நகர்தலின்றி வேறு சிந் தனைகளின் மேலீட் ஆட்பட்டுப் போய்க் கிடப்பதைக் காணமுடிகின்றது. தமிழர் தலைமைத்துவங்களாகக் கிடைத்த அதிகாரத் ர் அனுமதியுமின்றி இன மீளலுக்காக முயன்று பார்த் செயலால் அடிக்கத் தொடங்கினால் வட புலத்தின் திரிச நிலைக்கான மூலங்கள் தானாய்த் துலங்கும்.



உடுவிலூர் கலா

ஓடிக் கொண்டிருக்கும் அவசர உலகில் மகளிர் அமைப்புக்களின் சேவை மிகவும் காத்திரமானது மட்டுமல்ல, அவசியமானதும் கூட. இன்று மகளிர் இல்லாத இடமே இல்லை. ஆண்களால் முடியாத பலவற்றை பொறுமையோடு சாதனை படைக்கின்றனர் பெண்கள். அரச பணிமனைகளில் ஏராளமான பெண்கள் பணியிலுள்ளனர். பல பெயர்களோடு மகளிர் அமைப்புக்களும் இயங்குகின்றன. ஆனாலும், கிராமங்கள் தோறும் மகளிர் அமைப்புக்கள் உள்ளனவா? அவை சிறப்பாகச் செயற்படுகின்றனவா? என்ற கேள்விகளுக்கு விடைகளே இல்லை.

இன்றைய சமுதாயம் எமது பண்பாட்டையும், கலாசாரத்தையும் ஆழத்தோண்டிப் புதைத்து விட்டுப் புதிய புதிய கலாசாரங்களைத் தோற்றுவிக்கிறது. இந்தக் கலாசாரப் பிரசவம் பெண்களின் வாழ்வையே கேள்விக்குறியாக்குகின்றது. இந்த நிலையில் மகளிர் அமைப்புக்களின் சேவை, காலத்தின் கட்டாயமானது. பெண்கள் கல்வியில் சிகரத்தைத் தொட்டுவிட்டனர். ஏராளமான கல்வியாளர்களைக் கொண்ட கிராமங்களில் இன்று சனசமூக நிலையங்கள் இல்லை. சனசமூக நிலையங்கள் இருந்தும் சிறந்த நிர்வாகமோ, நாளாந்தப் பத்திரிகைகளோ இருப்பதில்லை. சனசமூக நிலையங்கள் ஆழ்ந்துறங்குவதால், சண்டித்தனங்கள் அதிகரித்து விட்டன. கிராமங்கள் தோறும் சனசமூக நிலையங்கள் சீராக இயங்க வேண்டும். அதில் மகளிர் அமைப்பு ஒரு பிரிவாக இயங்க வேண்டியது அவசியமானதாகும்.

சனசமூக நிலையம் இயங்குதோ இல்லையோ மகளிர் அமைப்புக் கட்டாயம் இயங்க வேண்டும். மகளிர் அமைப்பில் கிராமத்துப் பெண்கள் அனைவரும் அங்கத்தவர்களாக இணைய வேண்டும். மகளிர் அமைப்புக்கான உதவித் திட்டங்கள் நிறைய இருந்தும் பல கிராமங்கள் அவற்றைப் பெற்றுப் பயனடைவதில்லை. ஒரு கிராமத்தில் மகளிர் அமைப்புச் சீராக இயங்கும்போது, பெண்களுக்கிடையே ஒற்றுமையும் பரஸ்பர விசுவாசமும் ஏற்படும். பல செயற்பாடுகள் இன்று மகளிர் அமைப்புக்களாலேயே நிறைவடைகின்றன. மகளிர் அனைவரும் ஒன்றிணைந்து ஒவ்வொருவரது தேவைகள், வேதனைகள், துன்பங்கள் யாவற்றையும் அறிந்து பகிர்ந்து கொள்ள முடியும். இதனால் ஒருவருக்கொருவர் உதவுவதோடு இக்கட்டான நேரத்தில் கை கொடுப்பவர்களாகவும் மாறிவிடுவர். பெண்கள் சிறுகுழுக்களாக இணைந்து சிறு சிறு சேமிப்பு, சில கைத்தொழில்கள் போன்றவற்றை நடைமுறைப்படுத்தி, ஒவ்வொரு பெண்களின் தேவைகளையும் நிவர்த்தி செய்யலாம். பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளைச் செய்யலாம். அழிந்துபோன, அருகி வருகின்ற கைப்பணிகளுக்குப் புத்துயிர் கொடுக்கலாம். பெண்களின் கூட்டிணைப்பு, கிராமத்தின் தேவைகளை நிறைவேற்ற உதவும். இப்போது மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள், கைப்பணிச் சங்கங்கள் என்பன பெண்களை ஊக்குவிக்கப் பல உதவித் திட்டங்களையும், சுய தொழில் ஊக்குவிப்புக்களையும் செய்து வருகின்றன. இவை பற்றித் தெரியாமலே பல பெண்கள் தொலைக்காட்சி முன் சீரியல் பார்த்து மகிழ்ந்து காலத்தைக் கழிக்கின்றனர். பெண்களுக்கான தொழிற்பயிற்சிகள் அவர்களைச் சொந்தக் காலில் நிற்கச் செய்கின்றன. இவற்றுக்கெல்லாம் மகளிர் அமைப்புக்களின் அங்கத்துவமே சிறந்தது.

## கைகொடுப்போம் பெண்களே வாரீர்!

மகளிர் அமைப்புக்கள் கிராமங்கள் தோறும் கட்டாயமாக இயங்கித் தமது சேவையை விரிவுபடுத்தி சமூக அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மகளிர் அமைப்புக்களின் வலிமை, பாலியல் வன்முறைகளைக் கூட அழித்துவிடும். மகளிர் அமைப்புக்கள் யாவும் ஒன்றுடன் ஒன்று கைகோர்த்துச் செயற்பட வேண்டும். ஒவ்வொரு பெண்களின் நலனிலும் பெண்கள் அமைப்புக் கரிசனையுடன் செயற்படும்போது வன்முறைக்கு இடமில்லை. இன்றைய சமூகச் சீரழிவுகளை முடிவுக்குக் கொண்டுவரப் பெண்கள் அமைப்புக்களை உருவாக்கி துரிதமாகக் களமிறங்க வேண்டும். ஒரு நாளின் ஒவ்வொரு வினாடியையும் வீணடிக்காமல் பயனுள்ளதாகக் கழிக்க வேண்டும். முகநூலிலும் இணையங்களிலும் மூழ்கி அறிவை மழுங்கடிக்காமல் மேலும் விரிவுபடுத்த புதிய புதிய காரியங்களைச் செய்ய மகளிர் அமைப்புக்களின் சேவை மகத்தானது. ஒவ்வொரு பெண்களும் ஒன்று சேர்ந்து ஓர் அமைப்பை உருவாக்கி நட்புறவைப் பலப்படுத்தி ஏனைய அமைப்புக்களுடன் இணைவதன் மூலம் அறிவு விருத்தியடைவது மட்டுமல்ல, நேரமும் வீணாகாமல் பயனுடையதாகின்றது.

விதவைகள், நலிவடைந்த பெண்கள், அநாதைச் சிறுமிகள் போன்றோர் இன்று அவல நிலையில் வாழ்கிறார்கள். இவர்களை அரவணைக்கவும், வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் மகளிர் ஒன்றிணைய வேண்டும். எமது பெண்கள் படும் வேதனையைக் கண்டும் காணாதவர் போல் வாழாது அவர்களை ஆற்றவும் தேற்றவும் பெண்கள் நாமே தயாராக வேண்டும். பகிர்ந்துண்டு வாழ வேண்டும். நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பெண்களுக்குத் எம்மால் முடிந்ததைச் செய்து மனநிறைவுடன் வாழ வேண்டும். தனியே செய்வது கடினம். ஒன்றுகூடி ஓர் அமைப்பாக இணைந்து செயற்படும்போது பலம் பெரிதல்லவா? ஆக, பெண்களே ஏனைய பெண்களைத் தாங்கவும், அவர்களுக்குத் துன்பம் நேரும்போது உதவிக்கரம் நீட்டவும், வீணடிக்கும் நேரத்தைப் பயனுள்ளதாக்கவும், அறிவை வளர்த்துக் கொள்ளவும் இணைவோமா? ஆண்களின் தலையீடுகள் இல்லாமல் வாழவும், ஒவ்வொரு பெண்களினதும் தேவைகளை நிறைவேற்றவும் எம்மை நாமே ஆயத்தப்படுத்த மகளிர் அமைப்புக்களை உருவாக்கி, பதவிக் கதிரைகளுக்கு தலையசைக்காது மனித நேயத்தோடு பணி செய்ய வேண்டும். பெண்களே நீங்கள் தயாரா...? மகளிர் சக்தி மகத்துவமானது. ஒன்றிணைந்து மனித நேயத்தோடு ஏனைய பெண்களைத் தாங்கி வாழ்வோம். கூடி வாழ்ந்தால் கோடி நன்மை அல்லவா... கூடி இணைந்து எமது சக்தியை ஒன்றுதிரட்டி வீட்டுக்கும் சமுதாயத்துக்கும் சேவை செய்யவென புறப்படுங்கள் பெண்களே...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# எது உயர்ந்த புத்தகம்?

ஒரு சமயம் இந்திய தேசியக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூரும், புகழ்பெற்ற வங்காள நாவலாசிரியர் சரத்சந்திரரும் சுவையாக உரையாடிக் கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் அவர்களின் பேச்சு முடிந்தது. சரத் சந்திரர் வெளியே வந்தார்.

அப்போது... வெளியே காத்திருந்த ஒரு புத்தக வெளியீட்டாளர் அவரை நெருங்கி, "ஐயா... என்ன நீங்கள் தாகூரோடு சமமாக உட்கார்ந்து பேசுகிறீர்கள்? இலக்கியத்தில் தாங்கள் தாகூரை விட உயர்ந்தவர். தங்களின் நூல்கள் இருபதினாயிரம் வரை விற்பனையாகின்றன. தாகூரின் நூல்கள் ஆயிரம் கூட விற்பனையாவதில்லை" -என்றார்.

அதற்கு சரத் சந்தர், "எனது நூல்களை உம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள் தான் படிக்கின்றனர். ஆனால் தாகூரின் நூல்களை என் போன்றவர்களே படிக்கின்றனர்" - என்றார். தாகூரை மட்டம் தட்டிப் பேசிய அந்தப் புத்தக வெளியீட்டாளரின் முகம் தொங்கிப் போயிற்று.





# இசைத்துறையில் சாதனை படைக்கும் அனிருத்

வரிசையாக ஹிட் அல்பங்களைத் தந்து வரும் அனிருத் தற்போது சிவகார்த்திகேயன் நடிக்கும் "ரெமோ", ரிஷிகேஷ் கதாநாயகனாக நடிக்கும் "ரம்" ஆகிய படங்களுக்கு இசை அமைத்து வருவதோடு, அடுத்து அஜித் நடிக்கும் படத்துக்கும் இசை அமைக்கவிருக்கிறார். திரைப்படங்களுக்கு இசை அமைத்து வருவதோடு, தனியாக இசை நிகழ்ச்சிகளை நடத்துவதிலும், இசை அல்பங்களைத் தயாரித்து வெளியிடுவதிலும் ஆர்வத்துடன் செயற்பட்டு வருகிறார் அனிருத்!.

இசைத் துறையில் தனக்கென ஓர் இடத்தை பிடித்துள்ள அனிருத் இனி உருவாக்கப்போகும் அல்பங்கள் மற்றும் இசை நிகழ்ச்சிகளின் உரிமையை பிரபலமான சொனி நிறுவனம் வாங்கியுள்ளது. இதற்காக சொனி நிறுவனத்துக்கும், அனிருத்துக்கும் இடையில் அண்மையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதாவது திரைப்படப் பாடல்கள் தவிர்த்து அனிருத் இசை அமைக்கும் அனைத்துப் பாடல்களையும், இசை நிகழ்ச்சிகளையும் இனி சொனி நிறுவனம் தான் வெளியிடும்.



# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 4 | | 2 |
| | | | 7 | | | | 6 | 1 |
| | 2 | | 1 | 5 | | | | 7 |
| | | 9 | 2 | | | | | |
| 4 | | | 6 | 3 | 7 | | | 9 |
| | | | | | 9 | 7 | | |
| 7 | | | | 4 | 1 | | 8 | |
| 2 | 3 | | | | 6 | | | |
| 5 | | 4 | | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 8 | 9 | 3 | 7 | 2 | 4 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 3 | 7 | 9 | 2 | 4 | 1 | 8 | 5 | 6 |
| 2 | 8 | 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 |
| 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 2 | 3 | 7 |
| 5 | 9 | 7 | 3 | 2 | 4 | 6 | 1 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 9 | 1 | 8 | 2 |
| 9 | 1 | 2 | 5 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 8 | 3 | 4 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



காட்டுப்பயல்

**சிரிக்க வைக்கத் தான் மற்றவர்கள் தயவு வேண்டும்
புன்னகைக்க நாம் நினைத்தாலே போதும்**



**மேடம்:** முக்கியமான பணியை மறக்கும் சூழ்நிலை ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும். பொது விடயத்தில் கருத்து சொல்ல வேண்டாம்.

**இடபம்:** தன்மானத்துக்குச் சோதனை ஏற்படலாம். தொழில், வியாபார நடைமுறை தாமதகதியில் இருக்கும். இலாபம் சுமாராக இருக்கும். உடல்நலனில் அக்கறை காட்டி வருவீர்கள்.

**மிதுனம்:** மனதில் தைரியம் மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். வருமானம் திருப்தியளிக்கும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.

**கடகம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் பேசுவர். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். மனைவியின் அன்பு மனதை மகிழ்விக்கும். நண்பர்களால் நன்மை உண்டாகும்.

**சிங்கம்:** குடும்பத்தினர் அன்பு கண்டு மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் விற்பனை உயரும். ஆதாயம் பன்மடங்கு அதிகரிக்கும். பெண்கள் வெகுநாள் வாங்க நினைத்த பொருளை வாங்குவர்.

**கன்னி:** செயல்களில் கவனக் குறைவு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி உருவாகும். மிதமான பணவரவு கிடைக்கும். உறவினர் விடயத்தில் கருத்துச் சொல்ல வேண்டாம்.

**துலாம்:** தாயின் அன்பும், ஆசியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி [illegible] எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். நண்பருடன் விருந்து விழாவில் பங்கேற்பீர்கள்.

**விருச்சிகம்:** சிறு பணியையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். சமூகத்தில் கௌரவம் கூடும். பொன், பொருள் சேர்க்கை அதிர்ஷ்டகரமாகக் கிடைக்கும்.

**தனுசு:** விரும்பாத விடயத்தில் ஒதுங்கி இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும். புத்திரரின் நற்செயல் பெருமையைத் தேடித் தரும்.

**மகரம்:** பெருந்தன்மையுடன் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். வருமானம் சுமார். எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் ஏற்படலாம். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை.

**கும்பம்:** சமூகப் பணிகளில் ஈடுபாடு உண்டாகும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். உறவினரால் உதவி உண்டு. சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.

**மீனம்:** மனதில் சந்தோசம் நிறைந்திருக்கும். தொழிலில் வருமானம் திருப்திகரமாக நிறைவேறும். பூர்வீகச் சொத்து மூலம் ஆதாயம் பெறுவீர்கள். வெளியூர் பயணத்தால் இனிய அனுபவம் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெந்தயப் பணியாரம்



### தேவையானவை

இட்லி அரிசி - 200 கிராம்
அன்னாசிப் பழம் நறுக்கிய துண்டுகள் - ஒரு கப்
வெந்தயம், உளுத்தம் பருப்பு - தலா ஒரு கரண்டி
எண்ணெய்- 100 மி.லீ
உப்பு - தேவையான அளவு.

### செய்முறை

அரிசி, வெந்தயம், உளுத்தம் பருப்பு ஆகியவற்றை ஒன்றாக ஊற வைத்து, பசுந்தாக அரைக்கவும். அன்னாசித் துண்டுகளைத் தனியாக அரைத்துக் கலக்கவும். உப்புச் சேர்த்துக் கலந்து, பணியாரக் கல்லில் எண்ணெய் விட்டு, மாவை ஒரு சிறு கரண்டியால் ஊற்றி, பொன்னிறமாக வேக வைத்து எடுக்கவும்.

**நாளை**
**வைகாசி-04**
செவ்வாய்க்கிழமை - 17.05.2016
திதி: ஏகாதசி
மு.இ.07.28 வரை
நட்சத்திரம்: உத்தரம்
மு.ப.09.37 வரை
ராகுகாலம்:
02.53-04.23 வரை
சுபநேரம்:
10,23-11.53 வரை
ஏகாதசி விரதம்

# அழகான சமையல் அறைக்கு



**சுத்தமான குடி தண்ணீர்:** சுத்தமான குடிதண்ணீர் உடல் ஆரோக்கியத்துக்கு அவசியம். இதனால் சமையலறையில் குடிதண்ணீர் சுத்திகரிப்புக் கருவி பொருத்த வேண்டும்.

**குப்பைத்தொட்டி:** சிலர் சமையலறையில் தேவையற்ற குப்பைகளை எங்கே போடுவது எனத் தெரியாமல் ஆங்காங்கே போட்டு வைத்து இருப்பார்கள். இது பார்ப்பவரை முகம் சுளிக்க வைக்கும். இதனைத் தவிர்க்க அங்கு குப்பைத்தொட்டி வைக்கப்பட வேண்டும்.

# மரக்கறி வடிவில் பாத்திரம்



மரக்கறி வடிவில் பாத்திரம் அறிமுகமாகியுள்ளது. பூசணிக்காய் வடி வில், வண்ணமயமான வேலைப்பாடுகளுடன் பாத்திரங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. மூடியும் உள்ளது. இவற்றின் விலை 650 ரூபா தொடக்கம் 750 ரூபா ஆகும்.

இது புதுசு




# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 800 | 700 | 700 | 700 |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 500 | 300 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 600 | 700 | 500 | 450 |
| சுறா | 500 | 800 | 600 | 800 | 600 | – | 600 |
| சீலா | 300 | 500 | 400 | 500 | 400 | 400 | – |
| விளை | 650 | 500 | 400 | 500 | 500 | 500 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 300 | 500 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 450 | 400 | – |
| ஓரா | 400 | 350 | – | – | 300 | 400 | – |
| திரளி | 300 | 200 | 200 | 200 | 200 | 300 | 350 |
| நகரை | 250 | 300 | – | 250 | 600 | – | 350 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 250 | 200 | – | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 300 | 250 | 200 |
| மதனம் | 150 | 250 | 180 | 300 | 250 | – | 250 |
| கொய் | 100 | 150 | 60 | 80 | 100 | 100 | – |
| பாலை | 400 | 300 | 250 | 350 | 400 | 400 | – |
| வாழை | 100 | 200 | 200 | 400 | 300 | 200 | – |

# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | – | 80 | 80 | 100 | – | 40 | 70 |
| கத்தரி | 90 | 60 | 80 | 100 | 100 | 80 | 70 | 50 |
| கரட் | 100 | 80 | 80–200 | 100 | 120 | 100 | 70 | 130 |
| மரவள்ளி | 50 | 60 | 60 | 60 | 60 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 150 | 80 | 80 | 140 | 140 | 60 | 90 | 80 |
| பாகல் | 120 | 100 | 130 | 140 | 140 | 120 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 80 | – | 60 | 60 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 90 | 80 | 90 | 75 | 75 |
| சி.வெங்காயம் | 90 | 120 | 100 | 140 | 100 | 140 | 100 | 100 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 40 | 40 | 15 | 15 |
| தக்காளி | 160 | 160 | 140 | 180 | 160 | 160 | 140 | 140 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 | 40 | 40 | 30 | 35 | 30 |
| கீரை | 30 | 30 | 40 | 15 | 30 | 30 | 25 | 25 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 30 | 20 | 30 | 20 | 20 |
| பச்சை மிளகாய் | 80 | 100 | 100 | 120 | 80 | 100 | 60 | 100 |
| புடோல் | 80 | 50 | 120 | 60 | 60 | 100 | 30 | 60 |
| கோவா | 100 | 80 | 100 | 120 | 100 | 100 | 90 | 80 |
| வெண்டி | 80 | 60 | 80 | 120 | 100 | 80 | 50 | 50 |
| போஞ்சி | 180 | 160 | 200 | 180 | 180 | 240 | – | – |
| லீக்ஸ் | 140 | 120 | 100–160 | 120 | 140 | 120 | 100 | 90 |
| தேங்காய் | 40 | 20 | 50 | 40 | 30 | 30 | 15–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 80 | 90 | 80 | 90 | 75 | 100 |
| தேசிக்காய் | 500 | 380 | 600 | 350 | 400 | 600 | 350 | 300 |
| வல்லாரை | 15 | 15 | 10 | 15 | 10 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 100 | 50 | 200 | 140 | 120 | 80 | – | 80 |
| இராசவள்ளி | 150 | 140 | 180 | 150 | 140 | – | 110 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 360 | 150 | 150 | 120 | 240 | 150 | 450 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியாவில் நடந்த மாநாட்டில் விருது வென்ற ஹமீடியா நிறுவனம்

முன்னணி ஆடவர் ஆடைத்தெரிவான ஹமீடியாவானது மலேசியாவின், கோலாலம்பூர் நகரில் குளோபல் கோல்டன் டைகர் விருதுகளில் பிரகாசித்தது. இந்த மாநாட்டில் Retailer of the Year d Fashion & Lifestyle என்ற விருதை ஹமீடியா பெற்றது. ஹமீடியாவின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் ஹுசைன் சாதிக் Retail Leadership என்ற விருதை வென்றார். சந்தைப்படுத்தலில், சி.எஸ்.ஆர் விளம்பரப்படுத்தல் மற்றும் சமூகப் புத்தாக்கம், கல்வி மற்றும் கல்விசார் செயற்பாடுகளில் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் மத்தியில் தலைமைத்துவ மட்டங்களை அங்கீகரிப்பதாக கோல்டன் குளோப் டைகர் விருதுகள் உள்ளன.

ஹமீடியாவுக்கு Retailer of the Year விருது கிடைத்தமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஹமீடியாவின் முகாமைத்துவப் பணிப்பாளர் பௌஸ் ஹமீட் (ஆசிய பசுபிக் தொழில்முனைவோரில் மிகச் சிறந்த தொழில்முனை வோருக்கான விருது வென்றவர்) இலங்கையின் ஆடவர் தெரிவில் முன்னிலையில் திகழும் ஹமீடியாவுக்காக வருடத்தின் சிறந்த Retailer விருதை வென்றமை எனக்கு மகிழ்ச்சியைத்தருகின்றது. நவீன வடிவங்களையும், சிறப்பான ஆடைகளையும், இலங்கையில் ஆண்களுக்கான அனைத்துத் தெரிவு களையும் வழங்குவதும், தமது அபிலாசைகளுக்குப் பொருத்தமானதாக சிறந்த தோற்றத்தை வழங்குவதும் எமது நோக்கமாகும்.



தையல், ஏற்கனவே தைத்த ஆடைகள் என பல்வேறு தெரிவுகளையும் அதன் காரணமாகவே நாம் வழங்குகின்றோம். எமது புத்தாக்க சந்தைப்படுத்தல் உபாயங்கள் மற்றும் வாடிக்கையாளர் என்ற எண்ணக்கரு என்பன எமது வாடிக்கையாளருடன் சிறந்த உறவை ஏற்படுத்தியுள்ளன. எமது பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் ஹுசைன் சாதிக்கிற்கும் நான் பாராட்டுத் தெரிவிக்க விரும்புகின்றேன். எமது அணியின் மிகவும் முக்கியமான உறுப்பினராகவும், எமது வெற்றிக்குப் பங்களிப்பவராகவும் உள்ளார். இரண்டு கோல்டன் குளோப் டைகர் விருதுகளை வென்றமை உள்ளூர் மற்றும் பிராந்திய ஆண்கள் ஆடைத்தெரிவில் ஹமீடியா கொண்டுள்ள சாதகத் தன்மையை விளக்குகின்றன. நாம் மேலும் பல உயரங் களைத் தொடுவதற்கு இந்த விருதுகள் உதவும் என்றார்.

1949ஆம் ஆண்டு ஹமீடியா ஸ்தாபிக்கப்பட்டு, இலங்கையின் குடும்பத் தெரிவாக மாறியது. ஆண்களுக்கான உயர்தர, நபர்களுக்கேற்ற வடிவமைப்பு மற்றும் ஏற்கனவே தைத்த உடைகள், என்பவற்றுடன் பல்வர்த்தக நாம உற்பத்திகளுக்குப் பிரபலமானதாக உள்ளது. ஒவ்வொரு காட்சியறையிலும் நேர்நிலையான மற்றும் தனித்துவமான அனுபவத்தை அனைத்து வாடிக்கையாளர்களும் பெறுவதை உறுதி செய்வதற்காக அளப்பரிய தரத்தில் சேவைகளை வழங்குவதில் ஹமீடியா பெருமை கொள்கின்றது. இலங்கையில் 32இற்கும் மேற்பட்ட கிளைகள் வலையமைப்பின் ஊடாக மாலைதீவுகள் மற்றும் ஆஸ்திரேலியாவில் கிளைகளைத் திறந்து சர்வதேச ரீதியிலும் தமது வலையமைப்பை விஸ்தரித் துள்ளது.

இந்த விருதைப் பெறுவதில் நான் மிகுந்த பெருமை அடைகிறேன். என்னுடைய வெற்றிக்குக் காரணம் ஹமீடியா. இளம் பயிற்சியாளராக நாம் இணைந்த போது 1984ஆம் ஆண்டு முதல் அதுவே என்னை வளர்த்து விட்டது. நிறுவனத்தின் புத்தாக்க முயற்சிகள் மற்றும் வாடிக்கையாளர் பராமரிப்புடன் இணைந்ததாக, எனது எண்ணங்களையும், சிந்தனைகளையும் வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம் எமக்கு உள்ளது என பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் ஹுசைன் சாதிக் தெரிவித்தார். ஹமீடியாவின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளராக ஹுசைன் சாதிக் உள்ளார்.

அலிப் முதலீட்டு நிறுவனத்தின் ஸ்தாபக பணிப்பாளராகவும் அவர் உள்ளார். குழு முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு நேரடியாக அறிக்கைப் படுத்துவதன் மூலம், நிரூபிக்கப்பட்ட நிபுணத்துவத்துடன் பல்வகைத் தன்மையான, அர்ப்பணிக்கப்பட்ட கூட்டுறவு நிறைவேற்றுப் பணிப்பாளராக அவர் உள்ளார். ஆண்களின் ஆடைத்தெரிவு மற்றும் சிக்கலான செயற்றிட்டங்களை வெற்றிகரமாக முகாமை செய்யும் நிறுவனத்தின் இலக்குகளையும், குறிக்கோள்களையும் நோக்கி செயற்பட்டு வருகின்றார். உற்பத்தித் திறன் மற்றும் செலவு குறைப் புரூபவ் மற்றும் கூட்டாண்மை மனித வளங்களையும், நிறுவனத்தின் பெயரையும் முன்னிறுத்துவதில் பெரும் பங்காற்றியுள்ளார். கடந்த வருடங்களில், வர்த்தகம் மற்றும் சமூகத்தில் மிகவும் முக்கியமான பிரமுகராக அவர் பிரபலமடைந்துள்ளார். (த)

# லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் மருத்துவ ஆய்வுகூடத்துக்கு ஐ.எஸ்.ஓ சான்று

தனது நோயாளர்களுக்கு முறையான சிகிச்சைகளை வழங்குவதற்கான மருத்துவ முடிவுகளை மருத்துவர்களுக்கு வழங்குகின்றன. முறையான சிகிச்சை மற்றும் நோயாளர்களை மோலாண்மை செய்வதற்கு விரைவானதும், துல்லியமானதுமான மருத்துவ உதவிகளும் அத்தியாவசியமாகும்.



லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் கோப்பரேன் பி.எல்.சி நிறுவனத்தின் துணை நிறுவனமான லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் டயக்னோஸ்டிக்ஸ், ஊடாக நோயாளர்களுக்கு பல்வேறு மருத்துவ வசதிகளை வழங்கி வருவதுடன், இலங்கையின் முதலாவது வைத்திய சாலை ஆய்வுகூடமாக இந்த வைத்தியசாலை அண்மையில் அதன் தரச்சான்று ISO 15189:2012 க்கு உயர்த்தப்பட்டுள்ளமை குறித்து அறிவித்திருந்தது.

மருத்துவ ஆய்வுகூடங்களின் பாதுகாப்பான சோதனை மற்றும் உயர் தரமான வினைத்திறன் ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில் உலகளாவிய ரீதியில் அங்கிகரிக்கப்பட்ட இந்தப் புதிய ISO 15189:2012 தரச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

ISO 15189:2012 அங்கிகாரத்தை பின்பற்றுவதனூடாக ஸிக்ஷிம், மருத்துவர்களுக்கான ஆலோசனை, சேகரிப்பு, போக்குவரத்து, வரவேற்பு மற்றும் மாதிரி பரிசோதனைகள், அறிக்கை மற்றும் விளக்கமளிப்புகள் உள்ளிட்ட ஒவ்வொரு கட்டத்திலும் சிறந்த நடைமுறைகள் மற்றும் கொள்கைகளை வெளிப்படுத்தவுள்ளது.

லங்கா ஹொஸ்பிட்டல்ஸின் தலைவர் சரத் பரணவிதான கருத்து தெரிவிக்கையில், "ISO 15189:2012 அங்கீகாரத்தைப் பெற்றமை மிகப்பெரிய சாதனையாகும். உயர் தரமான மருத்துவ பரிசோதனை களை வழங்கல் மற்றும் வைத்தியர்கள், நோயாளர்கள் மட்டுமன்றி ஒட்டுமொத்தத் துறைக்கும் சேவைகளை வழங்கி வரும் எமது அர்ப்பணிப்பைச் சான்று பகர்வதாக இது அமைந்துள்ளது" என்றார்.

''குறிப்பிடத்தக்க மருத்துவ அனுகூலங்களை வழங்குவதற்காக நாம் வருடாந்தம் ரூ.75 மில்லியனுக்கும் அதிகமான பணத்தை செலவிட்டு வருவதுடன், இந்தப் புதிய சான்றளிப்பானது, எந்தவொரு மருத்துவ ஆய்வுகூடமும் கொண்டிருக்க வேண்டிய நிபந்தனை அளவுகோல்கள் மற்றும் தர உத்தரவாதத்தின் அடிப்படைகளுக்கமைய வழங்கப்பட்டுள்ளது" என அவர் மேலும் தெரிவித்தார்.

"ISO 15189:2012 புதிய சான்றிதழ் பெற்றுக்கொண்டுள்ளமையானது பிராந்தியத்திலேயே உயர் தரம் வாய்ந்த மருத்துவ ஆய்வுகூடம் எனும் உயரிய நிலைக்கு உயர்த்தியுள்ளது. சர்வதேச நியமங்களுக்கிணைவாக உயர் தரமான மருத்துவ பரிசோதனைகள் மற்றும் மருத்துவர்கள் மற்றும் நோயாளர்களுக்குத் தேவையான நம்பிக்கையை வழங்குவதில் போன்ற எமது திறமைகளை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது" என LHD பணிப்பாளர் பேராசிரியர் டிலானி லொகுஹெட்டி தெரிவித்தார். (த)

வணிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பம்



## ஒபெரா இணைய உலாவி தரும் புத்தம் புதிய வசதி

முன்னணி இணைய உலாவிகளில் ஒன்றான ஒபெரா ஆனது அண்மையில் விபிஎன் வசதியைப் பயனர்களுக்கு வழங்கியிருந்தது.

இந்த நிலையில் தற்போது மிகவும் பயனுள்ள மற்றுமொரு வசதியை அறிமுகம் செய்துள்ளது.

அதாவது மின்கலத்தின் மின் சக்தி வழங்கும் நீடிக்கும் பொருட்டு பவர் சேவிங் வசதியை அறிமுகம் செய்துள்ளது.

இவ் வசதி நோட்புக் கணினிகளுக்குப் பெரிதும் பயனுள்ளதாக காணப்படுகின்றது.

இதன் மூலம் கூகுள் குரோம் உலாவி பயன்படுத்தும்போது செலவிடப்படும் மின்சக்தியிலும் 50 சதவீதமே பயன்படுத்தப்படுகின்றது.

அதாவதுசாதாரண இணைய உலாவலை விடவும் ஒரு மணி நேரம் வரையில் அதிகமாக நீடித்து இருக்கின்றது.

இதனால் மின்கலத்தில் நீண்ட நேரம் இயங்கும் மடிக்கணினிகள், தூரப் பயணங்களின்போது வீடியோ பார்வையிடல் போன்றவற்றிற்கு ஏது வாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)



## தாவரங்களைப் பாதுகாக்க சுழலும் சைபர் தோட்டம்

தாவரங்களைப் பராமரிப்பதென்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல.

எங்கள் பூந்தோட்டத்தில், வீட்டில் வைப்பதற்காக பல வகை தாவரங்களைத் தேர்வு செய்கிறோம். ஆனால் அவைகளைச் சரியான முறையில் பராமரிக்க முடிவதில்லை.

தாவரங்களுக்குச் சரியான அளவில் நீர் கிடைக்கப்பெறுகிறதா, எல்லாப் பகுதிகளுக்கும் சூரிய ஒளி கிடைக்கிறதா எனக் கவனிக்க முடிவதில்லை.

தற்போது கட்டடக் கலைஞர்களால் தாவரங்களுக்கு வலுவூட்டும் வழியொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அதுதான் இந்த தன்னாட்சி சைபர் தோட்டம்.

இத் தொழில்நுட்பமானது லண்டனைச் சேர்ந்த William Victor Camilleri, Danilo Sampaio அவர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

இங்கு தாவர உடற் தொழிற்பாடு பல வகை உணரிகளால் மேற்பார்வை செய்யப்படுகிறது.

இதன் மையத்தில் 12 தொகுதி தோட்டம் இருப்பதாகவும், ஒவ்வொன்றினதும் வெளிப்புறம் பிரித்தானியாவுக்கே உரிய இனங்களைக் கொண்டதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ் அமைப்பானது அதன் திணிவுமையத்தை நகர்த்தி அசையக்கூடியது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தோட்டம் தனக்குச் சாதகமான சூழல் கிடைக் கும் வரை அசைந்து திரியக்கூடியது. அதற்காக உணரிகள் பொருத்தப்பட்டுள்ளன.

அந்தச் சூழல் மாறாதவிடத்து அங்கேயே தங்கியிருந்து பின் வேறு சாதகமான இடங்களை நோக்கிச் செல்லக்கூடியது. (த)

## நாட்டின்

அதிகாலை தொடக்கம் மழை தீவிரமாகியது. அதனால் நேற்றுச் சில மணித்தியாலங்களில் இந்தப் பாதிப்புக்கள் ஏற்படுமளவுக்கு காற்றுடன்கூடிய மழை கொட்டித் தீர்த்துள்ளது.

அடை மழையினால் கொழும்பில் நகரின் பாதைகள் நீரில் மூழ்கியுள்ளன. சில பாதைகளின் போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளன. மருதானை, வெள்ளவத்தை உள்ளிட்ட பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன. தவிர, 43 வீடுகள் பகுதியளவிலும் ஒரு வீடு முற்றாகவும் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவிலில் நேற்றுக் காலை 8.30 மணிவரையான 24 மணிநேரத்தில் 145.8 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளது.

இந்த மழையால், வெஹெரகல நீர்த் தேக்கத்தின் 6 வான் கதவுகளில் 4 கதவுகள் நேற்று முற்பகல் 10 மணிக்குத் திறக்கப்பட்டுள்ளன. மாணிக்க கங்கையின் நீர் மட்டம் உயர்ந்துள்ளதாகவும், வான் கதவுகள் திறக்கப்பட்டதனால், செக்கனுக்கு 1000 கன அடி நீர் மாணிக்க கங்கையுடன் கலப்பதாகவும் நீர்த் தேக்கத்துக்குப் பொறுப்பான பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

தெதுரு ஓயா நீர்த் தேக்கத்தினதும் ஐந்து வான் கதவுகள் நேற்றுக் காலை திறக்கப்பட்டுள்ளதனால், ஆற்றைச் சுற்றியுள்ள மக்கள் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தவிர, கடும் மழை காரணமாக சில மாவட்டங்களுக்கு மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கண்டி, இரத்தினபுரி, குருநாகல், கேகாலை, மொனராகலை, பதுளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தின் மண்சரிவு அபாய முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பதுளை மாவட்டத்தில், லுணுகல, பசறை, பதுளை, ஹாலிஎல, பண்டாரவளை, வெலிமடை, எல்ல, அப்புத்தளை, ஹல்தமுல்லை, சொரனாத்தோட்டை, ஊவா பரணமகம ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய மழை காரணமாகப் பல வீடுகளில் மழை வெள்ளம் புகுந்துள்ளதால் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் சீரற்ற வானிலையால் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் தொடர்பில் அறிவிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. ஏற்படக்கூடிய இடர்களைக் கட்டுப்படுத்துவதற்காக தகவல்களைக் கோருவதாக அறிக்கையொன்றினூடாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய மக்கள் தகவல்களை வழங்குவதற்கான தொலைபேசி இலக்கங்களும் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன. 0112434251 என்ற இலக்கத்தினூடாக இலங்கை இராணுவத்தினருக்கு தகவல் வழங்க முடியும் எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. 0112 445368 என்ற இலக்கத்தினூடாக இலங்கை கடற்படையினருக்கும் 0112 343970 என்ற இலக்கத்தினூடாக விமானப் படையினருக்கும் அனர்த்தங்கள் தொடர்பில் தகவல்களை வழங்க முடியும் எனப் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் பலத்த காற்றுடன் பெய்யும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பில் தகவல்கள் திரட்டப்படுவதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கைக்கு மேலாகக் காணப்படும் வலுவான தாழ முக்கம் இன்று இந்தியாவை நோக்கி நகர் வதால், கரையோரப் பகுதிகளில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்யும். கடற்பிராந்தியத்தில் காற்றின் வேகம் மணிக்கு 70 - 80 கிலோமீற்றர் வேகத்தில் வீசுமென்பதால் கடலில் கடும் கொந்தளிப்பு ஏற்படும். எனவே, மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது. (த-வ-4-5)

## ஒருமித்த

பில் மக்கள் கருத்தறியும் குழு அமைக்கப்பட்டிருந்தது. இந்தக் குழு நாட்டில் சகல மாவட்டங்களுக்கும் நேரில் சென்று பொது மக்களின் கருத்துகளைப் பெற்றுக் கொண்டது. இதனடிப்படையில் இந்தக் குழு தனது பரிந்துரைகளை உள்ளடக்கிய 300 பக்கத்திலான ஆவணத்தை தயாரித்துள்ளது. இந்த ஆவணம் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிடம் இன்றைய தினம் கையளிக்கப்படவுள்ளது.

இறுதி ஆவணத்தில் பொதுமக்களின் கருத்துக்கள் சுருக்கமாக ஒவ்வொரு அத்தியாயத்திலும் தெரிவிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் ஒவ்வொன்றிலும், கருத்தறியும் குழுவின் உறுப்பினர்கள் வேறுபட்ட நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளனர். இதனால் ஒவ்வொரு விடயம் தொடர்பிலும் பல்வேறு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

முகவுரை, தேசியக் கொடி, தேசிய கீதம், சமயம், அரசின் தன்மை, அரசின் கட்டமைப்பு, அரசின் வடிவங்கள் என்று பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. தனி நாடு கோரி முன்வைத்த தமிழ் மக்களின் கருத்துக்களும், தற்போதுள்ள அதிகாரப் பரவலாக்கலே போதும் என்று முன்வைத்த கருத்துக்களும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மக்களின் கருத்துக்களுக்கு மேலதிகமாக பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பரிந்துரைகளில் ஆளுநர்களின் அதிகாரங்கள் கட்டுப்படுத்த வேண்டும் என்ற பரிந்துரையை கருத்தறியும் குழு ஒருமித்து முன்வைத்துள்ளது. இதனைத் தவிர்ந்த ஏனைய விடயங்களில் கருத்தறியும் குழு ஒருமித்த பரிந்துரையை முன்வைக்கவில்லை.

வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பிலும், கருத்தறியும் குழுவில் வேறுபட்ட கருத்துக்கள் நிலவியமையினால், இந்த விடயத்திலும் பல்வேறு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் அதிகாரப் பரவலாக்கத்திலும் பல்வேறு பரிந்துரைகளைக் கருத்தறியும் குழு முன்வைத்துள்ளது. ஒற்றையாட்சி முறைமை, சமஷ்டிக் கூட்டரசு என்ற இருவேறு நிலைப் பரிந்துரைகளையும் கருத்தறியும் குழு முன்வைத்துள்ளது.

மக்கள் கருத்தறியும் குழுவினால் பெரும்பாலான விடயங்களில் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வரமுடியவில்லை. இதனால் ஒவ்வொரு விடயங்களையும் கருத்தறியும் குழுவின் உறுப்பினர்கள் எத்தனை பேர் ஆதரிக்கின்றனர் என்ற விடயம் ஒவ்வொரு பக்கத்தின் அடிப் பகுதியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-வ-5)

## வற்றாப்பளை

வீதிக்குச் சென்று புரரிக்குடா ஊடாக ஊற்றங்கரை விநாயகர் ஆலயத்தைச் சென்றடையும்.

அங்கிருந்து தண்ணீரூற்று முல்லைத்தீவு வீதி வழியாக, சிலாவத்தைச் சந்திக்குச் சென்று, பின் அங்கிருந்து கள்ளப்பாடு ஆதிவைரவர் கோயிலில் மடப்பண்டம் எடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து கள்ளப்பாடு தீர்த்தக்கரையில் வைத்து வைரவருக்கும், அம்பாளுக்கும், கடலன்னைக்கும் விசேட பூசைகள், அபிசேக ஆராதனைகள் நடைபெற்று மாலை 5.30 மனியளவில் சமுத்திரத்தில் இறங்கித் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு இடம்பெறும். அவ்வாறு தீர்த்தத்தை எடுத்துக்கொண்டு திரும்பும் வழியில் வீதிகள் தோறும் பக்தர்கள் கும்பம் வைத்து அம்பாளின் அருளைப் பெறுவர். பின்னர், தீர்த்தக் குடம் இரவு 10 மணியளவில் முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலயத்தைச் சென்றடையும். சமுத்திரத்தில் இருந்து பெறப்பட்ட தீர்த்தம் ஒரு கிழமைக்கு காட்டு விநாயகர் ஆலயத்தில் வைக்கப்பட்டு தீர்த்ததில் - உப்பு நீரில் விளக்கு எரிக்கப்படும். எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காட்டு விநாயகருக்குப் பொங்கல் இடம் பெறும். அதன்பின்னர் காட்டு விநாயகர் ஆலயத்தில் இருந்து 23 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை வற்றாப்பளை கண்ணகி அம்மாள் ஆலயத்துக்கு தீர்த்தம் கொண்டு செல்லப்படும். தொடர்ந்து வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலய வைகாசி விசாகப் பொங்கல் சிறப்புற இடம்பெறும்.

இதேவேளை, வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய கட்டுமாணப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றமை குறிப்பபிடத்தக்கது. (த-வ-4-ரி7)


## நீங்கா நினைவுகளில்

7 ஆம் ஆண்டு | 24 ஆம் ஆண்டு

மலர்வு 25.04.1984
உதிர்வு 16.05.2009



கதிர்காமவேலன்
ஹரிதாஸ்



மலர்வு 11.03.1972
உதிர்வு 28.08.1992

கதிர்காமவேலன்
சிறிகாந்தன்

பாதி வாழ்க்கையிலே கண்ணிமைக்கும் முன்னே
மறைந்துவிட்ட உமதுறவின் நீங்காத நினைவுகளும்
உதிர்ந்து விட்ட உமதன்பின் உலராத வாசனையும்
ஆண்டுகள் பலகோடி ஆனாலும் அகலாது எமைவிட்டு.....

மீசாலை வடக்கு,
வேம்பிராய்.

என்றும் உங்கள் பிரிவுத்துயரில் வாடும்
குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்

## மரண அறிவித்தல்

### கந்தன் சிங்கராஜா (சுவிஸ்)

தோற்றம்
13 . 09 . 1954



மறைவு
14 . 05 . 2016

மருதங்குளம், மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் சிங்கராஜா (சுவிஸ்) 14.05.2016 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன் - பாறி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ் சென்ற கந்தன் மற்றும் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், தங்கராணியின் (றமணி - சுவிஸ்) பாசமிகு கணவரும்,விதுர்சனின் (சுவிஸ்) பாசமிகு தந்தையும், செல்வராணி, செல்வராசா ஆகியோ ரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற ஜயாத்துரை மற்றும் வசந்தாதேவி, புஸ்பராணி, மல்லிகா தேவி, மகாலிங்கம், காலஞ்சென்ற சோமு ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற வள்ளி மற் றும் கதிரி ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற அப்புத்துரையின் மருமகனும், காலஞ் சென்ற வர்களான நடுவிலன், சுப்பன் மற்றும் சின்னத்தம்பி ஆகியோரின் பெறாமகனும், சஞ்சீவன் (டென்மார்க்),சஞ்சீதன் (பிரான்ஸ்),சயந்தன், சரூபன் (சுவிஸ்), சஜீவன், இரஜிதா (லண்டன்), இறஜி தன், இறஞ்சிதன் (இந்தியா), இறஞ்சிதா (ஆசிரியர் - யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் சிறிய தந்தையும், ஜெயசீலன் (டென்மார்க்), ஜெயந்தி (சுவிஸ்), ஜெயதேவன் (டென்மார்க்) ஆகி யோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2016) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சின்னத்தூ இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மருதங்குளம்,
மட்டுவில் தெற்கு,சாவகச்சேரி.

(J/1362)
(11,18,17)

தகவல்:
குடும்பத்தினர்.

077 034 4282

## மரண அறிவித்தல்

### சண்முகம் கதிர்காமநாதன்

(ஓய்வுநிலை ஊழியர் - யாழ். மாநகரசபை)



பிறப்பு 13.08.1938 | இறப்பு 14.05.2016

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் கதிர்காமநாதன் 14.05.2016 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்- பொன்னு தம்பதிகளின் செல்வப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான அம்பலம் - சீதேவி தம்பதிகளின் மருமகனும், அருமைநாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நேசம்மாவின் அன்புச் சகோதரனும், கமலநாயகி, கமலறஞ்சினி (சுவிஸ்), காலஞ்சென்ற கமலநாதன் மற்றும் கமலதாசன் (சவூதி), கௌசல்யா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவலோகநாதன், அருணகுமார் (சுவிஸ்), சுதர்சினி, சுரேஸ்குமார் (ஆசிரியர் - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும், பரமசாமி, புஸ்பராணி, விஜயராசா, இந்திராதேவி (ஜேர்மன்), பாஸ்கரன் (ஜேர்மன்) ஆகியோரின் தாய் மாமனும், சாரங்கன், அருண்நாத், லக்சிகா, ஆருஸ் (சுவிஸ்), அருண்யா (சுவிஸ்), மதுமிதா, கீர்த்தனன், லஷிகா, சபிஷன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற வல்லிபுரத்தின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2016) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூமகள் வீதி,
அரியாலை மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கிலும்

இந்த நிலையில் நேற்றுப் பிற்பகல் தொடக்கம் கடும் மழை கொட்டித் தீர்த்துள்ளது.
முல்லைத்தீவு, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு உள்ளிட்ட பல பகுதிகளிலும் கடும்மழை தொடர்ந்து பெய்த வண்ணமுள்ளது. இதனால் நகர்ப்பகுதிகளில் உள்ள கடைகளுக்குள் வெள்ள நீர் புகுந்து பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளதோடு, மக்கள் குடியிருப்புக்களினுள்ளும் வெள்ளம் புகுந்துள்ளது. அவ்வாறே கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களிலும் கடும்மழை பெய்துவருகிறது.
கடந்த வாரம் வரை கடும் வெப்பம் காரணமாக மக்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டனர். மழை வராதா என்று ஏங்கிய நிலையில் இருந்தனர். எனினும் கடந்த வாரம் முழுவதும் மப்பும் மந்தாரமுமான காலநிலை நிலவியதுடன் ஆங்காங்கே காற்றுடன் கூடிய மழை பெய்தது. இந்த நிலையில் நேற்று மழை கொட்டித் தீர்த்துள்ளது.
எனினும், வடக்கில் இவ்வாறு மழை கொட்டுகின்றபோதும், எவருக்கும் எந்த விதமான சேதங்களும் ஏற்பட்டிருக்கவில்லை என்று இடர் முகாமைத்துவ நிலையத்தினர் கூறுகின்றனர்.

(த-வ-4-433)

## வாக்காளர்

வித்துள்ளன.
வாக்காளர் பெயர்ப் பட்டியல் ஒவ்வொரு ஆண்டும் மீளாய்வு செய்யப்படும். வாக்காளர் பெயர்ப் பட்டியல் மீளாய்வு நடவடிக்கைகள் மே மாத நடுப் பகுதியில் ஆரம்பமாகும். ஜூன் முதலாம் திகதி வாக்காளர் தினம். அன்றையதினம் சகல வாக்காளர்களையும் பதிவு செய்வதற்கு ஏற்ற வகையில், மே மாத நடுப் பகுதியில் இதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.
கிராம சேவையாளர்கள் ஊடாக, இன்று தொடக்கம் வாக்காளர் பதிவு விண்ணப்பப் படிவம் (பி.சி.படிவம்) விநியோகம் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஒவ்வொரு கிராம சேவையாளர்களும் வீடு வீடாகச் சென்று பி.சி. படிவத்தை விநியோகிக்க வேண்டும். எதிர்வரும் முதலாம் திகதி வரையில் விண்ணப்பப் படிவம் விநியோகிக்கப்படும். அதன் பின்னர் பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர், பி.சி. படிவங்கள் மீளப் பெற்றுக் கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-வ-5)

## கச்சதீவில்

யாழ். ஆயர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, கச்சதீவிலுள்ள புனித அந்தோனியார் தேவாலயத்தை இடித்து மீளக்கட்டும் பணிகள் கடந்த வாரம் கடற்படையினரால் ஆரம்பிக்கப்பட்டதாகவும், அதற்கான அத்திபாரம் போடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.
எனினும் அங்கு தற்போது பெய்துவரும் கடும் மழை, கட்டுமானப் பணிகளை தொடர்வதற்கு இடையூறாக இருக்கின்றது. நிர்மாணப் பணியைத் தொடர்வதற்கு அத்திபாரம் காயும் வரை காத்திருக்க வேண்டியுள்ளது.
இந்த இரண்டு காரணங்களினாலேயே தேவாலயக் கட்டுமானப் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கின்றது.
அந்த நடவடிக்கை விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்படும்.
கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள நிலையில், அதற்கு முன்னர் தேவாலயம் முழுமையாக கட்டி முடிக்கப்படும்.
இதேவேளை, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்கனவே சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் கச்சத்தீவிலுள்ள தேவாலயத்தை கட்டும் நடவடிக்கையில், தமிழக அரசு தரப்பையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியிருந்தார்.
அதன் பின்னர் தேவாலய கட்டுமானப் பணிகள் இந்தியாவின் அழுத்தம் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகங்களில் செய்திகள் வெளியாகிருந்தன.
இந்தப் பின்னணியில் கடற்படைப் பேச்சாளர் இவ்வாறு விளக்கமளித்துள்ளார்.

(த-வ-5)

## மரண அறிவித்தல்

### திருமதி விமலேஸ்வரி இராமதிலகம்



மானிப்பாயைச் சேர்ந்த திருமதி விமலேஸ்வரி இராமதிலகம் கடந்த (09.05.2016) திங்கட்கிழமை கன்பரா, ஆஸ்திரேலியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கனகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், இராமதிலகத்தின் (இளைப்பாறிய உப அதிபர் - மானிப்பாய் இந்துக்கல்லூரி, இராமநாதன் கல்லூரி - மருதனார்மடம், மத்திய மகாவித்தியாலயம் - வந்தாறு மூலை ) அன்பு மனைவியும், சஷிலேகா, உதிஷ்திரன், உமேஷ்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயசீலன், கமலினி, பிரதீபா ஆகியோரின் அன்பு மாமியாரும், உமா, காயத்ரி, அஷ்வினி, சஞ்சீவ், ஸ்வேதா, ஸ்ரேயா ஆகியோரின் அன்புப் பாட்டியும், தவமலர், விக்னேஸ்வரி, காலஞ்சென்ற கஜேந்திரதாஸ் ஆகியோ ரின் அன்புச் சகோதரியும், தம்பிராஜா, பத்மயோகராணி மற்றும் காலஞ்சென்றவர்களான மகாதேவா, அருணாசலம், மகாலிங்கம், தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.05.2016 வியாழக்கிழமை கன்பராவில் (Norwood park Crematorium, Canberra) நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:குடும்பத்தினர்.

+614 690 79059 /ramattilagam@gmail.com

## மரண அறிவித்தல்

### கந்தையா தனபாலசிங்கம்

(மணியம் மெக்கானிக்- கொடிகாமம்)



வேம்பொடுகேணி, பளையைப் பிறப்பிடமாகவும் புகையிரத நிலைய வீதி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தனபாலசிங்கம் நேற்று (15.05.2016) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:
077 233 6338, 077 596 9723
077 936 0035, 077 481 5914

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி ஜெயபாலன்

தோற்றம்
10 . 08 . 1939



மறைவு
14 . 05 . 2016

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி ஜெயபாலன் 14.05.2016 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெயபாலனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் - இராஜமணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், நாகலட்சுமி (சுவீடன்), ராஜலிங்கம் (லண்டன்), ரஜனி (சுவீடன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கே.ரி.இராஜசிங்கம் ( Editor Aslan Trubune மற்றும் ஆசிரியர் தினச்செய்தி), திருமதி பத்மினி ராஜலிங்கம் (திருகோணமலை) ஆகியோரின் மைத்துனியும், தர்ஷினி (சுவீடன்), தாரணி(சுவீடன்) ஆகியோரின் பெரிய தாயும், பிரதீபன் (லண்டன்), பார்த்தீபன் (லண்டன்), பகீரதன் (லண்டன்), திருமதி நிரஞ்சினி பாஸ்கரன் (லண்டன்), திருமதி சுபாஷினி ஜெயப்பிரகாசம் (லண்டன்), திருமதி சிவானி பிரகாஷ் (திருகோணமலை) ஆகியோரின் அப்பா மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2016) திங்கட்கிழமை சுன்னாகம், தில்லைகட்டி ஒழுங்கை, புகையிரத நிலையத்துக்கு எதிரிலுள்ள அவரின் இல்லத்தில் காலை 9 மணிக்கு நடைபெற்று சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தில்லைகட்டி லேன்,
புகையிரத நிலையத்துக்கு எதிர்,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்:
வை.ராஜலிங்கம் (சகோதரர்)
(ஓய்வுநிலை கூட்டுறவுப் பரிசோதகரும் தற்போது லண்டனில் வசிப்பவரும் - 077 354 4725 )
கே.ரி.இராஜசிங்கம் (மைத்துனர்)
(Editor Aslan Trubune ஆசிரியர் தினச்செய்தி-
071 976 4514 )

## மரண அறிவித்தல்

### சற்குணநாதன் விஜயகுமார் (விஜி)

(பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன முன்னாள் பணியாளர்)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் இல.63/1, கணேசபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் தற்போது சுவிற்சலாந்தினை வதிவிடமாகவும் கொண்ட சற்குணநாதன் விஜயகுமார் (விஜி) நேற்று (15.05.2016) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற சற்குணநாதன்-லீலாவதி (ஆனந்தபுரம், கிளிநொச்சி) தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குலசேகரம் (ஓய்வு பெற்ற மலேரியா தடை இயக்க பணியாளர்-கிளிநொச்சி)-சறோஜினிதேவி தம்பதிகளின் அன்பு மருமகனும் சசிகலாவின் (சுவிஸ்) அன்புக் கணவரும் நிருதீபன் (சுவிஸ்), டினோஜன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சோனியாவின் (சுவிஸ்) அன்பு மாம னாரும் உதயகுமார் (ஜேர்மன்) காலஞ்சென்ற றஞ்சித்குமார் (றஞ்சன்) மற்றும் ஜெயரஞ்சினி (ஆனந்தபுரம்), ராஜ்குமார் (அப்பன்-ஆனந்தபுரம்), சித்திராஞ்சனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சந்திரசேகரம் (சந்திரன்-சுவிஸ்), குணசேகரம் (சேகர்-சுவிஸ்), வஸ்தலா (மாலா-பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் பணிமனை, கிளிநொச்சி), தட்சலா (சோபா-கணேசபுரம்), பிரமிளா (பிரபா-லண்டன்), இரவீந்திரன் (ரவி மெக்கானிக்-ஆனந்தபுரம்) , ஸ்ரீகௌரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பரமேஸ்வரி (சுவிஸ்), ஊர்மிளா (சுவிஸ்), சதீஸ்குமார் (சதீஸ்-கணேசபுரம்), தயேந்திரன் (பதூ-கணேசபுரம்), ஜோய் இக்னேசியஸ் (லண்டன்) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸில் உள்ள அன்னாரின் இல்லத்தில் 17.05.2016 செவ்வாய்க்கிழமை நடைபெற்று தகனம் செய்யப்படும்.

Kotte Mmatte-18,6210 Sursee-Switzerland

துயர்பகிர்வு : ஆனந்தபுரம்-கிளிநொச்சி. 63/1 கணேசபுரம்-கிளிநொச்சி.

மேற்படி இடங்களில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தொடர்பு: சதீஸ்- 077 730 4354
பவா- 077 605 9577

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மதவாச்சி வீதியில் தடம்புரண்டது வவுனியா சிறைச்சாலை வாகனம்

## 8 கைதிகள் படுகாயம்

யாழ்ப்பாணம், மே 16

மன்னாரில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த சிறைச்சாலை வாகனம் நேற்றைய தினம் திருநாவற்குளம் பகுதியில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில், 8 கைதிகள் படுகாயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் - மதவாச்சி வீதியில் பயணித்த சிறைச்சாலை வாகனமே இவ்வாறு திருநாவற்குளத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்து இடம்பெற்ற போது வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், அந்த வீதியூடாகப் பயணித்த வேளையில், அவரை மறித்துப் பலர் கொட்டும் மழையின் மத்தியில் வீழ்ந்து கதறியழுது முறையிட்டனர். இது தொடர்பில் பிரதேச மக்கள் தெரிவிக்கையில் ,

குறித்த பகுதியில் நேற்றுக்காலையில் திருட்டு மாடு வெட்டியதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட மூவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களை மன்னார் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படுவார்கள் என எதிர்பார்த்திருந்தோம் . இருப்பினும் மாலை 5 மணியளவில் மதவாச்சி வீதியூடாக பயணித்த சிறைச்சாலை வாகனம் தடம்புரண்டுள்ளதாக அறிந்து நாம் விரைந்து வந்தோம். இருப்பினும் எவரையும் நாம் பார்க்க முன்பே பொலிஸார் அவர்களை ஏற்றி வைத்தியசாலைக்கு அனுப்பி விட்டனர் . இவ்வாறு காயமடைந்த எவரையும் எம்மைப் பார்வையிட அனுமதிக்கவில்லை என்றனர்.

இந்த விபத்துத் தொடர்பில் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், இந்த விபத்தில் 8 கைதிகள் படுகாயமடைந்த நிலையில் 5 பேர் வவுனியா வைத்தியசாலையிலும் 3 பேர் மன்னார் வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.


(வ-10)

---

## மரண அறிவித்தல்

திருமதி

### சிவக்கொழுந்து இராசசிங்கம்



எழுதுமட்டுவாழ் வடக்கு கல்யாணக்குளத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் மீசாலை வடக்கு, கொடிகாமத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து இராசசிங்கம் நேற்று (15.05.2016) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசசிங்கத்தின் அன்பு மனைவியும், தங்கராசா (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய உத்தியோகத்தர்) காலஞ்சென்ற இராசம்மா, ஜெயராசா (ஓய்வுபெற்ற களஞ்சியக் காப்பாளர், இலங்கை மின்சாரசபை), யோகம்மா, செல்வராணி (ஆசிரியை, யா/ வீரசிங்கம், ஆரம்ப பாடசாலை), சிவராசா (லெபனான்), தவராசா (தொழில் நுட்ப உத்தியோகத்தர், சித்த மருத்துவ பீடம், கைதடி), கமலாதேவி (ஆசிரியை, எழுதுமட்டுவாழ் அ.த.க. பாட சாலை) ஆகியோரின் தாயாரும் கனகலட்சுமி, காலஞ்சென்ற செல்வராசா, குணசிங்கம், தவராணி (ஆசிரியை, மீசாலை விக்னேஸ்வரா, ம.வி), தர்மலிங்கம், (ஆசிரியர், எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலை), சாவித்திரி, கிருபாகினி, இராசகுலச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியும், கிருஷாந்தி, புவனதீபன், நேசகௌரி, ரவிமோகன், டினேஸ்குமார், அனுசியா, ஜங்கரன், சாரதா, பவானி, கருணாகரன், துளசிதாசன், தேன்மொழி, கோபாலகிருஸ்ணன், தர்மேந்திரன், கனேந்திரன், டயானி, பாசுபதன், கோமேதகன், அசோகன், சுரேஸ்குமார், டுசாந்தன், மரியா, மகாசினி, சாருஜன், தர்சிகா ஆகியோரின் பேர்த்தியும், நர்மிதன், ஜனாசினி, குகானுஜன், அஸ்னிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2016) திங்கட் கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு, கொடிகாமம்
(கமநல சேவைகள் நிலையம் முன்பாக)

தகவல்: குடும்பத்தினர்.
077 873 3049
077 807 5261

---

### பொலிஸ்

யாழ்ப்பாணத்தில் நடந்து வருகின்ற வன்முறைச் செயல்களைக் கட்டாயம் கட்டுப்படுத்துவோம். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

வடக்கில் படையினரை முடக்கி வைப்பதால், பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர முடியாது. படையினரை வடக்கிலிருந்து வெளியேற்றவேண்டும். இதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். தற்பொழுது படையினர் முகாம்களுக் குள் முடங்கியிருப்பதாகக் கூறுகின்றனர். ஆனால் நாளாந்தம் ஒவ்வொரு பகுதிகளிலும் காலையில் ஆறு, ஏழு இராணுவத்தினர் சைக்கிளில் உலா வருகின்ற நிலைமை தொடர்கின் றது. இதனால் பொதுமக்கள் அச்சத்திலேயே இருக்கின்றனர்.

எனவே இராணுவத்தை முகாமினுள் முடக்கவேண்டும் என் பதில் உடன்பாடு இல்லை. முற்றாக அவர்கள் வெளி யேற்றப்பட வேண்டும். தற் போது நடக்கின்ற வாள் வெட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். ஜனாதிபதி, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதனை நியமித்திருக்கின்றார். இவர் நியமிக்கப்பட்ட பின்பு குற்றச் செயல்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கின்றன - என்றார்.

(த-வ-5)

### காற்றுடன்

கொண்டிருக்கிறது. இன்று பிற்பகல் தாழமுக்கம் கரைப்பகுதியை ஊடறுத்து இலங்கையை விட்டு விலகி இந்தியாவைச் சென்றடையும்.

அதுவரை வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேல் மாகாணங்கள் மற்றும் தென் மாகாணத்தின் சில பகுதிகளிலும் மழை பெய்யக் கூடும்.

அதன்போது இன்று 100 தொடக்கம் 150 மில்லிமீற்றர் வரையில் மழைவீழ்ச்சி பதிவாகலாம். மணித்தியாலத்துக்கு 70 தொடக்கம் 80 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசலாம். அதனால் மீனவர்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

நேற்றுப் மாலை 5.30 வரை 10.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகி யுள்ளது. ஆனால், அதன்பின்னரே கடும் மழை பெய்துள்ளது என்றும் யாழ்.திருநெல்வேலியிலுள்ள வளிமண் டலவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

(த-வ-4)

---

## மரண அறிவித்தல்

### திருமதி இந்திராதேவி சுந்தரலிங்கம்



புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாக வும், 162/3, பருத்தித்துறை வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராதேவி சுந்தரலிங்கம் நேற்று (15.05.2016) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- அலங்காரம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான அப்பாக்குட்டி- அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சுந்தரலிங்கத்தின் (Mayoora Hotel) அன்பு மனைவியும், சுகிர்தா, சுதர்சன் (Mayoora Gift Center) மயூரதி, தர்சினி, மதுசூதனன் ஆகியோரின் அன்புத் தாயும், லோகேஸ்வரன் (பொறியியலாளர், RDA), கிசோன் (Rathy Fashion Fair) ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் புவனேந்திரன் (கனடா), யோகேஸ்வரன் (கொழும்பு), சுரேஸ்கரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சோமசுந் தரம் (கனடா) காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம், நாகலெட்சுமி மற்றும் கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஸ்ரீநீத், சாயிஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

162/3, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.


தகவல்: குடும்பத்தினர்.
021 222 6491
07777 47095

---

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா அரியகுட்டி

தோற்றம்
02
.
10
.
1912



மறைவு
16
.
05
.
2016

கற்பகப்பிள்ளையார் கோயிலடி, வட்டு வடக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா அரியகுட்டி நேற்று (15.05. 2016) ஞாயிற்றுக்கிழமை தனது 104வது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகப்பர் அரியகுட்டியின் அன்பு மனைவியும், வீரகத்தி வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், நாகம்மாவின் அன்புச் சகோதரியும், கனகம்மா, காலஞ்சென்ற சின்னையா, பேரம்பலம், வீரசிங்கம், காலஞ்சென்ற புவனேஸ்வரி, விமலாதேவி, கமலாதேவி, பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சுப்பையா, பத்மாதேவி, இராசலட்சுமி, ஜீவா, காலஞ்சென்றவர்களான தவராசா, சிவபாதம் , மற்றும் சண்முகலிங்கம், மாலா ஆகியோரின் பாசமிகு மாமியும், மீனாம்பிகைஅம்மா, தவச்செல்வி, கலைச்செல்வி, மோகனச்செல்வன், சிவாகரன், சிவாஜினி, புனிதா, சுகந்தா, பரந்தாமன், வசந்தா, புவிதா, சுகிர்தா, அமிர்தா, சாரதா, வனிதா, கவிதா, சிவதேவன், நவநீதா, வேணுகா, சந்திரிகா, ரவிசங்கர், ராதிகா, சசிரேகா, சர்மிலா, ஹேமச்சந்திரா, சதுர்வேதன், கண்ணன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ராங்கநாதன், தேவகி, இரத்தினகுமார், வாசுகி, கோகிலன், ஆரணி, வினித், விதுசன், யதுசன், ராகவன், சகானா, சுஜித்தா, ஷிகான், யதுஷன், லதுசன், தனுஷா, தனுஷன், தொமா, சந்தோய்சிறி, ஸ்ரீநிகர், தாமிரா, சரவணன், எழிலரசி, அக்ஷயன், கஜந்தன், வர்த்தனி, கிஷோர், நயனி, கிருஸ்ணவி, வருணிக்கா, ஐஸ்வா, அபிரா, பிரவீன், சர்வீன், சுவாதீகன், ஸ்ரீகருணி ஆகியோரின் அன்புப் பூட்டியும், இனிதா, இனிதன், இனிஷ்கா, துளசிகா, ஹரிஷ், கஜந்தன், வர்ஷிகா, கீர்த்திகன், சுகிர்தன், றூபிகா ஆகியோரின் அன்பு கொள்ளுப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2016) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வட்டு வடக்கு,
சித்தங்கேணி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி. சம்பியனானது கரப்பந்தாட்டத்தில்

யாழ்ப்பாணம், மே 16
யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில், 16 வயதுக் குட்பட்ட பெண்கள் பிரிவில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத் தைச் சுவீகரித்துள்ளது.
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த இறுதி யாட்டத்தில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியா லய அணியை எதிர்த்து இளவாலை மெய் கண் டான் மகா வித்தியாலய அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தின் முதலா வது செற்றை இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அணி 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. இரண்டாவது செற்றை 25:20 என்ற புள்ளிகள் அடிப்படை யில் கைப்பற்றி, பதிலடி கொடுத்தது உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அணி. கிண்ணத்தை தீர்மானிக்கும் மூன்றாவது செற்றில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அணி 25:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி சம்பி யன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. மூன்றா மிடத்தை கோப்பாய் மகா வித்தியாலய அணி பெற்றது. (ம-108-422)





## மெய்கண்டானிடம் கிண்ணம்

யாழ்ப்பாணம், மே 16
யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் 14 வயதுப் பிரிவில் இளவாலை மெய்கண்டான் வித்தியா லய அணி கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் இள வாலை மெய்கண்டான் வித்தியாலயத்தை எதி ர்த்து உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் இள்வாலை மெய்கண்டான் வித்தியாலய அணி 25:13, 25:11 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியன் ஆனது. மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் கோப்பாய் மகா வித்தியாலய அணியை எதிர்த்து அத்தியார் இந்துக் கல்லூரி அணி மோதியது. இதில் கோப் பாய் மகா வித்தியாலய அணி 25:18, 25:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற் றது. (ம-422-108)



## ஹாட்லிக் கல்லூரிக்கு தங்கம் ஆண்களுக்கான தட்டெறிதலில்

யாழ்ப்பாணம், மே 16
தேசிய கனிஷ்ட மெய்வன்மையில் பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரிக்கு தங்கமும், வெள்ளிப்பதக்கமும் கிடைத்துள்ளன.
கொழும்பு தியகம மகிந்த ராஜபக்ச மைதானத்தில் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் நேற்று நடைபெற்ற 16 வயதுக்குட்பட்ட ஆண் களுக்கான தட்டெறிதலில் பருத்தித்துறை ஹாட் லிக் கல்லூரியைச் சேர்ந்த பி.அபிஷாந் 43.99 மீற் றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தையும், பி.ஆனந் 42.88 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளி பதக் கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (ம-422)

## மதுசன், அஞ்சயன் அசத்தலில் சம்பியனானது வித்தியானந்தா

முல்லைத்தீவு, மே 16
யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியா லய (ஸ்ரான்லி) அணிக்கும், முல்லை. வித்தி யானந்தாக் கல்லூரிக்கும் இடையிலான ஒருநாள் ஆட்டத்தில் இரண்டு இலக்குகளால் வித்தியானந்தாக் கல்லூரி அணி வெற்றி பெற்றுள்ளது.
கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதா னத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்ரான்லி அணி முதலில் துடுப் பெடுத் தாடத் தீர்மா னித்து, 142 ஓட்டங்களில் சகல இலக்குக ளையும் பறிகொடுத்தது. அதிகபட் சமாக விஷ் ணுகானன் 39 ஓட்டங்களையும், பிரசாந் 36 ஓட்டங்களையும், ஜிலக்சன் 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் வித்தியானந்தாக் கல்லூரியின் சார்பில் மது சன் 4 இலக்குகளையும், தர்சன் 3 இலக்கு களையும், அருணா 2 இலக்குகளையும், பீற்றர் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்கு களமிறங்கிய வித்தியானந்தாக் கல்லூரி அணி 8 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக அஞ் சயன் 62 ஓட்டங்களையும், பபின்சன் 23 ஓட்டங்களையும், அருணா 17 ஓட்டங்களை யும் பெற்றனர். பந்துவீச்சில் ஸ்ரான்லிக் கல் லூரியின் சார்பாக பிரசாந், சஞ்சீவன், விது சன் மூவரும் தலா இரண்டு இலக்குகளைக் கைப்பற்றியிருந்தனர்.
ஆட்டநாயகனாகவும், சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் அஞ்சயன் தெரிவானார். மதுசன் சிறந்த பந்து வீச்சாளராகவும், ஸ்ரான்லியின் சுஜிகரன் சிறந்த பந்துவீச்சாளர்களாகவும் தெரிவானார்கள். (ம-102)

## நீக்கப்பட்டார் அம்புரோஸ்

மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சு ஆலோசகர் அம்புரோஸ் திடீரென நீக்கப்பட்டுள்ளார், அவருக்குப் பதிலாக புதிய ஆலோசகராக தீவுகளின் முன் னாள் வீரர் எட்விக் நியமிக்கப்பட்டுள்ளார். அம்புரோஸ், கடந்த மூன்று வருடங் களாக தீவுகளின் பந்துவீச்சு ஆலோச கராக செயற்பட்டு வந்துள்ளார். இவரது ஆலோசனையில் தீவுகள் இந்த வருடம் ரி-20 உலகக்கிண்ணத்தைக் கைப்பற் றியிருந்தது. இருப்பினும் காரணம் சொல்லப்படாமல் அவர் நீக்கப்பட்டுள் ளார். (ம)



யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான ஹொக் கித் தொடரில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 1:0 என்ற கோல் கணக்கில் உடுவில் பிரதேச செயலக அணியை வீழ்த்தி கிண்ணம் வென்றுள்ளது. (ம-108-422)

## இராமலிங்க வித்தி. கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், மே 16
யாழ். மாவட்ட பாடசாலை களுக்கு இடையிலான 16 வயதுக்குட்பட்ட ஆண் களுக்கான கரப்பந்தாட் டத்தில் ஆவரங்கால் நட ராஜ இராமலிங்க வித்தி யாலய அணி கிண்ணத் தைச் சுவீகரித்துள்ளது.
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற இந்த இறுதியாட் டத்தில் கோப்பாய் மகா வித்தியா லய அணியை எதிர்த்து ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அணி மோதி யது. மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத் தில் முதல் செற்றை கோப்பாய் மகா வித்தி யாலய அணி 25:21 என்ற புள்ளிகள் அடிப் படையில் கைப்பற்றியது. இரண்டாவது செற்றை 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப் பற்றி பதிலடி கொடுத்தது இராமலிங்க வித்தியா லயம். இதனால் கிண் ணத்தை தீர்மானிக்கும் செற்றாக மூன்றாவது செற் மாற்றம் பெற்றது. இதில் ஆவரங்கால் நட ராஜ இராமலிங்க வித்தி யாலய அணி 25:22 என்ற புள்ளிகள் அடிப் படையில் கைப்பற்ற, முடிவில் அந்த அணி 2:1 என்ற செற் கணக்கில் சம்பியனானது. மூன்றா மிடத்தை சுழிபுரம் விக் ரோறியா கல்லூரி அணி தனதாக்கியது. (ம-422-108)

## இமையாணன் மத்தி., சென்.லூட்ஸ் கழுகுகளின் தொடரில் முன்னேற்றம்

கழுகுகள் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் இமையா ணன் மத்திய விளையாட்டுக் கழகம் மற் றும் முல்லைத்தீவு சென்.லூட்ஸ் விளை யாட்டுக்கழகம் என்பன வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

**இமையாணன் மத்தி. - பொற்பதி**

கழுகுகள் வி.கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் முதலாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகமும் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டம் ஆரம் பித்து 6 ஆவது மற்றும் 7 ஆவது நிமி டங்களில் மத்தியின் முன்கள வீரர் சாரு அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் பதிவுசெய்ய, ஆட்டம் கண்டது பொற்பதி விளையாட்டுக் கழகம். தொடர்ந்து இரண்டு அணியினரும் கோல்களைப் பதிவுசெய்யாத நிலையில் மத்தியின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியின் 34 ஆவது நிமிடத்தில் சுலக்சன் மேலும் ஒரு கோலைப் பதிவுசெய்ய இமை யாணன் மத்தியின் வெற்றி கிட்டத்தட்ட உறுதிப்படுத்தப்பட்டது. பொற்பதி அணி 47 ஆவது நிமிடத்தில் சஜீவனின் உத வியுடன் கோல் ஒன்றைப் பதிவுசெய்த போதிலும், ஆட்டம் நிறைவடைய 2 நிமி டங்கள் இருக்கும்போது மத்தியின் சார் பாக சுலக்சன் மேலும் ஒரு கோலைப் பதிவுசெய்தார். முடிவில் இமையாணன் மத்தி. 4:1 என்ற கோல்கள் அடிப்ப டையில் வெற்றிபெற்று அடுத்த சுற் றுக்கு முன்னேறியது.

**சென்.லூட்ஸ் - சென்.அன்ரனிஸ்**

தொடர்ந்த இடம்பெற்ற ஆட்டத்தில் முல் லைத்தீவு சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மாந்தை சென். அன்ரனிஸ் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் முழுமையாக ஆதிக்கம் செலுத்திய சென்.லூட்ஸ் அணி 4:0 என்ற கோல்களின் அடிப்படையில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமஸ்கந்தா சம்பியன்

யாழ்ப்பாணம், மே 16
யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 14 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி மோதியது. இந்த ஆட்டத்தில் 3:2 என்ற செற்கணக்கில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணி வெற்றிபெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. மூன்றாமிடத்தை தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அணி பெற்றது.

(ம-422-108)



# மட்ரிட்டின் ஆதரவாளர்கள் படுகொலை; ஐ.எஸ். அமைப்பினரின் வெறிச்செயல்

ரியல் மட்ரிட் அணியின் ரசிகர்கள் 14 பேரை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் சுட்டுக் கொன்றுள்ளனர். ரியல் மட்ரிட், கிரனெடா அணிகளுக்கு இடையே நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தை தொலைக்காட்சியில் பார்ப்பதற்காக ஈராக்கின் பாக்தாத் நகரின் வடக்குப் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த ரியல் மட்ரிட் ரசிகர்களை, துப்பாக்கிகளுடன் விடுதிக்குள் நுழைந்த ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பினர் சரமாரியாக சுட்டுள்ளனர். இதில் 14 பேர் சாவடைந்துள்ளனர். கால்பந்தாட்டம் இஸ்லாமுக்கு எதிரானது என்று ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பினர் கருதியதே இந்தப் படுகொலைக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)

# ஹைதராபாத்துக்கு இலகுவான வெற்றி

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற பஞ்சாப்-ஹைதராபாத் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 7 இலக்குகளால் வெற்றிபெற்றது ஹைதராபாத்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்பத்திலிருந்தே அடித்தாட ஆரம்பித்தார் அம்லா. ஆனால் மறுமுனையில் 6 ஓட்டங்களுடன் முரளி விஜய்யின் இன்னிங்ஸ் ரகுமானால் முடிவுக்கு வந்தது. சஹா, அம்லா இணை சிறிது நேரம் தாக்குப்பிடிக்க மேலதிக இலக்கை இழக்காமல் 50 ஓட்டங்களை எட்டியது பஞ்சாப். 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சஹா. மறுமுனையில் 30 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் அம்லா. அரைச்சதம் கடந்ததும் அம்லாவின் அதிரடி இருமடங்கு அதிகரித்தது. குர்கீரட் சிங்கும் சராசரியை ஏற்றங்காண வைக்குமளவுக்கு அடித்தாடினார். ரகுமான், நெக்ரா, புவனேஸ்குமார் என்று தொடர்ந்து மிரட்டிவரும் இவர்களால் அம்லாவை இருக்கைக்குத் திருப்ப முடியவில்லை. ஹைதராபாத்தின் வியூகங்களை சாதாரணமாக முறியடித்து சதத்தை நெருங்கிக் கொண்டிருந்தார். குர்கீரட் சிங் ஆட்டமிழக்க களத்தில் மில்லர். மில்லரின் அதிரடி நேற்றுத்தான் ஆரம்பமானது. தொடரைவிட்டுப் பஞ்சாப் வெளியேறிய பின்பு அவர் அதிரடி காட்டியென்ன காட்டாமல் விட்டாலென்ன. 96 ஓட்டங்களுடன் அம்லாவை ஆட்டமிழக்கச் செய்தார் புவனேஸ்குமார். 9 பந்துகளில் 20 ஓட்டங்களைக் குவித்தார் மில்லர். முடிவில் பஞ்சாப் 179-4.

பந்துவீச்சில் ஹைதராபாத் சார்பாக புவனேஸ்குமார் 2 இலக்குகளையும், ரகுமான், ஹென்றிக்ஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஹைதராபாத்துக்கு வழக்கம்போல அடித்தளத்தைப் பலமாக அமைத்தார் வோர்ணர். தவானும் சுமாரான பங்களிப்பை வழங்க இலக்குச் சரிவின்றி ஐம்பது ஓட்டங்களை எட்டியது ஹைதராபாத். பவர் பிளே முடிவில் அந்த அணி 55-0 என்றிருந்தது. 25 ஓட்டங்களுடன் ரண்அவுட் ஆனார் தவான். 38 பந்துகளில் அரைச்சதம் கடந்த வோர்ணரை 52 ஓட்டங்களுடன் இருக்கைக்குத் திருப்பினார் அக்சர் பட்டேல். இணைந்தனர் கூடாவும் யுவராஜும். அடிக்கொரு தடவை சிக்சர்களை விளாசினார் யுவராஜ். முன்வரிசையால் வீணடிக்கப்பட்ட பந்துகளை மத்திய வரிசையில் அவர் சரிசெய்தார். இலக்கை எட்டும் படியாகச் சென்றுகொண்டிருந்தார் கூடா. இந்த இணைப்பாட்டம் நீடிக்க பஞ்சாப்பின் வெற்றியை சந்தேகக் கண்கொண்டு பார்க்க வேண்டியதாயிருந்தது. 34 ஓட்டங்களுடன் கூடா ஆட்டமிழந்தாலும் தொடர்ந்தும் நிலைத்து நின்று ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் யுவராஜ். அவர் 24 பந்துகளில் 42 ஓட்டங்களைக் குவித்திருந்தார்.

பந்துவீச்சில் பஞ்சாப்பின் சார்பாக சன்டீப் சர்மா, அக்சர் பட்டேல் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். (ம)





யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான பெண்களுக்கான ஹொக்கித் தொடரில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி 2:1 என்ற கோல் கணக்கில் சங்கானைப் பிரதேச செயலக அணியை வீழ்த்தி கிண்ணம் வென்றது. (ம-108-422)

# அச்சுவேலி மத்தி. சம்பியன்

யாழ்ப்பாணம், மே 16
யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 18 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் அச்சுவேலி மத்திய கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் அச்சுவேலி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மட்டுவில் மகா வித்தியாலய அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தின் முதலாவது செற்றில் மட்டுவில் மகா வித்தியாலய அணி 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. இரண்டாவது செற்றில் அச்சுவேலி மத்திய கல்லூரி அணி 25:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற ஆட்டம் 1:1 என்று சமநிலையானது. கிண்ணத்தை தீர்மானிக்கும் மூன்றாவது செற்றில் அச்சுவேலி மத்திய கல்லூரி



25:18 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றிபெற முடிவில் அந்த அணி 2:1 என்ற செற்கணக்கில் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. மூன்றாமிடத்தை தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலய அணி பெற்றது.

(ம-108-422)

## இன்றைய மோதல்கள்

கரணவாய், மே 16
வடமராட்சி கால்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடர், குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகமும், மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

(ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரியோ ஒலிம்பிக் தொடர்களில் ரஷ்யாவை அனுமதிக்க வேண்டும்

### ரஷ்ய அமைச்சர் மன்றாட்டம்

ஊக்கமருந்துகளைப் பயன்படுத்திய ரஷ்ய தடகள வீரர்களை, தமது ஊழலுக்கெதிரான கட்டமைப்புக்களால் இனங்காணப்படாதமைக்கு மன்னிப்பு கேட்டுள்ள ரஷ்ய விளையாட்டுத்துறை அமைச்சர் விட்டலி முற்கோ, ரியோ ஒலிம்பிக்கில் ரஷ்யாவை அனுமதிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த சில வருடங்களாக நடைபெற்ற சர்வதேச தடகளத் தொடர்களில் ரஷ்ய வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் ஊக்கமருந்தை உபயோகித்தமை வெளிச்சத்துக்கு கொண்டுவரப்பட்டது. ஒவ்வொரு தொடர்களிலும் ரஷ்யாவைப் பிரதிநிதித்துவம் செய்தவர்களில் 90 சத வீதமானவர்கள் ஊக்கமருந்தைப் பயன்படுத்தியதாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அரசின் அனுமதி மற்றும் ஆதரவு அல்லாமல் இவ்வாறு பெரும் தொகையானவர்கள் ஊக்கமருந்தை பயன்படுத்துவது சாத்தியமல்ல. எனவே இனிவரும் தொடர்களில் ரஷ்யாவை களமிறக்கக்கூடாது என்று எதிர்ப்புக்கள் வலுத்தன. இதனால் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடரில் ரஷ்யா களமிறங்குவது சந்தேகமாகியுள்ள நிலையிலேயே அந்த நாட்டின் விளையாட்டுத்துறை அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஊக்கமருந்தை தடுக்கும் கட்டமைப்புக்கள் அதனைப் பயன்படுத்தியவர்களை இனங்காணப்படாதமை எமது தரப்பில் உள்ள மிகப் பெரும் தவறு. இதை நான் ஏற்றுக் கொள்ளாமலில்லை. ஆனால் அதற்காக நடைபெறவுள்ள ரியோ ஒலிம்பிக்கில் ரஷ்யாவுக்கு தடை விதிப்பது பொருத்தமாக அமையாது. நேர்மையான வீரர்கள் ஒருபோதும் தண்டனைக்கு உள்ளாக்கப்படக் கூடாது- என்றார். (ம)

# பிளே ஓவ் வாய்ப்பை தக்கவைத்தது மும்பை

### பாண்டியாவால் கிடைத்த வெற்றி



ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற மும்பை - டெல்லி அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 80 ஓட்டங்களால் வெற்றிபெற்றது மும்பை.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. மும்பையில் ஓர் மாற்றம் செய்யப்புட்டிருந்தது. கடந்த ஆட்டத்தில் ஆரம்ப வீரராக களமிறங்கிய உம்குட் சந்த் நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக குப்ரில் சேர்க்கப்பட்டிருந்தார். ஆரம்ப வீரர்களாக ரோகித் மற்றும் குப்ரில். இணைப்பாட்டம் நிலைபெற்றது. ஆனால் அதிரடி என்பது இல்லை. பவர் பிளே முடிவில் மும்பை 45-0. ரோகித்தை வெளியேற்றினார் மிஸ்ரா. ஆபத்து அகன்று விட்டது என்று எண்ணிய போதிலும் குருனல் பாண்டியாவின் வடிவில் டெல்லிக்கு பேரிடி காத்திருந்தது. ஆடுகளத்துக்கு ஏற்ப தன்னைத் தயார்ப்படுத்தல், பந்துகளைப் பழக்கப்படுத்தல் போன்ற படிமுறைகள் இல்லாமல் முதல் பந்திலிருந்தே வேடிக்கையை ஆரம்பித்தார். குறிப்பாக தாகிரின் பந்துவீச்சை தாராளமாகக் கவனித்தார். 22 பந்துகளில் குருனல் பாண்டியாவின் அரைச்சதம் பதிவானது. மறுமுனையில் குப்ரில் தொடர்ந்தும் நிதானித்துக் கொண்டிருந்தார். அரைச்சதம் கடந்த பின்னர் அதிரடியை இரட்டிப்பாக்கினார் குருனல். மும்பையின் ஓட்டங்கள் மூர்க்கத்தனமாக அதிகரித்துக் கொண்டிருந்தன. 86 ஓட்டங்களுடன் குருனலை வெளியேற்றினார் மொறிஸ். இதற்காக அவர் 37 பந்துகளையே எடுத்துக் கொண்டார். இரண்டு ஓட்டங்களால் அரைச்சதத்தை தவறவிட்டார் குப்ரில். பட்லர், ராயிடு கிடைத்த வாய்ப்புக்களைப் பயன்படுத்த முடிவில் மும்பை 206-4.

பதிலுக்குக் களமிறங்கிய டெல்லிக்கு ஆரம்பம் நம்பிக்கை தரும் வகையில் அமையவில்லை. 8 ஓட்டங்களுடன் இரண்டாவது பந்துப்பரிமாற்றத்தில் பவிலியன் திரும்பினார் அகர்வால். நாயரை வெளியேற்றினார் ஹர்பஜன் சிங். ரண்அவுட் செய்யப்பட்டார் சாம்சன். ஓர் முனையில் இலக்குச் சரிவு மறுமுனையில் குயின்டன் டி ஹொக்கின் அதிரடி என்ற வாறாக நகர்ந்தது டெல்லியின் இன்னிங்ஸ். குயின்டனை ஆட்டமிழக்கச் செய்தால் மும்பை வெற்றிபெறும் என்றவாறான ஓர் நிலைப்பாடே ஆட்டத்தில் பிரதிபலித்தது. 40 ஓட்டங்களுடன் குயின்டனை வீழ்த்தினார் குருனல் பாண்டியா. பன்ட், டுமினி இருவரையும் தான் வீசிய 13 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் வீழ்த்தினார் பும்ரா. இறுதி 6 பந்துப் பரிமாற்றங்களில் 102 ஓட்டங்களைப் பெற்றால் டெல்லிக்கு வெற்றி. அரிதிலும், அரிதான வாய்ப்பே டெல்லிக்கு இருந்தது. சீரான இடைவெளியில் இலக்குகள் சரிய முடிவில் 126 ஓட்டங்களில் சுருண்டது டெல்லி.

பந்துவீச்சில் மும்பையின் சார்பாக பும்ரா 3 இலக்குகளையும், குருனல் பாண்டியா 2 இலக்குகளையும், ஹர்பஜன் சிங், வினஸ் குமார் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)

# டக்வேர்த் முறைக்கு பிளெமிங் காட்டம்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் டோனி தலைமையிலான ரைசிங் புனே சூப்பர் ஜெயின்ட்ஸ் அணி தொடர்ந்து திணறி வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்திலும் அந்த அணி கொல்கத்தாவிடம் தோல்வியடைந்தது. இந்தத் தோல்விக்கு டக்வேர்த் லூயிஸ் முறையே காரணம் என்று குறிப்பிட்டுள்ளார் புனேயின் பயிற்சியாளர் பிளெமிங்.

குறித்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய புனே 17.4 பந்துப்பரிமாற்றங்களில் 103-6 என்றிருந்த பொழுது, பலத்த மழை பெய்தது. மழை நீண்ட நேரம் பெய்ததால் நீண்ட நேரம் ஆட்டம் தடைபட்டது. இதனால் டக்வேர்த் லூயிஸ் விதி கடைபிடிக்கப்பட்டது. இதன்படி கொல்கத்தா அணிக்கு 9 பந்துப்பரிமாற்றங்களில் 66 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. ஆட்டம் கைவிடப்படும் என்று எதிர்பார்த்திருக்கையில், இந்த முடிவு புனே அணிக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஏனெனில் ஆடுகளம் பந்துவீச்சிலிருந்து துடுப்பாட்டத்துக்கு மாறியிருந்தது. இதனையடுத்து கொல்கத்தா குறித்த இலக்கை 2 இலக்குகளை இழந்து அடைந்தது.

குறித்த ஆட்டம் தொடர்பாக பிளெமிங் தெரிவிக்கையில், கொல்கத்தா, புனே அணிகளுக்கு இடையே கடைப்பிடிக்கப்பட்ட டக்வேர்த் லூயிஸ் முறையென்பது பயனற்றது. இந்த விதியில் சிக்கிக்கொண்டு விரைவில் தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டோம். நாங்கள் 135 ஓட்டங்கள் அல்லது 140 ஓட்டங்களை எடுத்திருப்போம். 135 தொடக்கம் 140 ஓட்டங்கள் என்பது இந்த ஆடுகளத்தில் சிறந்த பெறுபேறே. ஆடுகளம் பந்து திரும்புவதற்கு அதிக அளவு உதவியதால் சுழற்பந்தை எதிர்த்து விளையாடுவது மிகவும் கடினம். ஆனால், டக் வேர்த் லூயிஸ் மற்றும் மழையினால் ஆட்டம் முடிவுக்கு வந்துள்ளது.- என்றார். (ம)

# சதத்தில் கோக்லி சாதனை




ஐ.பி.எல். தொடரில் ஒரு சீசனில் அதிக சதம் விளாசியவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார் பெங்களூரின் தலைவர் கோக்லி.

குஜராத் அணிக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடை பெற்ற ஆட்டத்தில் சதம் விளாசினார் கோக்லி. இது நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் அவரது மூன்றாவது சதமாகும். இதுவரை நடந்து முடிந்த எட்டு ஐ.பி.எல். தொடர்களில் எந்தவொரு வீரரும் ஒரு சீசனில் மூன்று சதங்களை பதியவில்லை. (ம)

# மீண்டும் மிரட்டினார் செரினா

இத்தாலியின் உரோம் நகரில் நடைபெற்ற ரென்னிஸ் தொடரில் செரினா வில்லியம்ஸ் கிண்ணம் வென்றுள்ளார்.

நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் அமெரிக்காவின் செரினா சக நாட்டைச் சேர்ந்த மேடிசன் கெய்ஸை எதிர் கொண்டார். கடந்த 9 மாதங்களாக (265 நாள்கள்) எந்தவொரு கிண்ணத்தையும் வென்றிராத செரினாவுக்கு, மேடிசன் முதல் செற்றில் கடும் நெருக்கடி கொடுத்தார். இதனால் அந்த செற்றை செரினா 6:5 என்று போராடி வெற்றிபெற வேண்டியதாயிருந்தது. ஆனால் இரண்டாவது செற்றை 6:3 என்று இலகுவாகக் கைப்பற்றிய அவர் 2:0 என்ற நேர் செற் கணக்கில் கிண்ணம் வென்றார். (ம)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.